ஹாஸ்யச் சுரங்கம்

ரா. பார்த்தசாரதி பி. ஏ., பி. எல்.
(பரதன்)

தமிழ்ப்பண்ணை
தியாகராயநகர்—சென்னை

முதற்பதிப்பு
1947 பிப்ரவரி

விலை ரூ. 2-8-0

கபீர் அச்சுக்கூடம்
திருவல்லிக்கேணி

புஸ்தகத்தைப் படிக்கவேண்
மென்றுனை எப்படி
எழுதலாம்? கடிது
நீண்ட. குறள் என்ன
செய்வது. நாட்கணக்கில்,
கொண்டோட்டம், என்றெல்
லாம் வடமொழியிலும்
தமிழ்மொழியிலும் சொல்லி
வந்திருக்கிறோம். இது
பொல்லாதது. அதை விட்டு
விட இன்னும் சிறந்த
நாட்டில் நாம் அறிந்த
தெரியவில்லை. நான்
கூட நான் அறிந்து சொல்லவில்லை.

௧௧. பல்லக்குத் தூக்கி

ஐம்பது வயதுக்கிழவர் ஒருவர்.
பிணம்போல் தேகமுள்ளவர். பருமன்
கொழுத்தவர். பருமன்
கல்லாமலே, அவரை
என்றும் ஏற்றும்
செல்வச் செருக்கில்! நூறு
அவரிடம் வைத்த அன்பு
அன்பு அவரின் என்றும்
பற்றி அப்படியே!

~~கொண்டு ஏற்றிய~~

பருமனைக் கொண்டவர் எழும்
எப்போதும் நன்றிகெட்ட
நிலையில். உண்மை
உண்மையோர் வெளிப்படு
தவறு ~~[illegible]~~ தாங்கும்
எழுந்தது.

[illegible]

[illegible] 27.11.46 [illegible]

ஆசிரியர்

அகவுரை

இந்த 'ரேஷன்' காலத்தில் கூட தமிழில் இலக்கிய விருந்துகளுக்குக் குறைவில்லை. தமிழன்பர்கள் முன்னிலையில் பல சுவைப்பட்ட வித விதமான புத்தகங்களும், நூல்களும் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன.

தமிழர்களுக்கு இலக்கிய விருந்தளிக்கும் இந்தக் கைங்கரியத்தில், முதிர்ந்த எழுத்தாளர்களும், இளம் எழுத்தாளர்களும், போட்டி போட்டுக் கொண்டிருக்கையில், அடியேனும் கூட்டத்தின் பின்னணியில், நம்மாலான கைங்கரியத்தைச் செய்துவிடலாம் என்ற தைரியத்துடன், இந்தத் தொகுதியைச் சமர்ப்பிக்கத் துணிந்திருக்கிறேன். எழுத்துலகில் எனது பூர்வாச்ரம வாசனை இத்துணிவுக்கு ஒரு சிறு காரணமாயினும், பூராவும் நான் குற்றவாளியல்ல. சில மாதங்களுக்கு முன் இவ் வெண்ணத்தைத் தூண்டிய 'கல்கி'யவர்களும், அதை உருவாக்கிக் கொடுக்க முன்வந்த தமிழ்ப்பண்ணை சின்ன அண்ணாமலையவர்களுந் தான் இப் புத்தகத்துக்குப் பொறுப்பாளிகள்.

இந்தச் சிறு முயற்சிக்கு ராஜாஜி வழங்கியிருக்கும் முன்னுரையே பேராசியெனக் கொள்கிறேன்; வாசகர்கள் அதையே மூல நூலாக வைத்துக் கொண்டாலும் எனக்குப் பெருமைதான். அவர் கூறி யிருப்பது போல், புத்தகத்தைப் "படித்துப் பார்த்து விட்டு", ஏற்கனவே இலக்கியப் பெருக்கால் நிறைந்திருக்கும் உங்கள் உள்ளத்தில் இந் நூல் ஓர் ஊசி முனை இடம் பெற்றாலும் திருப்திதான்; இதுவரை வந்திருக்கும் நூல்களால் நிறைந்து நிற்கும் உங்கள் புத்தக அலமாரியில், எங்கேயாவது ஒரு மூலையில் இப்புத்தகம் சிறிது இடம் பெற்றாலும் சரி. அப்புறம் உங்கள் இஷ்டம்.

ரா. பார்த்தசாரதி
(பரதன்)

"யாரோ, இவர் யாரோ?"

இந்தப் புத்தகத்தின் ஆசிரியர் ஸ்ரீரா. பார்த்தசாரதி அவர்கள் "யாரோ இவர் யாரோ" என்று நண்பர்கள் தயவு செய்து தலையைச் சொரிய வேண்டாம்.

நமக்கு மிகவும் அறிமுகமானவர் தான்!

அகில இந்திய ரேடியோ.................

"ஓ! அகில இந்திய ரேடியோவிலிருக்கும் பார்த்த சாரதியா!" என்று நீங்கள் மூக்கின்மேல் விரலை வைத்துக் கொண்டு வேறு ஏதையோ ஞாபகப் படுத்திக் கொள்ள முயற்சிப்பதாகத் தெரிகிறது. அதையும் நானே சொல்லி விடுகிறேன்.

ஸ்ரீ பார்த்தசாரதி அவர்கள் 'பரதன்'—'நைஷ்டிகன்' என்ற பெயரில் எழுதிய கதைகள், கட்டுரைகள் எல்லாம் மிகவும் பிரசித்தியானது.

தமிழ் நாட்டார் படித்துச் சிரிப்பதற்குத் தகுந்தவைகளைத் தாங்கி வருகிறது இந்த ஹாஸ்யச் சுரங்கம். ஸ்ரீ பார்த்த சாரதி அவர்களின் இதயமே ஒரு ஹாஸ்யச் சுரங்கம் தான்!

அந்தச் சுரங்கத்தில் எத்தனையோ அற்புதப் பொருள் கிடைக்கும். அவைகள் ஆனந்தத்துடன் அனுபவிக்கத் தகுந்ததாகவும் இருக்கும்.

ஸ்ரீ பார்த்தசாரதி அவர்களைப்பற்றி நமது வணக்கத்திற்குரிய தலைவர் ராஜாஜி அவர்கள் கூறியிருப்பது நூற்றுக்கு நூறு சரி. ராஜாஜி கூறியதற்குமேல் நான் என்ன கூற முடியும்? கூறுவதற்குத்தான் என்ன இருக்கிறது!

இந்த ஹாஸ்யச் சுரங்கத்தை வெளியிடுவதில் எனக்கு எவ்வளவோ மகிழ்ச்சி; அதிலும் ராஜாஜி முன்னுரையுடன் வருவதில் சந்தோஷம் சொல்லி முடியாது. எல்லாவற்றிற்கும் மேலாக இப் புத்தகத்தை 'கல்கி' அவர்களுக்கு ஆசிரியர் சமர்ப்பணம் செய்திருப்பது ஒரே கொண்டாட்டமும் கும்மாளியுமாக இருக்கிறது. தமிழ் மக்களும் என்னுடன் கைகோத்துக் கொண்டு ஆனந்தமடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

தமிழ்ப்பண்ணை
3—3—1947

சின்ன அண்ணாமலை

நன்றி :

கல்கி, ஆனந்தவிகடன் பத்திரிகை களில் வெளியான சிலவற்றை இத் தொகுதியில் சேர்க்கச் சம்மதித்த தற்கு அப்பத்திரிகைகளின் ஆசிரி யர்களுக்கு நன்றி.

சமர்ப்பணம்

முதலில் என்னைத் தமிழில்

எழுதத்தூண்டிய

கல்கி

அவர்களுக்கு

தலை புராணம்

சுந்தரம் என் தலையில் கை வைக்கத் தொடங்கி இன்று பத்தாவது ஆண்டு நிறைகிறது. இதனால் சுந்தரத்தைப்பற்றி நான் ஏதோ அவதூறு சொல்வதாக எண்ண வேண்டாம். சுந்தரம் அப்படிப்பட்ட ஆசாமி அல்ல. நானாகவே என் தலைப் பொறுப்பை அவனிடம் கட்டி விட்டேன். அத்தகைய பொறுப்பை ஒப்படைப் பவருக்கு, தைரியமும் நம்பிக்கையும் வேண்டும்; அதை ஏற்றுக்கொள்பவருக்கு சாமர்த்தியமும் சாதுரி யமும் வேண்டும். இவ்விரண்டும் படைத்த மகா புருஷன், இவ்வுலகில் ஒருவர் உளரேல் (என் இலக் கணத்தைப் பொருட்படுத்தாதீர்கள்) அவன் சுந்தரமே. இது முக்காலும் உண்மை. ஏன், முக்காலே மூன்று வீசங்கூட உண்மைதான்.

சுந்தரத்திடம் தலையைக் கொடுத்து விட்டு, பாரம் நீங்கி உல்லாசமாக வீட்டிற்கு வந்து சேரும் எண் ணிறந்த பிராணிகளில், அடியேனும் ஒருவன் என்பதை மகிழ்ச்சியுடனும், பெருமையுடனும் ஒப்புக்கொள் கிறேன். தலையில் அவன் கை வைத்தாலே, ஸ்வர்க்க லோகம்தான்; 'க்றிக் க்றிக்' கென்று அவனுடைய 'மிசின்' தலைமேல் மேயும்போது, அது ஒரு அலாதி உணர்ச்சிதான்.

சுந்திரத்திற்கும் எனக்கும்—அதாவது என் தலைக் கும்—பரிச்சயம் ஏற்பட்டுப் பத்து வருஷங்கள் ஆகி

விட்டன என்று சொன்னேனு? இதற்கு முன்னும், பின்னும், இடையிலும் என் தலே எவ்வளவோ பேர்களிடம் அகப்பட்டுத் தப்பியிருக்கிறது. இந்தக் கண்டங்களுக்கெல்லாம் தப்பி, தலேக்கு வந்தது தலேப் போர்வையுடன் விட்டு நான் பிழைத்திருப்பது, என் ஆயுசு கெட்டி என்பதையே குறிப்பதாக எந்தக் குருட்டு ஜோசியனும் சொல்லி விடலாம்.

கட்டுக் குடுமியும் தலேயுமாக சிறு பயலாக விளங்கிய காலத்தில், என்னேப் பிறைக்குடுமி வைத்துச் சிங்காரித்தவன், எங்கள் ஊர் சிங்காரம். பெயரைப் பார்த்து ஏமாறவேண்டாம். 'சிங்காரம்' என்ற அந்தப் பிருகிருதி, புராணங்களிலிருந்து உயிர் பெற்று வந்த ராக்ஷஸன்போல் தோற்ற மளிப்பான். பிப்பாய்த் தகட்டைத் தீட்டி அதற்கு அரிவாள் பிடி ஒன்றை மாட்டி அதைக் கையில் ஏந்திக் கொண்டு, முறுக்கி விட்ட மீசையுடன் அவன் வரும்போதே திகிலெடுக்கும். அவனுடைய ஆயுதம் ஸம்ஹாரம் செய்து ரத்த பலிவாங்கிய பிறகு, மயக்கம் தெளிய இரண்டு மணி நேரமாகும்.

இதற்கடுத்தபடி என் தலேயைக் குத்தகை எடுத்தவன் முத்து. சிங்காரத்துக்கும் இவனுக்கும் மிக வித்தியாசம். இவன் நாடகமேடை 'அயன் ஸ்திரீபார்ட்' மாதிரி இருப்பான். என் தலேயில் குதிரை, கொக்கு, மயில் போன்ற

ஜீவ ஜந்துக்களை இவன் நிர்மாணிக்க முயற்சித்ததை நோக்குங்கால், இவன் ஒரு தோட்ட மேஸ்திரியாக இருந்திருக்க வேண்டும் என்றே எண்ணத்தோன்றியது. இவன் கைத் திறமைக்கு, கையில் தோட்டக் கத்திரியே இவனுக்குத் தகுந்த ஆயுதம் என்ற முடிவுக்கும் வர வேண்டியிருந்தது. ஏனே, நாடகமேடையையும், தோட்ட வேலையையும் அவன் புறக்கணித்து இத் தொழிலில் இறங்கினன் என்பது எனக்குப் புரிய வில்லை. அது என் தலை எழுத்து.

இந்த மாதிரி என் மண்டை உருண்டு, உருவாகி, 'பி. ஏ. குடுமி' என்ற கட்டத்திற்கு வந்த காலத்தில், ஒரு நாள் திடீரென என் வாழ்க்கையில் சுந்தரம் தோன்றினன். அவன் எனக்குக் காட்சியளித்த இடம் ஒரு சந்தின் முனையில்; அச்சமயம் அதிர்ஷ்டம் என்னை அவன் ஸலூன் வாசல் வழியாகத் தள்ளிச் சென்றது. சுந்தரம் தன் ஸலூன் கண்ணாடிக் கதவுக்கு முன்னால் நின்றுகொண்டிருந்தான். என்னைப் பார்த்ததும் ஏதோ பல வருஷங்களாக விட்டுப் பிரிந்த நண்பனைக்கண்டது போல், முகமலர்ந்து ஒரு பெரிய கும்பிடு போட்டான். நானும் அதைக் திருப்பிக் கொடுக்காமல் இருக்க முடிய வில்லை. 'வாங்க, ஸார்' என்று அவன் மனப்பூர்வமாக அன்பு நிறைந்த குரலில் கொடுத்த அழைப்பை நான் எப்படி மறுப்பது? என்னை யறியாமலே என் கால்கள் அவன் பக்கம் என்னை இழுத்துச் சென்றன. அன்றுமுதல் அவன் வலையில் நான் சிக்கி விட்டேன்; என் தலையில் அவன் கத்திரியும் சிக்கி விட்டது.



சுந்தரம்தான் என் தலே யழகை முதன் முதலில் கண்டு பிடித்தான். என் தலேயை வெட்டுவதில் அவனுக்கிருந்த உற்சாகமும் ஆனந்தமும் வேறு யாருக்கும் இருக்க முடியாது. கிராப்புக்கு எடுத்த தலே ஒன்றை பிரம்மா சிருஷ்டித்திருந்தால், அதை என் கழுத்தில்தான் வைத்திருக்க வேண்டும் என்று அவன் பிரம்மாவிடம் சந்தேகப்பட்டதுண்டு. என் தலேயின் குணுதிசயங்களேக் கண்டு பிடித்த சுந்தரத்தின் கூரிய புத்திக்கும், தீட்டிய கத்திக்கும் நான் என்னதான் கொடுப்பது—என் தலேயைத் தவிர? அன்று முதல் நான் சுந்தரத்திற்கே தலே வணங்கி, அவன் அடிமை யானேன்.

சென்ற பத்து வருஷங்களில் எத்தனேயோ ராஜ்யங்கள் விழுந்திருக்கின்றன. எத்தனேயோ மன்னர்கள் முடியிழந்திருக்கின்றனர். என் கிராப்பும், சுந்தரத்தின் தொழிலும் மட்டும் வளர்ந்து முன்னேற்ற மடைந்திருக்கின்றன என்பதில் என்ன சந்தேகம்? 'பி. ஏ. குடுமி'யுடன் நான் நுழையும்போது சுந்தரத்தின் தொழிற்சாலே 'சிங்கப்பூர் பார்பர் ஷாப்' என்ற திருநாமத்துடன் விளங்கிற்று. பிறகு அது 'சிங்கப்பூர் ஹேர் கட்டிங் ஸலூன்' என்று அவதரித்தது. சில நாளில் அது 'சிங்கப்பூர் மாடர்ன் ஹேர் கட்டிங் ஸலூன்—புரொப்ரைட்டர் சுந்தரம் பிள்ளே' என்று முன்னேற்ற மடைந்தது. பிறகு (சுந்தரத்தின்) எதிரிகள் சூழ்ச்சியால் சிங்கப்பூர் வீழ்ச்சி யடைந்தபோது 'தி மாடர்ன் ஸலூன்—புரொப்: சுந்தரம்' என்ருயிற்று. இதற்குள் சுந்தரம் சந்திலிருந்து கிளம்பிப் பெரிய வீதியைப் படையெடுத்துக் கடைத்தெருக் கோடிக்கு

வந்துவிட்டான். சில காலத்திற்குள் 'சுந்தரம்ஸ் ஹேர் நர்ஸரி' முளைத்தது. பிறகு அது 'சுந்தரம்ஸ் ப்யூட்டி பார்லர்' ஆக விருத்தியாயிற்று. இரண்டடுக்கு மெத்தைக் கட்டிடத்திற்கு சுந்தரம் நகர்ந்ததும் 'சுந்தரம்ஸ் பார்லர் டிலூக்ஷ்' உதித்தது. பிறகு, பட்டணத்தில். ஷகரில், அந்தப் பெரிய மூன்று மாடிக் கட்டடத்திலிருந்து ஒரு மைலுக்கு அப்பால்கூட தெரியும் பெரிய எலெக்ட்ரிக் விளம்பரம், (விளக்கணைப்பு யுகத்திற்கு முந்தி) 'சுந்தரம்ஸ்' என்ற ஒளியை வீசிக் கண்ணைக் கவர்ந்தது.

ஆம்; சுந்தரம் தன் தொழிலில் பெரிய முதலாளியாகி விட்டான். அவன் ஆதரவில் வேலை செய்யும் கத்திரிகளையும் கத்திகளையும், வைத்துக் கொண்டு ஒரு யுத்த 'டாங்கி' கட்டி விடலாம். அவன் கடைக்குப் போனால் இப்போது தலை வெட்டுவது மட்டுமில்லை; அங்கு காத்திருக்கும் நேரத்தில் டீ, காப்பி அல்லது குளிர்ந்த பானங்கள் அருந்தலாம்; அவன் நிர்மாணித்துள்ள இலவச வாசக சாலையில் பத்திரிகைகள் படிக்கலாம்; 'பிங்பாங்' அல்லது 'பிலியர்ட்ஸ்' ஆடலாம்.

உங்கள் தொண்டை சரியாக இல்லை யென்றால் அங்கு விற்பனைக்கு வைத்திருக்கும் மாத்திரைகளை வாங்கிக் கரைக்கலாம்; அல்லது நீங்கள் காத்திருக்கும் நேரத்தில் தாடி வளர்ந்து விட்டால், ஸேப்டி ரேஸர் பிளேடுகள் வாங்கலாம். ஆம், சகலமான சௌகரியங்களுடனும், நல்ல நாகரிக முறைகளிலும் சுந்தரம் தன் வாடிக்கைக்காரர்களைப் பூரண திருப்தி செய்து அனுப்பக் காத்துக் கொண்டிருக்கிறான்.

* * *

சுந்தரம் ஒரு சிறந்த கலைஞன். அவன் புகழெல்லாம், அவன் கத்தி ஏந்திய வீரன் என்பதற்காகவோ அல்லது கத்திரிபாணியான தொழிலாளி என்பதற்காகவோ அல்ல. அவன் தன் தொழிலை ஓர் அரிய கலையாகவே பாவித்து, அவனை நாடும் பலர் தலைகளிலும் அக்கலையைப் பிரதிபலிக்க வைப்பதில் ஆர்வம் கொண்டான். ஓவியக்காரனுக்கும் சிற்பிக்கும் எப்படிக் கையில் வித்தை இருக்கிறதோ, அதேபோல் சுந்தரத்தின் கையிலும் கத்தி முனையிலும் வித்தை தாண்டவமாடி, அவனிடம் நம்பி வருபவர் தலையில் துள்ளிக் குதித்து விளங்குகிறது. சுந்தரத்தினிடம் ஏதோ ஒரு மந்திர சக்தி—அல்லது மயக்க சக்தி என்று சொல்லவேண்டும்—இருக்கிறது. அவனிடம் போனதும் அவன் தலையைத் தொடுவதற்குள் தூக்கம் நம்மையறியாமல் வந்துவிடுகிறது. பிறகு அவன் தட்டி எழுப்பி வீட்டுக்குப் போகலாம் என்று உத்தரவு கொடுத்ததுந்தான் தூக்கம் தெளியும்.

* * *

இதுதான் சுந்தரத்திற்கும் மற்றவர்களுக்கும் வித்தியாசம். ஒரு சமயம் நான் வெளியூருக்குப் போயிருந்த

போது, அங்கே ஒரு ஸலூனில் தெரியாத்தனமாய் நுழைந்துவிட்டேன். ராவண மீசைப் பேர்வழி ஒருவன் என்னை எதிர்கொண்டு முறைத்த முறைப்பிலேயே என் தலை பஸ்மீகரமாயிருக்க வேண்டும். பலவந்தமாக என்னை இழுத்துச் சுழல் நாற்காலியில் தள்ளி அவன் கத்தியை

என் முகத்துக்குக் கொண்டு வந்ததுமே, என் சுயப் பிரக்ஞை என்னிடம் இல்லை. சற்று நேரத்திற் கெல்லாம், அந்த ஊர் பொற்றாமரைக் குளத்தின் படிக் கட்டுகள் என் தலைமேல் காணப்பட்டன.

'என்ன அப்பா. இப்படி படிப்படியாக வெட்டி இருக்கிறாய்?' என்று ராவணேசுவரனிடம் விண்ணப் பம் செய்துகொண்டேன்.

'இருங்க ஸார். எல்லாம் நமக்குத் தெரியாதா? கடைசியில் பாருங்க!' என்று சவால் விட்டு விட்டு அவன் மீண்டும் தன் கொத்து வேலையில் ஈடுபட்டான். கண்ணை இறுக மூடிக்கொண்டு கடைசிவரையில் பொறுத்திருந்தேன். கடைசியில் கண்ணைத் திறந் தேன். அப்பொழுது எனக்கு ஏற்பட்ட அதிர்ச்சி, அணுகுண்டு அதிர்ச்சியையும் அதிகரித்தது. என் தலை எந்தப் பக்கம் திரும்பி இருக்கிற தென்றே என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. மெல்லக் கையால் தடவிப் பார்த்து மூக்கு கண்ணெல்லாம் இருக்கிற இடத்தைக் கொண்டு என் முகம் எந்தப் பக்கம், தலையின் பின் புறம் எந்தப் பக்கம் என்று கண்டு பிடித்தேன். என் ஆயுளில் அப்பொழுதுதான் எனக்கு இரண்டாந் தட வையாக அழுகை வந்தது. (அதற்கு முன் எனக்கு அழுகை வந்தது, நான் பிறந்தவுடன்.)

'சரியா இருக்குதா இப்போ?' என்று என்னைச் சுழல் நாற்காலியில் ஒரு சுழற்றுச் சுழற்றிவிட்டான். அந்த க்ஷணத்தில் என்னிடம் ராமபாணம் இருந்திருந் தால் அந்த ராவணேசுவரன் மீசையைக் கொய்திருப் பேன். அத்தகைய ஆயுதம் ஒன்றும் என்னிடம் இல் லாததாலும், அந்த ராவணேசுவரன் ஒரு மாஜி குஸ்தி

பயில்வான் என்று அவன் கடையில் மாட்டியிருந்த படங்களிலிருந்து தெரிய வந்ததாலும், அவனைச் சும்மா விட்டேன். அசட்டுச் சிரிப்புடன் 'நீ செய்திருக்கும் வேலை உனக்குச் சரியாக இருந்தால் எனக்கும் சரிதான்' என்று ஒரு சொல்லம்பு மட்டும் அவன்மேல் எய்தேன்.

'உங்க மொவ லெச்சனத்துக்கு சரியாத்தான் சீரா வெட்டி யிருக்கேன்' என்று பரம திருப்தியுடன் சொல்லிக் கொண்டான்.

நான் ரொம்ப பொறுமைசாலி. யார் என்ன சொன்னாலும் சகித்துக் கொள்ளும் சுபாவம் எனக்கு உண்டு. ஆனால் அந்த ராவணேசுவரன் என் முக லக்ஷணத்தைப்பற்றி அவ்வளவு கேவலமாக நினைத்தது, என்னை மட்டுமல்ல, என் இல்லாளையே இழிவுறுத்திய தாக இருந்தது. அப்பொழுது எனக்கு வந்த ஆத்திரத் தில் அவன் கையில் இருந்த கத்தியைப் பிடுங்கி அப் படியே அந்த இடத்திலேயே தற்கொலை செய்து கொண்டிருப்பேன். நல்லவேளையாக அந்த க்ஷணத் தில் அவன் கையில் கத்தியில்லை. மேலும் அந்த அற்பப் பதரை அவ்வாறு அவமதிப்பதால் நமக்குத் தான் நஷ்டம் என்று எண்ணிப் பேசாமல் வந்து விட் டேன். சுந்தரத்தின் மேன்மையான குணங்கள் இன் னும் பன்மடங்கு என் மதிப்பில் ஏறின.

அன்றுமுதல், இனி என் தலை விஷயத்தில் சுந்தரத் தைத் தவிர வேறு யாரையும் நம்புவதில்லை என்று சபதம் செய்துகொண்டேன். ராவணேசுவரன் நிர் மாணித்த பொற்றாமரைப் படிக்கட்டுகளை ஒரு குல் லாய்க்குள் மறைத்துக்கொண்டு அடுத்த வாரமே பட் டணத்திற்குப் புறப்பட்டேன். ஸ்டேஷனிலிருந்து

நேராக சுந்தரத்திடமே போய்ச் சேர்ந்தேன். ஒரு நிமிஷம் திகைத்து நின்றான். நானும் திகைத்து நின்றேன். முதல் அதிர்ச்சி தீர்ந்தவுடன் 'வாங்க ஸார்' என்று வழக்கமான வரவேற்புக் கொடுத்துவிட்டு 'உடம்பு கிடம்பு வாசியா இல்லிங்களா? அடையாளமே புரியலிங்க' என்றான். அதுதான் சுந்தரத்தின் பெருந்தன்மை. வேறு யாராவதாக இருந்தால் 'எந்த முட்டாள் பயல் இந்த மாதிரி தலை வெட்டி யிருக்கிறான்?' என்று தொழிலாளித் தோழர்களை இழிவாகப் பேசி இருப்பான். என் கதியைப் பார்த்து அனுதாபங்கொண்டு நாஸூக்காக அதை விசாரித்தான். ஒரு மணி நேரத்தில் என்னைப் பழைய ஆசாமியாகத் தன் கைத்திறமையால் ஆக்கிய பெருமை சுந்தரத்தையே சாரும்.

அன்றுமுதல், திருப்பதிப் பிரார்த்தனை போல் சுந்தரத்திடம் மாதாந்திரப் பிரார்த்தனை எனக்கு உண்டு. எந்தச் சீமையில் இருந்தாலும் அவனிடம் மாதம் ஒருமுறை யாத்திரை செய்து முடி இறக்கி விட்டுத்தான் போவது.

* * *

உலக விவகாரங்களில் சுந்தரம், அரசியல் வாதிகளையும் வெல்லக்கூடியவன். உலக மகா யுத்தம் நம்பர் 2 வரப்போகிறதென்று பதினைந்து வருஷங்களுக்கு முந்தியே அவனுக்குத் தெரியும். அதனால்தான் சிங்கப்பூரை விட்டு அவன் வந்தது.

செக்கோஸ்லவாகியா ஹிட்லர் வசமானதும் அவனைப்போல் வருந்தியவர் டாக்டர் பெனேஷ் ஒருவர் தான் இருந்திருக்க முடியும்.

"இந்தக் கத்தி பாருங்க. செக்கோஸ்லவாகியா வில் செய்தது. இந்தமாதிரிக் கத்தி நமக்கு இனிமே எப்ப கிடைக்கப் போவுதோ?" என்று கண்ணீர் விடாத குற்றமாகப் பரிதவித்தான்.

"ஹிட்லர் ஐரோப்பாவை ஆக்ரமித்தது எதனுல் ஸார் முடிந்தது? ஹிட்லர் மீசையில் ஒரு பவர் இருக்குது என்று சொல்கிருர்கள் சிலர். அவர் தலையிலிருந்து நெற்றியில் தொங்கும் மயிர்தான் ஹிட்லரின் அதிர்ஷ்ட தேவதை என்கிருர்கள் சிலர். இதெல்லாம் சும்மா கொப்பல்ஸ் கிளப்பிவிட்ட பிரசாரம் ஸார். ஹிட்லர் அதிர்ஷ்டம் அவர் ஹாலோ கிரௌண்ட் ரேஸர்லே தான் ஸார் இருக்குது. அந்த ரேஸர் செய்த 'கிரப்' தொழிற்சாலை இல்லாவிட்டால் ஹிட்லர் இத்தனை நாள் இருந்த இடம் புல் முளைத்திருக்கும்" என்பது சுந்தரத்தின் ராஜீய-ராணுவ ரகசிய தத்துவம். அதில் ஓர் ஆழ்ந்த உண்மை இருக்கிறதென்பதை கொப்பல்ஸ் கூட மறுக்க முடியாது.

* * *

சுந்தரத்திற்கு மேல் நாட்டு விவகாரங்கள் மட்டுமல்ல. நம் நாட்டு நிலைமையிலும் அதிகக் கவலையுண்டு.

"ஊம். இதெல்லாம் நடக்காது ஸார். நம் நாட்டிலே கிராப் வெட்டிக்கிறத்துலே கூட எவ்வளவு வித்தியாசங்

களைப் பாருங்க. இதுலே ஒத்துமை வரட்டும் ஸார் முதலிலே. சுதந்திரம் எல்லாம் தானே கதறிக்கிட்டு வருதா இல்லையா பாருங்க" என்பது அவன் கட்சி. அவன் சொல்லும் முறையில் சுதந்திரம் கதறிக் கொண்டு வரும் என்பதை ஆட்சேபிக்க நான் தயாரா யில்லை.

*   *   *

சுந்தரத்தின் அரசியல் ஞானம் ஒருபுறமிருக்க, சரித்திர ஞானத்தில் அவன் எள்ளளவும் குறைந்தவ னல்ல. எவ்வளவு "ஹிஸ்டரி" எம். ஏக்கள் தலை களை அவன் பார்த்திருக்கமாட்டான்? ஆனால் அவனுக்கு ஒரு சரித்திர ஆராய்ச்சி நிபுணனாக சர்வ கலாசாலைகள் பட்டம் கொடுக்காதது அவன் குற்றமல்ல.

ராவணனுக்கு ஏன் அவ்வளவு தலை கொழுத்துப் போயிற்று? (இந்தப் புராணத்தின் பூர்வாத்தியாயத் தில் என்னை ஹிம்சித்த "ராவண"னைக் குறிப்பிட வில்லை; நிஜ ராவணனை-ராமாயண ராவணனை பற்றித் தான் பிரஸ்தாபம்.) சுந்தரத்தின் பதில் அதற்கு, "ஒரு வனுக்குப் பத்துத்தலை இருந்தால் மண்டை பெருக் காமல் என்ன செய்யும்? சிவனைக் குறித்து ராவணன் ஏன் கடுந்தவம் செய்தான்? ஏன் கைலயங்கிரியைத் தூக்கினான்? அவன் தன் பத்துத் திருமுகங்களையும் வழவழப்பாக வைத்துக்கொள்வதற்கான ஒரு கூரிய ஆயுதத்தைக் கைலாசத்தைக் குடைந்து தேடினான்; அத்தகைய வஜ்ராயுதத்தைக் கடன் கொடுக்கும்படி சிவனைக் கெஞ்சினான்."

ரவிவர்மாப் படங்களிலும், ஸோப்பு காலண்டர் களிலும் பிரத்யக்ஷமாகும் ஸ்ரீ ராமபிரான் ஜடாதாரி

யாக இல்லாமல் அழகிய கிராப்புடன் தரிசனமளித்திருந்தால், ராவணனுடன் அவ்வளவு பெரிய போர் நடந்தே இருக்கவேண்டியதில்லை. அவன் பத்துத் தலைகளும் கழன்று வந்து தேங்காய்கள்போல் ஸ்ரீ ராமன் காலடியில் விழுந்திருக்கும். இது சுந்தர ராமாயணம்.

மகாராஷ்டிர யுத்தங்களைப்பற்றி சுந்தரத்தின் ஆராய்ச்சி மிக ஆச்சரியகரமானது. சிவாஜிக்கும் அவுரங்கசீப்புக்கும் பகை வந்ததன் காரணம் இருவரும் தாடி வளர்த்ததால்தான் என்பது சுந்தரத்தின் முடிவு.

* * *

ஜப்பானியப் படையெடுப்பைப்பற்றி தென்னிந்தியாவில் பரபரப்பு ஒன்று ஏற்பட்டதல்லவா? அப்போது பட்டணத்து ஜனங்கள் அவசரமாகத் தங்கள் கிராமங்களை நினைந்து வெளியேறிக் கொண்டிருந்தார்கள். வழக்கம்போல் நான் சுந்தரத்திடம் போயிருந்தேன். “என்ன சுந்தரம் நீ கூடப் பட்டணத்தை விட்டு ஓடப் போகிறாயா?” என்று விசாரித்தேன். ‘நாம் ஏன் ஸார் ஓடணும்? கத்தி கையிலே இருக்கிற வரைக்கும் நமக்கு என்ன பயம்?’ என்றான் சுந்தரம்.

இரண்டு நாள் கழித்து நான் ஊருக்குத் திரும்பினேன். ரயிலில் கூட்டம் சகிக்க முடியவில்லை. எப்படியோ ஆள்மேல் ஆள் ஏறி ஒரு கம்பார்ட்மெண்டில் தலை ஒரு பக்கமும் கால் ஒரு பக்கமுமாக நுழைந்தேன். நிற்கக்கூட இடமில்லை. அந்த கலாட்டாவிலும், விளக்கணைப்பு இருட்டிலும் ‘வாங்க ஸார்’ என்று ஒரு குரல் எங்கிருந்தோ கிளம்பியதும் திடுக்கிட்டேன்.

ஆமாம்; சுந்தரன்தான் அது! ஒரு மூலையில் இடம் பிடித்து உட்கார்ந்திருந்தவன் எனக்கு இடத்தைக் காலி செய்து கொடுத்துவிட்டு, தான் ஒரு பெட்டிமேல் நகர்ந்து உட்கார்ந்துகொண்டான். சுந்தரத்தின் தாராள மனது அப்பொழுதும் இடம் கொடுத்தது.

'என்ன. சுந்தரமா. நீ எங்கே பயணம்?' என்றேன்.

'சும்மாத்தானுங்க. உடம்பு சுகமில்லை. நம்ம கிராமத்துலே போய்க் கொஞ்சநாள் ரெஷ்டு வாங்கிக் கலாம்னு போறேன்' என்றான்.

சுந்தரத்திற்குக்கூட ஓய்வா? ஆனால் அவனுக் கென்ன? பட்டணத்தில் இருந்தால் என்ன? பட்டிக் காட்டில் இருந்தால் என்ன? கத்தி கையில் இருக்கும் வரை பயம் என்ன?

* * *

நான் சுந்தரத்தைக் கடைசியாகப் பேட்டிகண்டு ஆறு மாதங்கள் ஆகின்றன.

'சினிமாவில் சேரப் போகிறயா?' என்று சிலர் என்னைக் கேட்கிறார்கள்.

'உதய சங்கர் நாட்டிய கோஷ்டியில் நீயும் சேரப் போறயா?' என்று கூட சிலர் கேட்டு விட்டார் கள். என் "கேரா, கிருதா"ப் பிடரியைப் பார்த்து என்று விமோசனம் வருமோ, என்று சுந்தரத் தைக் காண்பேனோ என்று நானும் தவித்துக் கொண் டிருக்கிறேன்.

(பின் குறிப்பு: இதை எழுதி முடிக்கும் சமயத்தில் இதோ போஸ்டில் ஓர் அழைப்பு வந்திருக்கிறது. நூறு ஆயுசு சுந்தரத்திற்கு. சுந்தரம் 'பங்களா' கட்டிக் கிருகப்பிரவேசம் செய்கிறானும். என்னைக் கட்டாயம் வரும்படி அழைத்திருக்கிறான். என் கட்டாயம் எனக்குத் தெரியும். நான் எந்தக் காட்டுக்கானாலும் சரி, போகச் சித்தம்தான். என் தலைமேலிருக்கும் காட்டை சுந்தரத்திடம் ஒப்புவிக்க அழைப்பு வேறு வேண்டுமா? வந்தது வரட்டும். போய்விட்டுத்தான் வருகிறேன். சுந்தரம் கையில் கத்தி இருக்கும் வரையில் எனக்கு என்ன பயம்?)

அத்தையின் குணம்

என் அத்தை அமிர்தம்மாள், என் அறையில் நுழைந்ததும் என்னை யறியாமல் எனக்கு உடல் சிலிர்த்தது. ரங்கூனிலிருந்து திரும்பி வந்த பிறகு அத்தை அமிர்தம்மாளைத் தரிசனம் செய்யும் பாக்கியம் எனக்கு இரண்டொரு முறையே கிட்டிற்று. அதுவும் வேறு பந்துக்கள் வீட்டில்தான். அத்தையைப்பற்றி நான் பராபரியாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அத்தைக்கு வேண்டியவர்களும் வேண்டாதவர்களும் உண்டென்பதைத் தெரிந்து கொண்டேன். அதிலும் வேண்டாதவர்கள் வர்க்கம் அதிகமென்பது தென்பட்டது. இந்த வர்க்கத்தின் எண்ணிக்கை பலம் நாள்தோறும் பெருகி வருவதையும் அறிந்தேன்.

இதற்கு மூல காரணம் அத்தை தன் செல்வத்திலும் செல்வமாகக் கருதிய அவளது ஏக புத்திரிதான் என்பதும் பகிரங்க ரகசியமாக, விஷயமறிந்த வட்டாரங்களில் விளங்கிற்று. அத்தை தன் செல்வப் புத்திரியை மணக்கத் துணிந்தவருக்காகக் காலஞ்சென்ற தன் கணவர் சேர்த்து வைத்துப் போயிருந்த ரொக்கம் அனைத்தையும் தருவதாகச் சொல்லியும், பல பெரிய இடங்களில் வலை வீசியும், தகுந்த மீன் அகப்படாத காரணம், அந்தரங்கம் அறியாத என்னைப் போன்றவர்களுக்கு மர்மமாகவே இருந்தது.

அத்தையின் செல்வப் புதல்வியின் வாழ்க்கைத் துணையாக மறுத்தவர்கள் வழக்கம்போல் கட்டிவிட்ட கதைகளுக்குக் கணக்கில்லை. அத்தையின் பெண் ரதியில்லை என்றார்கள் சில மன்மதன்கள். அமாவாசையையும் அவளையும் ஒரே மூச்சில் உச்சரித்தனர் சில கலைவாணர்கள். மற்றும் சில மாப்பிள்ளை யாகாதவர்கள், அப்பெண்மணியைக் கிளிக்கு ஒப்பிட்டார்கள்,—அவள் மூக்கைப் பார்த்துவிட்டு. வேறு சில சூக்ஷ்ம திருஷ்டிசாலிகளோ, அவளது இரு நேத்திரங்களையும் பங்கீடு கணக்கிட்டு, ஒன்றரைக்குச் சரிக் கட்டினார்கள். அத்தைக்கு மாப்பிள்ளையாக வாய்க்காத மற்றும் சிலர், அத்தையையே கண்டு மிரளுவதாகப் பாசாங்கு செய்தார்கள். அத்தையின் பெண் ரொம்பப் படித்துவிட்டதாகக் கூடச் சிலர் குற்றம் சாட்டினார்கள். அவள் பாட்டினால் அரண்டவர்கள் சிலர். அவள் மகா வாயாடி என்று பயந்தவரும் உண்டு.

இத்தனை வதந்திகளையும் நான் நேரில் ருஜுப் படுத்திக்கொள்ளவோ அறிந்துகொள்ளவோ எனக்குச் சந்தர்ப்பமும் இல்லை; அவகாசமும் இல்லை; அவாவும்

இல்லை. "அத்தை மகள்" என்று ஒரு பெண்தெய்வம் இவ்வுலகில் அவதரித்து, இத்தனை பக்த கோடிகளின் நாமாவளி தோத்திரங்களுக்குப் பாத்திரமாகி யிருக்கிறாளென்ற கதைதான் எனக்குத் தெரியும். இதற்குமேல், நேரில் அந்தப் பிரகிருதியைத் தரிசிக்கவோ, வேறு எவ்வித சிரத்தை காட்டவோ நான் யத்தனிக்கவில்லை.

அத்தை அன்று திடும்பிரவேசமாக என் அறை மேல் தனிப்படை யெடுக்கத் தொடங்கவே எனக்குத் திகில் ஏற்பட்டதில் ஆச்சரியமில்லை.

நானோ ஓர் ஏழை குமாஸ்தா. ஏதோ கிருஷ்ண ராமாவென்று, தனிக் காலட்சேபம் நடத்தித் திருப்தியாக ஜீவித்து வந்தேன். புயல்போல் அன்று அத்தை என் அறையில் நுழைந்ததும், இத்தனை நாள் எனக்கு நேராத ஆபத்தை நினைத்து அஞ்சினேன், தைரியத்தைக் கைவிடாமல், அசட்டுச் சிரிப்புப் படுதாவுக்குள் என் பயத்தை மறைத்துக் கொண்டு, அத்தை முன்னிலையில் அஞ்சாமல் நின்றேன்.

"என்ன அத்தை. அத்தி பூத்தாப்போல் எங்கே இப்படி?" என்ற கேள்வியையும் போட்டு வைத்தேன்.

"உன்னைத் தேடிக் கொண்டுதான் ஒரு அவசர ஜோலியாக வந்தேன். நினைத்து நினைத்துப் பார்த்தேன். உன்னைப்போல் யோக்கியமான, நம்பகமான பையன் வேறு யார் எனக்கு அகப்படப்போகிறான் என்றுதான் வந்தேன்" என்று அத்தை ஆரம்பித்ததும் என் ஸப்த நாடியும் ஒடுங்கிவிட்டது. தலை கிறுகிறுத்தது; உள்ளம் உதைத்துக் கொண்டது. ஹிருதயம் துடித்தது. என்ன செய்வது. வந்தது வரட்டும் என்று, மிஞ்சியிருந்த

தைரியத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு சொற்களை நெஞ்சிலிருந்து உதிர்த்தேன்.

"என்ன அத்தை. திடீரென்று, ஏழை என்மேல் உனக்கு இப்படி கடாக்ஷம் பிறக்கக் காரணம் என்னவோ?" என்று மனதில் நினைத்ததை ஓரிரண்டு வார்த்தைகளில் மழுப்பினேன்.

அத்தை கையில் ஒரு சிறிய பெட்டி இருப்பது அப்பொழுதுதான் என் கண்ணுக்குப் புலப்பட்டது. அதை எடுத்து மேஜைமேல் வைத்தாள். சாவியை எடுத்து மெல்லத் திறந்தாள். ஆ! என்ன ஆச்சரியம். என் கனவிலும் நான் கண்டிராத காட்சி! பச்சை நோட்டுகள் கட்டுக் கட்டாக வெளியே வந்தன. அவற்றை எடுத்தாள். என் கையில் பத்திரமாக வைத்தாள்.

"இதைப் பாரு. அவர் வைத்துப்போன ஆஸ்தியில் பாதி கடன் கொடுத்துப் போய்விட்டது. பாதி ரங்கூனில் ஜப்பான்காரன் வந்து கொண்டுபோய்விட்டான். கொடுத்திருந்த இடம் ஒன்றிலிருந்து இந்தப் பணம் இப்போதுதான் வந்தது. இதுவாகிலும் என் குழந்தைக்கு இருக்கட்டும். எனக்கு இந்த ஊரில் நம்பிக்கையான ஒருவரையும் தெரியாது. நீ பெரிய கம்பெனியில் வேலையாக இருக்கிறாய். நீ யோக்கியமான பையன் என்று அவர் எப்பொழுதும் சொல்லிக்கொண்டிருப்பார். அதனால் உன்னிடமே இதைக் கொடுத்து வைத்திருந்தால், நீ பாங்கியிலோ, பத்திரமான இடத்திலோ வைத்திருப்பாய். குழந்தை கலியாணத்தின் போது திருப்பிக் கொடு போதும்" என்று அத்தை சொன்னதும் எனக்குப் பாதி உயிர் வந்தது. இந்தப்

பணத்தை மட்டும்தானே என்னிடம் ஒப்புவிக்க வந்தாள் என்ற சந்தோஷம் ஒரு பக்கம்.

"ஆமாம். இதில் எத்தனை இருக்கிறது?" என்றேன்.

"பத்தாயிரமும் சொச்சமும் இருக்கும்" என்றாள் அத்தை.

"ஐயோ அத்தை. இத்தனை ரூபாயை நான் எங்கே வைத்துக் காப்பாற்றுவேன். நான் ஏழை குமாஸ்தா..." என்று ஆரம்பிப்பதற்குள் அத்தை மறித்து, "நான் உன்னைத்தான் நம்பிக் கொடுக்க முடியும். எனக்கு வேறு யார் இருக்கிறார்கள். நீ பிள்ளைமாதிரி எனக்கு" என்று சொன்னதும் எனக்கே கண்ணில் தண்ணீர் வந்துவிட்டது.

"நீ என்ன செய்வாயோ தெரியாது. உனக்கு நல்ல பாங்கிகளைத் தெரியும், பெரிய மனிதர்களையும் தெரிந்திருக்குமே. நம்பகமான இடத்தில் கொடுத்து வைத்துவை" என்று சொல்லி, என்னை எப்படியோ அவள் பொக்கிஷதாராக்கிவிட்டு வெளியேறிவிட்டாள்.

அத்தனை பணத்தைக் கண்ட திகைப்பு ஆறுவதற்கு எனக்கு அரைமணி நேரம் பிடித்தது.

"இல்லாத இந்த வம்பு நமக்கெதற்கு?" என்று எனக்கு அன்று இரவு முழுவதும் தூக்கம் வரவில்லை. பணப்பெட்டியைத் தலைமாட்டின் கீழ் வைத்துக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, தூங்காமல் அன்றிரவு காவல் காத்தேன். பொழுது விடிவதற்குள் ஒரு யோசனை தோன்றிற்று. அந்த அரைவிழி தூக்கத்தில், என் நண்பன் நாகசாமி என் மனக் கண்ணில் பட்டான்.

* * *

நாகசாமி என் பால்ய சிநேகிதன். பள்ளிக்கூடத்தில் "கோட்டுப்" பயிற்சி அதிகம் பெற்றவன். ஸ்கூல் பைனல் பரீட்சை தவறியதும் பரீட்சைகளை இனி பகிஷ்காரம் செய்யத் தீர்மானித்து பள்ளிக்கூடத்தி லிருந்து வெளியேறி வியாபாரத் துறையில் புகுந்தான். சிறிய தரகு வியாபாரத்தில் ஆரம்பித்து இப்போது "நாக் அன்டு சாமி" என்று ஒரு பெரிய தரகாலய முதலாளியாக விளங்கினுன். மூன்று மெத்தைக் கட்டிடத்தில் காரியாலயம். நாலு ஐந்து பெரிய மோட்டார்களில் புரண்டு கொண்டிருந்தான். ஊருக்கு வெளிப்புறத்தில் ஒரு பெரிய தோட்டம், அதனிடையே பங்களா, அவற்றில் வேட்டைநாய், வேலைக்காரர்கள் முதலிய பரிவாரங்கள் பிருதுகள் சூழ "எளிய" ஜீவனம் நடத்திவந்தான். என்னைப்போல் படித்த முட்டாளுக்கும், அவனைப்போல் படிக்காத புத்திசாலிக்கும் உள்ள வித்தியாசத்தைக்கண்டு நான் அடிக்கடி வியப்பதுண்டு.

ஆனுல், இவ்வளவு செல்வத்தில் உழன்றும் அவனுக்கு என்னிடம் பழைய விசுவாசம் விடவில்லை. எந்த ஆபத்து சம்பத்துக்கும் நானும் அவனிடம்தான் போவது.

அத்தையின் ஐசுவரிய பாரம் என்னை நாகசாமியிடம் தூண்டிற்று. அந்த பாரத்தைத் தூக்கிக்கொண்டு அவன் காரியாலயத்திற்கு மறுநாள் காலையிலேயே விரைந்து சென்றேன்.

* * *

திருப்பதி மலை ஏறிச் செல்வதுபோல் மூன்று மாடிகள் ஏறி நாகசாமியின் கோட்டை வாயிலை

அடைந்தேன். வழக்கம்போல் துவாரபாலகன் ஒருவன் என் முன்னேற்றத்தைத் தடைசெய்து வழி மறித்தான். என் பெயரைச் சீட்டில் எழுதிக் கொடுத்தேன். அதை உள்ளே எடுத்து சென்றான். உள்ளிருந்து ஒரு கம்பீரக் குரல், "வரச்சொல், வரச்சொல்" என்று கேட்டது. உடனே துவாரபாலகன் ஓடிவந்து கதவைத் திறந்து வெகு மரியாதையாக வழி காண்பித்தான்.

ஒரு பெரிய அறையில் ஒரு பெரிய மேஜை. நாலைந்து சிறிய மேஜைகளால் சூழப்பட்டிருந்தது. பெரிய மேஜை சிறிய மேஜை எல்லாவற்றின்மேலும் அவற்றின்பின் ஒளிந்துகொண்டிருக்கும் ஆசாமிகளைப் பாதுகாப்பதுபோல் பல காகிதக் கட்டுகளும், இடையிடையே எதிர்ப்புப் பீரங்கிகள்போல் டெலிபோன்களும் ஆரோகணம் செய்யப்பட்டிருந்தன. பெரிய மேஜையில் இந்தத் தற்காப்பு முஸ்தீப்புகள் இன்னும் அதிக பலமாக இருந்தன. பெரிய மேஜைக்குப் பின்னிருந்து "வா அப்பா, வா வா...ஹலோ யெஸ் - பதினாயிரம் - ஆமாம்." என்று நாகசாமி குரல் கேட்டதும், எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. என் கையில், பெட்டியிலிருந்த தொகை அவனுக்கு எப்படித் தெரிந்தது? "எழுபத்தையாயிரம் - இல்லை - ஒரு லக்ஷம்" என்று மேலே அவன் அடுக்கிக்கொண்டு போனதும் தான் டெலிபோனில் பேசுவது தெரிந்தது. உட்காரு... (நடுவில் டெலிபோனில்) ஹலோ. துணி கீழே விழுந்திருக்குது" என்றதும் சுற்றுமுற்றும் கீழே பார்த்தேன். என் துணி ஒன்றும் கீழே விழவில்லை. விழித்தேன்.

"உட்காரப்பா...(நடுவில் டெலிபோனில்) ஹலோ. பஞ்சு பறக்கிறது...நூல் ரொம்ப கனமாகத்தானிருக்கிறது" என்றதும் எனக்கு ஒன்றும் புரியவில்லை. பஞ்சு பறக்கத்தான் செய்யும், காற்றில் விட்டால்...ஆனால் அதற்காக நூல் கனக்கவேண்டிய அவசியமில்லையே என்று அதிசயப்பட்டேன். அதற்குள் நாகசாமி அவசரமாக "ஊம்...சொல் அப்பா. சொல்லு. என்ன விசேஷம்...? (டெலிபோனில்) ஹலோ...இரும்பு தடால்னு விழுந்துடுத்து...ஊம்...ஏறினாலும் ஏறும்..." என்றான்...

பலத்த காயமோ என்னமோ? இரும்பு தடால் என்று விழுந்தால் கால் முறியாமல் இருக்குமா? யாருக்கு என்ன நேரிட்டது என்று நான் கவலைகொண்டேன். விவரம் விசாரிப்பதற்குள், நாகசாமியின் நாலா பக்கங்களிலிருந்தும், கோயில் ஹாரத்தி மணிகள்போல், டெலிபோன் மணிகள் ஒலித்தன. வலதுகரத்தில் ஒரு டெலிபோன் குழாய், இடது கரத்தில் மற்றொரு டெலிபோன் குழாயையும் ஏந்திய வண்ணமாகவும், எதிரே மேஜையின்மேல் இரண்டு டெலிபோன் குழாய்களையும் வைத்து, நாகசாமி பகவான் சில விநாடிகள் காட்சியளித்தார். ஒரு டெலிபோன் குழாய் மூலமாகக் கேவலம் இருபத்தையாயிரத்தை ஓரிடத்திலிருந்து இன்னொரிடத்திற்கு மாற்றினான்; மற்றொரு குழாய் மூலமாக ஒரு "ல"கரத்தை

இந்தப் பக்கம் தள்ளினுன். இடையில் மேஜைமேல் இருந்த இரண்டு டெலிபோன் குழாய்களில் வந்த புள்ளிக் கணக்குகளைக் குறித்துவைத்துக்கொண்டான். இடை இடையே என்னையும் கொஞ்சம் கவனித்தான்.

"ஊம். சொல்லு. என்ன விசேஷம்" என்று அவன் கொஞ்சம் எனக்கு இடம் கொடுத்ததும், நான் வந்த காரியத்தைச்சொல்ல ஆரம்பிப்பேன். அதற்குள் டெலிபோன் மணி அடிக்கும். மறுபடி ஒரு ஐந்தாறு லக்ஷத்தைப் பைஸல் செய்துவிட்டு, சர்க்கரைக்கு வந்த கிராக்கி, கொப்பரைக்கு வந்த கதி, தேங்காய் நாருக்கு வந்த மணம், இந்தமாதிரி பல அதிமுக்கிய சாமான்களின் நிலவரங்களை யார் யாருக்கோ டெலிபோன் மூலம் ஒலிபரப்பினுன்...பார்த்தேன். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

"சும்மா சொல். என் தொழில் இப்படித்தானப்பா (டெலிபோனில்) ஹலோ...ஆமாம் மின்சாரம் தூக்கலாகத்தானிருக்கிறது...கம்பிகள் கிடைப்பதில்லை. பிரெஞ்சு ஆணி தலை தூக்கி யிருக்கிறது...ரப்பர் கொஞ்சம் இழுப்புத்தான்...காப்பி ரொம்ப ஸ்ட்ராங்...டீ தான் கொஞ்சம், வீக்"...(நடுநடுவே என்னிடம்)... "ஊம் நீ சும்மா சொல்லு" என்று என்னை உற்சாகப் படுத்தினுன். நானும், வேறு வழியில்லையென்று, தேங்காய், கொப்பரை, துணிமணி, இரும்பு, எஃகு, மரம், மட்டை, மின்சாரம் இவைகளுக்கிடையே இடறிக்கொண்டு, "ஸ்ட்ராங்" காப்பியாக இருந்தாலும், "வீக்" டீயாக இருந்தாலும் இலட்சியம் செய்யாமல், சம்பாஷணையில் குதித்து நீந்திக் கரைகண்டேன். நாகசாமி லக்ஷங்களுக்கிடையே, என் அத்தை

யின் பதினாயிரத்தையும் காதில் போட்டுவைத்தேன். அதை நான் காப்பாற்ற எனக்கு சக்தியில்லை என்றும், நாகசாமிதான் அந்தப் பொறுப்பை வகிக்கவேண்டும் என்றும் விண்ணப்பித்துக் கொண்டேன். ஏதாவது அவனுக்குத் தெரிந்த பாங்கில் போட்டு அரைவட்டி வந்தால்கூடப் போதும் என்றேன்.

'போ அப்பா பைத்தியக்காரா. இந்தக் காலத்தில் பாங்கில் போட்டுத் துருப்பிடிக்க வைப்பார்களா பணத்தை? பேசாமல் நல்ல பங்குகளில் போட்டால் உன் அத்தையின் அதிர்ஷ்டம்—அவள் பெண் அதிர்ஷ்டம், ஒரே மாசத்தில்—ஏன் ஒரே மணி நேரத்தில் முதலை ஐந்து பங்கு அதிகரிக்கச் செய்யலாமே......' என்று (டெலிபோன் பின்னணி வாத்திய முழக்கத்துடன், இடை இடையே) சொன்னான். 'எப்படியானாலும் சரி. உன்னிடம் ஒப்புவித்து விடுகிறேன். பிறகு உன் பாடு. பணம் பத்திரமாக இருந்தால் போதும்' என்றேன்.

'சரி......ஒன்று செய்......அக்னி திராவகத்தில் போடேன்......' என்று நாகசாமி சொன்னதும், திடுக்கிட்டு நான் 'எதை, அத்தை பணத்தையா?' என்று கவலையுடன் கேட்டேன்...'ஆமாம். ஏன். அதில் என்ன பயம் உனக்கு...அக்னி திராவகம் இன்று ரொம்ப பலமாக இருக்கிறது' என்றான்.

'ஐயையோ. அக்னி திராவகத்தில் போட்டால் கரியாகிவிடுமே?' என்றேன். 'ஹஹா. பைத்தியக்காரா...திராவகம் என்றால் திராவகத்திலா போடச் சொன்னேன். திராவகம் உற்பத்தி செய்யும் கம்பெனிப் பங்குகள், இப்போது மார்க்கெட்டில் கிடைக்

கிறது. இப்போது வாங்கினல் சீக்கிரத்தில் பங்கு விலைகள் ஏறும். அக்னி திராவகம் இப்போது பொன் போல்—பங்கு விலை ஏறும்பொழுது மறுபடி விற்று விடலாம். அதில் கொள்ளை லாபம்' என்று தன் வியாபார சாஸ்திர முறையை விளக்கினன்.

'அக்னித் திராவகத்தைவிட வேறு கொஞ்சம் அபாயமில்லாதது ஒன்றுமில்லையா ?' என்றேன்.

'இருக்கிறது. இதோ நாளைக்கு 'கொட்டாங்கச்சி கார்ப்பரேஷன்' என்று புது கம்பெனி மிதக்க விடு கிறோம். அதில் போடேன்' என்றான்.

திராவகத்தில் போட்டுக் கரியாக்குவதற்கும் கொட்டாங்கச்சியுடன் மிதக்க விடுவதற்கும் வித்தியா சம் எனக்கு அதிகம் விளங்கவில்லை. ஒன்றுமட்டும் சற்று விளங்க ஆரம்பித்தது. நாகசாமி டெலிபோன் மூலம் பறக்கவிட்ட பஞ்சு மூட்டைகளும், கீழே தள்ளின இரும்புச் சாமான்களும், மற்றும் அவன் குறிப்பிட்ட காப்பி, டீ வகையராக்களும், நிஜமாக அந்தந்தப் பொருள்களைக் குறிப்பிடவில்லை யென்றும், அந்தப் பொருள்களில் வியாபாரம் செய்யும் கம்பெனி பங்குகள்தான் அப்படி அடிபடுகின்றன என்றும் ஒரு வாறு ஊகித்துக்கொண்டேன்.

'சரி. நீ என்னவாயினும் செய். இந்தப் பணத்தை எப்படியாவது காப்பாற்றி, மறுபடி அத்தைக்குப் பத்திரமாக ஒப்படைப்பது உன் பொறுப்பு. உனக்கு எப்படி உசிதம் என்று தோன்றுகிறதோ, அப்படிச் செய்' என்று என் சுமையை அவன் பரந்த மேஜையின்மேல் இறக்கி

விட்டு, அவனிடம் விடைபெற்றுக் கொண்டேன். அவனும், 'பயப்படாதே. கொட்டாங்கச்சியிலேயே போட்டு விடுகிறேன்' என்று வாக்களித்ததும், மன நிம்மதியுடன் வீடு திரும்பினேன். கொட்டாங்கச்சியில் அத்தனை பணத்தையும் போட்டு வைப்பதைவிட நல்ல கெட்டி இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டி வைத்தால் நலமாயிற்றே என்று எனக்கு ஒரு பக்கம் தோன்றிற்று. இருந்தாலும் நாகசாமி புத்திசாதுரியத்தில் என் நம்பிக்கை அன்று பதின் மடங்கு அதிகரித்து விட்டதால் அவன் சொல்வதே சரி என்று நினைத்து ஆறுதலடைந்தேன்.

சிலமாதங்கள் கழிந்தன. அத்தையின் பணத்தைப் பற்றி கவலையற்று இருந்தேன். அதைப்பற்றி மறக்கக் கூட மறந்துவிட்டேன். திடீரென்று ஒருநாள் அத்தை மறுபடி பிரசன்னமானாள். பெண்ணுக்கு இந்த 'ஸீஸ'னிலாவது கலியாணத்தை முடித்துவிடப் போவதாகவும், ஓரிரண்டு வரன்கள் இருப்பதாகவும் சொல்லிவிட்டு, "நான் கொடுத்த அந்தப் பணத்தை திருப்பி வாங்கிக் கொடுக்கிறாயா அப்பா." என்று கேட்டாள். 'ஆகா. நாகசாமியிடம்தான் கொடுத்து வைத்திருக்கிறேன். நாகசாமி என் ஆப்த நண்பன். நம்பகமான பேர்வழி. நாளைக்கே வாங்கிக் கொடுக்கிறேன்' என்று வாக்களித்தேன்.

மறுநாள் நாகசாமியிடம் போனேன். நாகசாமி முகத்தில் முன்பார்த்தபொழுது இருந்த அந்தப் பரபரப்பு, சுறுசுறுப்பு ஒன்றையும் காணோம். அவன் டெலிபோன்கள்கூட உயிரற்று உறங்கின. அவன்

என்னுடன் நிதானமாகப் பேச ஆரம்பித்ததும், ஏதோ சங்கதி இருக்கிறது என்று ஊகித்தேன்.

அன்று அவனுக்கு விடுமுறை நாளோ என்னமோ அவன் என்னுடன் ஊர்க்கதை யெல்லாம் பேச ஆரம் தான். எந்தக் கொட்டகையில் நல்ல சினிமாப்படம் வந்திருக்கிறது, சினிமா நட்சத்திரங்களின் வருமானம், அவர்கள் இல்லற வாழ்க்கை, ஊரில் விலைவாசிகள், காப்பி ஹோட்டல்களின் தற்கால நிலை, இந்தியாவின் எதிர்கால அரசியல் திட்டம், யுத்தப்போக்கு, பெட் ரோல் கிடைக்காத அவஸ்தை, அவன் வீட்டுக்குப் பக்கத்து வீட்டுக்காரர் பெண்ணின் கலியாணம்—இத் தியாதி நடைமுதல் பேச்சில் இறங்கினான். அதில் ஆச்சரியம் என்னவென்றால், நடுவில் ஒரு டெலிபோன் மணியாவது அடிக்கவுமில்லை, அவனும் 'ஹலோ' போடவுமில்லை.

நானும் பார்த்தேன். அத்தையின் பண விவகா ரத்தை எப்போது அவனுக்கு நினைவூட்டுவது என்று சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து நின்றேன். அவன் பக் கத்து வீட்டுப் பெண் கலியாணத்திற்கு வந்ததும், தடாலென்று குதித்தேன். சந்தர்ப்பத்தை முன் குடுமி யால் பிடித்துக்கொண்டு ஆரம்பித்தேன்.

'ஆமாம். இப்போதான் கலியாண ஸீஸனாயிற்றே. என் அத்தை உனக்கு நினைவிருக்குமே......அவள் பெண்ணுக்குக்கூட—' என்று முடிப்பதற்குள், 'எந்த அத்தை ?' என்று நாகசாமி குறுக்கிட்டான்.

'உன்னிடம் பணம் கொடுத்தேனே—அந்தப் பணத்துக்குச் சொந்தக்காரி அத்தை—அவளுக்கு அங்

தப் பணம் வேண்டும்; பெண் கலியாணம் நிச்சயம் செய்யப் போகிறுளாம். அதற்குத்தான் உன்னைக் கேட்க வந்தேன்' என்றேன்.

'என்னையா. கலியாணமா? இந்த வயதிலா... ஹ...ஹ...என்ன பரிகாசம் செய்கிருயே.' என்று இடி இடியென்று சிரிக்கத் தொடங்கிஞன்.

எனக்கு நெஞ்சடைத்தது. நிஜமாகவே பண விவகாரத்தை மறந்து விட்டாஞ? இருந்தாலும் நினை வூட்டிப் பார்ப்போம் என்று இன்னும் தொடர்ந்தேன்.

'உனக்குப் பெண் கொடுக்க யாரும் வரவில்லை இப்போ. என் அத்தை பணம் என்று பதிஞயிரம் கொடுத்தேனே... அதைக்கூட நீ ஏதோ கொட்டாங்கச்சி கார்ப்பரேஷனில் போட்டு ஒட்டிக்கு இரட்டிப்பாக விருத்திசெய்து தருவதாகச் சொன்ஞயே?' என்றேன்.

'எது. கொட்டாங்கச்சி கார்ப்பரேஷன் பங்குகளா? அது இப்போது ரூபாய்க்கு ஒரு அணு வீதம்தானே மதிப்பு...எல்லாம் இந்த முஸோலினியால் வந்த கேடு. அந்தப்பயல் மட்டும் இப்படிக் காலை வாரி விடாமலிருந் திருந்தால், கொட்டாங்கச்சி ஒன்றுக்கு நூருக விற் கும்' என்ருன். முஸோலினிக் கும் கொட்டாங்கச்சிக்கும் இருந்த சம்பந்தம் எனக்குப் புரியவில்லை. நண்பனைக் கேட் டேன்.

'முஸோலினி கணக்கா இன் னும் ஒரு மாதம் தாக்குப் பிடித் திருந்தால், கொட்டாங்கச்சி சும்மா பொன்ஞகப் பொழிந்

திருக்கும். கொட்டாங்கச்சி ஓடுகள், இத்தாலிமீது உபயோகிக்கும் ஒருவித குண்டுக்குத் தேவையாயிருந் தன. முஸோலினி வீழ்ந்து இத்தாலியில் ஒரு பாகம் நம் கைக்கு வரவே கொட்டாங்கச்சிக் குண்டுகளின் தேவை குறைந்துவிட்டது. உடனே கொட்டாங்கச்சி கார்ப்பரேஷன் பங்குகள் தடக்கென்று வீழ்ந்து விட்டன' என்று விஸ்தரித்தான்.

'ஐயையோ, அப்படியானுல் அத்தையின் பணம்...?' என்று பதட்டமாகக் கேட்டேன். 'பங்கு கள் அப்படியே இருக்கின்றன. வேண்டுமானுல் வாங் கிக் கொடு. கேவலம் இந்த பதினுயிரத்திற்கு இப்படி உயிரை விடுகிருயே. எத்தனையோ லக்ஷங்கள் போட் டவர்கள் பேச்சுமூச்சு விடவில்லையே' என்று சமா தானம் கூறினுன்.

லக்ஷக்கணக்கில் போட்டவர்கள் பேச்சுமூச்சற்றுப் போனது எனக்கு ஆச்சரியமாகத் தோன்றவில்லை— 'அந்தப் பணத்தை, பத்திரமாக இருப்பதற்காகத் தானே உன்னிடம் ஒப்படைத்தேன்—என்பணமா யிருந்தாலும் பாதகமில்லை. அத்தையின் பணமா யிற்றே' என்று நயத்தில் இறங்கினேன். 'வாஸ்தவம். பணம் எங்கே போகிறது. பங்குகளாக இருக்கட்டுமே. வேண்டுமானுல் பங்குப் பத்திரங்களை எடுத்துக் கொண்டு போய்க் கொடு' என்ருன். வேறு வழியின்றி ஏதோ ஸ்டாம்பு ஒட்டிய காகிதங்களைப் பெற்றுக் கொண்டு வெளியேறினேன்.

அத்தைக்கு என்ன ஜவாப் சொல்வதென்று எனக் குத் திகில் பிடித்தது. அவள் என்னிடம் நம்பி ஒப் படைத்த பணத்தை எப்படித் திருப்பிக் கொடுப்பது ?

ஐந்து செல்லாக் காசுகூட என்னிடம் கிடையாதே. பத்தாயிரம் ரூபாய்க்கு எங்கு போவது? இப்படி எல்லாம் என் மனம் குழம்பிக் கொண்டிருக்கையில், அத்தை பிரசன்னமானுள். முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு ஒன்றும் பேசத் தோன்ருமல் விழித்தேன்.

'என்ன ஒரு மாதிரி இருக்கிருய்?' என்று ஆரம்பித்தாள் அத்தை.

'ஒன்றுமில்லே...உடம்பு கொஞ்சம் ஒரு மாதிரி இருந்தது, என்றேன்.

உண்மையில் எனக்கு அஸ்தியில் ஜுரம்தான். அந்தப் பாழாய்ப்போன பணத்தைப்பற்றி எந்த க்ஷணம் பேச்சு எடுத்துவிடுவாளோ என்று அஞ்சினேன்.

'உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள் அப்பா' என்று புத்திமதி கூறினுள். பிறகு சற்று மௌனம்; எந்த நேரம் கேள்வி கேட்டுவிடப் போகிருளோ என்று நடுங்கிக் கொண்டிருந்தேன்.

'இதோ பாரு, நீ ஒன்றும் நினைத்துக்கொள்ளாதே. நான் வந்து உன்னைக் கேட்கிறேனே என்று'—இப்படி ஆரம்பித்ததும், கொடுத்ததைக் கேட்பதற்கு இந்தக் கிழவிக்கு என்ன பிரமாத யோசனை என்று நினைத்தேன். மென்று விழுங்கிக்கொண்டு 'அதனுல் என்ன அத்தை. தாராளமாகக் கேள்' என்று சொல்லிவிட்

டேன். தாராளமாகக் கொடுத்ததுபோல், திருப்பிக் கேட்பதில் என்ன? நான் கொடுக்கப்போவதாக இருந்தால்தானே கவலை.

'நான் இப்படி வெட்கத்தை விட்டுக் கேட்கிறேனே என்று ஒன்றும் நினைக்க மாட்டாயே' என்றாள் அத்தை.

'சே. சே. இதில் வெட்கம் என்ன வந்தது. இந்தச் சுதந்திரம்கூட இல்லையா என்ன?' என்று சற்று உற்சாகமாகவே சொன்னேன். 'நமக்கும் வேளை அப்படி வந்திருக்கிறது' என்றதும், அதை நான் முற்றிலும் ஆமோதித்தேன்.

'நானாக எப்படி இந்த விஷயத்தைப்பற்றி பிரஸ்தாபிப்பது என்று சங்கோசப்பட்டேன். சங்கோசப் பட்டால் காரியம் நடக்க வேண்டுமே?' என்றாள்.

'வாஸ்தவம், வாஸ்தவம்' என்று பின்பாட்டுப் பாடினேன்.

'கலியாண மாசமோ ஆயிற்று, முடியப் போகிறது. சட்டுபுட்டென்று ஏதாவது ஏற்பாடு செய்தால் தானே என் பாரம் நீங்கும்' என்று தன் குறையைச் சொல்லிக்கொண்டாள். 'ஆமாம். ஆமாம். காலாகாலத்தில் ஏற்பாடு செய்ய வேண்டியதுதானே' என்றேன். என் நாடி வெகு வேகமாக அடிக்க ஆரம்பித்து விட்டது; என் நேரம் கிட்டிவிட்டது.

'உன்னைத்தான் கடைசியில் நம்பியிருக்கிறேன்' என்றதும் கடைசிக் கட்டத்தை அடைந்துவிட்டதாக எண்ணினேன். என்னை நம்பித்தான் மோசம் போய்

விட்டாளே என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டு மௌனம் சாதித்தேன்.

'ஏதோ உன்னிடம் ஒப்படைத்தால்தான் என் தனத்துக்கு க்ஷேமம் என்று என் மனதில் பட்டது. வேறு யாரும் எனக்கு நம்பிக்கையுமில்லை இஷ்டமுமில்லை' என்று அத்தை சொன்னதும், என் ஹிருதயத்தில் ஈட்டியால் குத்தினதுபோல் இருந்தது. என் கண்ணில் கலகலவென்று தண்ணீர் வந்தது. என்னை யறியாமல், "அத்தை. நான் நம்பிக்கைத் துரோகி—உன் மதிப்புக்குப் பாத்திரனல்ல. என்னை மன்னிப்பாயா?" என்று கெஞ்சினதும், அத்தைக்கும் அழுகை வந்து விட்டது.

'அப்பா. உன்னை என் சொந்தப் பிள்ளைபோல் நினைக்கிறேன். நீ ஒரு நாளும் எனக்குத் துரோகம் செய்ய முடியாது. என் தனத்தை நீதான் காப்பாற்ற வேண்டும்' என்று விம்மி விம்மி அழுதாள்.

மேலும் சொல்லிக் கொண்டேபோனால் அத்தையின் கண்ணீரும் எவ்வளவு கலம் செலவழிந்திருக்கும் என்று அளந்து கொட்டவேண்டி வரும். காகிதப் பஞ்ச காலத்தில் வீண் செலவு. சுருக்கமாகவே, நமது சம்பிரதாயப்படி, மங்களகரமாக முடித்து விடுகிறேன்.

என் அத்தை மகள் தனத்துக்கும் எனக்கும் திருமணம் சுருக்கமாகவும், சீக்கிரமாகவுமே நடந்தேறியது. என் நண்பன் நாகசாமி, நேரில் கலியாணத்திற்கு வர முடியாததற்கு மன்னிப்புக் கேட்டுவிட்டு, "உன் விவாகத்துக்கு என் பரிசு" என்று கவர் ஒன்று அனுப்பியிருந்தான். அதில் பதினாயிரம் ரூபாய்க்கு ஒரு செக்

இருந்தது. இந்தப் பதினுயிரம் ரூபாயும், நான் எடுத்த பங்குகளில் வந்த லாபம் என்று குறிப்பிட்டிருந்தான்.

நானும் இப்போது நாகசாமியுடன் சேர்ந்த கூட்டாளியாகத் தொழில் செய்கிறேன் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்தையின் தனம் அப்படி ஒன்றும் சோடை இல்லை. அவள் என்னமோ எனக்கு ரதிதான். பிறர் எது வேண்டுமானுலும் சொல்லியிருக்கட்டும். அவர்களுக்குக் கண்ணில்லை என்றுதான் சொல்வேன். இனி யாராவது ஏதாவது சொன்னுல் அவர்களுக்குப் பல் இராது என்று தைரியமாக உறுதி கூறுகிறேன். அத்தையின் தனம்தான் என் வாழ்க்கையின் செல்வம் என்பதை அப்பட்டமாக எடுத்துரைக்கிறேன்.

மிஸஸ் விசாலம்

'நான் வரவில்லை, அம்மா. ஐந்து மணிக்கு அவர் கச்சேரியிலிருந்து வந்து விடுவார். குழந்தைகள் பள்ளிக்கூடத்திலிருந்து வரும். வீட்டையும், வாசலையும் விட்டுவிட்டு உங்கள் டீ பார்ட்டிக்கு வந்தால்தான் ஆயிற்று என்கிறாயே, எப்படி முடியும்?' என்று விசாலம் சொன்னதும் லீலாவின் முகம் வாடிற்று.

'ஆமாம். உனக்கு எப்பொழுது பார்த்தாலும், உன் வீடும், வீட்டுக்காரரும், குழந்தையும், குட்டியுந்தான். எப்பொழுதும்தான் இவை இருக்கவே இருக்கின்றன. லேடி கபால் சிங், தினம் நம் ஊருக்கு வரப்போகிறாளா? லேடீஸ் ஸோஷல் கிளப்பில்தான் தினம் டீ பார்ட்டி வைக்கிறோமா? என்னமோ, கூப்பிட்டால் பிரமாதமாக பிகு பண்ணிக்கொள்கிறாயே?' என்று லீலா கோபித்துக் கொண்டாள்.

'லீலா, இதோ பாரு. நீ சுயேச்சைப் பிராணி. உனக்கு இதற்கெல்லாம் போய் அனுபவிக்க சுதந்திரம், அவகாசம், அந்தஸ்து எல்லாம் இருக்கிறது. என்னை ஏன் கட்டி இழுக்கிறாய்? எனக்கு வீட்டுப் பொறுப்பு அதிகம் என்று தெரி

யாதா உனக்கு? இதில் எல்லாம் உன்னைப்போல் எனக்கு அவ்வளவு உத்ஸாகம் இல்லை என்பது இத்தனை நாள் என்னுடன் பழகியும், நீ தெரிந்து கொள்ளவில்லையா?' என்று விசாலம் மீண்டும் வாதித்தாள்.

லீலா விடவில்லை.

'சாக்குப் போக்கு சொல்வதில் நீ கெட்டிக்காரி என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் நிஜமாகத்தான் கேட்கிறேன், உனக்கு என்ன அப்படித் தொலையாத தலைப் பொறுப்பு? வாரத்தில் ஒரு நாளாவது நம்முடைய கிளப் கூட்டங்களுக்கும், விருந்துகளுக்கும் வந்தால் குடிமுழுகிப் போகுமா? உன் குழந்தைகளை அம்மா பார்த்துக்கொள்ள மாட்டாளா? உன்னைத்தான் உன் வீட்டுக்காரர் போகவேண்டாம் என்று தடுக்கிறாரா? அதுவும், என்னுடன் நீ வந்தால், அவர் ஒன்றுமே சொல்லமாட்டார்' என்றாள்.

உண்மை என்னவெனில், லீலாவுக்கும் விசாலத்துக்கும் இன்றைய நேற்றைய சிநேகமில்லை. நெடுநாள் நட்பு. இருவரும் அக்கம் பக்கத்து வீட்டில் இருந்தவர்கள். பாவாடை கட்டிக்கொண்ட நாள் முதல் ஒன்றாக வளர்ந்து வந்தவர்கள். ஒரே பள்ளிக்கூடத்தில் குழந்தை வகுப்பிலிருந்து, உயர்தர வகுப்பு வரையில் படித்தவர்கள்.

சிவப்பிரகாச முதலியார் லீலாவை வெகு அருமையுடனும் பெருமையுடனும் வளர்த்து வந்தார். தாயில்லாப் பெண்ணாதலால் அவர் தம் ஒரே புதல்வியிடத்தில் உயிர் வைத்திருந்தார். அவளை நன்றாகப் படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டு வரவேண்டும் என்பது

அவர் எண்ணம். மேலும், சீர்திருத்த சங்கத்தில் ஒரு முக்கியஸ்தர். ஆதலால் தம் பெண்ணைச் சிறு வயதிலேயே கண்டவனுக்கு கட்டிக் கொடுப்பதில்லை என்று உறுதி கொண்டிருந்தார். இதனால் அவருக்கும் அவர் அத்தான் அருணாசல முதலியாருக்கும் மனஸ்தாபம் கூட உண்டு.

'ஆமாம், பெண் பசங்களைப் படிக்க வச்சு என்ன செய்யப் போவுதுங்க? பருவத்திலே கல்யாணம் கட்டி விட்டாத்தான் லச்சனம்' என்று பலமுறை அருணாசல முதலியார் வற்புறுத்தியதுண்டு. அவர் இவ்வாறு லீலாவின் க்ஷேமத்தில் ஆர்வம் கொண்ட காரணத்தை ஆராயப் போனால், அவருடைய மூத்த பையன் முருகேசன்தான் அதற்கு மூலகாரணம் எனத் தெரியும். முருகேசத்துக்கு லீலாவைக் 'கட்டி வைக்கணும்' என்னும் நோக்கம் முதலியாருக்கு ஆதி முதல் - அதாவது, சிவப்பிரகாசம் பாங்கிக் கணக்கில் ஒரு லகரத்திற்கு ரொக்கமாக ஏறியிருக்கிறது என்று அவருக்குத் தம்முடைய அந்தரங்க நாணய நண்பர் நமசிவாயம் காதோடு ரகசியமாகச் சொன்ன நாள்முதல் - உதித்து, துளிர்த்து, கிளைவிட்டு ஊசலாடிக் கொண்டிருந்தது. ஆகவே சிவப்பிரகாசத்தின் ஒரு லகர ஆஸ்திக்கும், மற்றொரு லகர பூஸ்திதிக்கும், வாரிசாக வரப்போகும் லீலாவைத் தம் மருமகளாகக் கொள்வதில் அருணாசலத்திற்கு ஆட்சேபம் இல்லை. அவருடைய ஆட்சேபனை யெல்லாம், லீலா வயது வந்து, கன்னிப் பருவமடைந்து, சுய ஞானம் அடைந்து விடப்போகிறாளே, பிறகு முருகேசத்தின் முகத்தினழகையும், அகத்தினழகையும் கண்டு விட்டால், விவாகத்தைப்பற்றி விபரீத

மான முடிவுக்கு வந்துவிடப் போகிறாளே என்பது தான்.

சிவப்பிரகாச முதலியாரா இதற்கெல்லாம் இடம் கொடுப்பவர்? அவருக்குத் தெரியாதா, அத்தான் அருணாசலத்தின் அந்தரங்க நோக்கம்? தாம் உத்தி யோகத்தில் இருந்து ரிட்டயர் ஆவதற்கு முந்தி அவரு டைய பெரிய துரையே அவருக்குக் 'குள்ள நரி' என்று சர்ட்டிபிக்கேட் கொடுத்திருக்கிறாரே. குள்ள நரிக்குள் கள்ள நரி பாய்ந்து ஏமாற்ற முடியுமா?

சிவப்பிரகாச முதலியார் தாம் நிச்சயித்தபடி லீலாவை நன்றாகப் படிக்க வைத்தார். லீலாவும் புத்தி சாலியானதால் கலாசாலை எல்லையைத் தாண்டி எம். ஏ. பட்டம் கூடப் பெற்றுவிட்டாள். எல்லாம் இருபது வயதுக்குள். லீலாவுக்கு ஒருவிதக் கவலை யின்றி அவளுடைய தகப்பனார் வைத்திருந்தார். படிப்பு முடிந்ததும் அவளுடைய கவனம் எல்லாம் உல்லாச மாகக் காலம் கழிக்கும் வழிகளில் சென்றது. லேடீஸ் ஸோஷல் கிளப்பின் காரியதரிசி அவள்தான். இன் னும், கிளப் மட்டும் அல்லாமல், மற்றப் பெரிய மனு ஷாள் தோட்டவிருந்து, தேநீர் விருந்துகளில் லீலாவின் ஜார்ஜெட் புடவையும், அதன் ஓரத்தில் வைத்துத் தைத்திருக்கும் ஜிகினாவும் மின்னும். உண் மையில் லீலா இல்லாத கச்சேரி, விருந்து, அல்லது கேளிக்கை சோபிப்பதில்லை. துரு துருவென்று இங்கும் அங்கும் ஓடியாடி, எல்லோருக்கும் தன்னுடைய கலகலப்புச் சிரிப்பைத் தாராளமாக வழங்கிக்கொண்டு போவாள். ஆண் பெண் அடங்கலாகப்



'பெரிய மனுஷாள் கோஷ்டி' எனப்படும் வர்க்கத்தில் ஒரு முக்கிய ஸ்தானம் வகித்து வந்தாள். படித்த பெண்ணுதலால் எல்லோருடனும் வித்தியாசமின்றி, கலகலப்பாகப் பேசிப் புழங்குவாள்.

இதனுல், லீலாவைக் கண்டு தங்கள் ஹிருதயங்களைப் பறிகொடுத்தவர்களும், உடைத்துக் கொண்டவர்களும், வாலிபர்களில் மட்டுமல்ல, வாலிபம் (இயற்கையாகவோ, செயற்கையாகவோ) திரும்பிக்கொண்டிருக்கும் ஆடவர்களிலும் பலருண்டு. தன்னிடத்தில் அபாரப் பிரேமை காண்பிப்போரைத் திருணமாகவே லீலா பாவித்தாள். கொஞ்சம் மீறி ஹிருதயத்தைத் திறந்து அவளுடைய மிருதுவான கையில் ஒப்படைப்பதாகச் சொன்னவர்களை (இந்த இனப் புள்ளிகள், சராசரி பத்தில் ஒன்று என்று வைத்துக்கொள்ளலாம்) அவள் பரிகசித்துவிட்டு, கலகலவென்று ஒரு தரம் அந்த மோஹனச் சிரிப்பையும் வீசிவிட்டுப் போய்விடுவாள். அவ்வளவுதான். அந்த அப்பாவிகள் என்ன செய்வதென்று தெரியாமல் தத்தளிப்பார்கள். 'சீ, லீலா இல்லாத இந்த ஜன்மம் எதற்கு?' என்று மனமுடைந்து சமுத்திரத்தில் விழலாம் என்ற தீர்மானம் வரைக்கும் வந்துவிடுவார்கள். சமுத்திரக் கரைக்குப் போவார்கள். அங்கு அடிக்கும் அலைகளையும், நடமாடும் மனித கணங்களையும் பார்த்ததும், பிரபஞ்சம் இன்னும் நடந்து வருகிறது, கடலில் மூழ்கிப் போகவில்லை என்ற ஞாபகம் வரும். சமுத்திரத்தின் காற்றும் சுகமாக முகத்தில் வீசியதும், மூளைக் கொதிப்பும், ஹிருதயப் படபடப்பும் அடங்கிவிடும். 'உலகத்தில் நமக்கு இடம் இருக்கிறது, வேண்டிய இடம் இருக்

கிறது' என்று ஒருவாறு சமாதானப்பட்டு வீடு திரும்பு வார்கள். அடுத்த மாதமோ, அடுத்த வருஷமோ அவர்களுக்குக் கல்யாணம் ஆகிவிடும். அவர்கள் மனைவி லீலா இல்லை என்பது நிச்சயம். அவளுக்குத் தான் இன்னும் கல்யாணம் ஆகவில்லையே.

கல்யாணம் என்ற பேச்சே அவளுக்கு விநோத மாக இருந்தது. 'இதுவரை இருபது வருஷங்கள் இஷ்டம்போல், சுகமாக நாம் இல்லையா? இந்தப் பெண் கள் எதற்காக ஒரு புருஷனைக் கட்டிக்கொண்டு, பிள்ளை குட்டி பெற்றுக்கொண்டு தவிக்கவேண்டும்?' என்று லீலாவுக்குத் தோன்றும். இவ்விஷயத்தில் அவள் விசாலத்தைக் கண்டு பரிதாபப் படாத நாள் கிடையாது. விசாலமும் தன்னைப் போல் இருக்கக் கூடாதா? இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? எப்போதும் அவளும் தன்னுடன் கிளப்புக்கும், சினிமா வுக்கும், விருந்துகளுக்கும் வந்துக்கொண்டிருக்கலா மல்லவா?

ஆனால், விசாலத்தின் தகப்பனார் சேதுராம் தம் பெண்ணைச் சிவப்பிரகாச முதலியாரைப்போல் வளர்க் காததற்கு மூன்று முக்கிய காரணங்கள் இருந்தன:

முதல் காரணம்: அவர் அவ்வளவு சீர்திருத்த மனப்பான்மை வாய்ந்தவரல்ல.

இரண்டாவது: அவர் எல்லாத் தகப்பன்மார் களைப் போல (சிவப்பிரகாசம் தள்ளுபடி) தாம் 'கண் மூடுமுன்' தம் பெண்ணுக்குக் கல்யாணம் செய்து பார்க்க வேண்டும் என்ற ஒரு சகஜமான ஆசை.

மூன்றாவது காரணம்: அவர் சிவப்பிரகாசத் தைப்போல் அவ்வளவு பணக்காரர் அல்ல. ஏதோ

உண்டு உடுக்கப்போதுமான ஊதியம் இருந்தபோதி லும், பெண்ணைக் கலாசாலையில் படிக்க வைக்க அவருடைய பொருளாதார நிலை இடங் கொடுக்க வில்லை. தம்மாலானவரையில், 'பெண் படிக்கிறாளா?' என்று கேட்டால், 'ஆகா. ஆறுவது பாரம் படிக்கிறாள். இங்கிலீஷ் தெரியும்' என்று பிள்ளை வீட்டுக்காரர் களுக்குப் பதில் சொல்லிக் கொள்ளும் அளவுக்கு மட்டும் படிப்பைக் கொடுத்தார். பிறகு கல்யாணமான தும் விசாலத்திற்குப் படிக்க அவகாசம் ஏற்படவில்லை. சந்ததி விருத்தியில் வருஷந் தவறாமல் ஈடுபட்டாள். 'என்ன? முப்பத்து முக்கோடி மக்களை, நாற்பது கோடியாக்குவதில் உன்னாலான கைங்கரியத்தை ஏற் றுக்கொண்டிருக்கிறாயா?' என்று லீலா இடித்துக் காட்ட இடங் கொடுத்தாள். அவளுக்குக் கிட்டத் தட்ட லீலா வயதுதான். மூன்று குழந்தைகள்— இரண்டு பையன்கள், ஒரு பெண்.

சுபாவத்திலும், வளர்ப்பிலும், வாழ்க்கையிலும் இப்படி லீலாவுக்கும் விசாலத்திற்கும் பெரும் வேற் றுமை இருந்தது. ஆகவே, மனப்பான்மையிலும், வேற்றுமை இருந்தது. ஆனால் இருவரும் இன்னும் இணைபிரியாத சிநேகிதர்கள்.

* * *

'ஐயோ பாவம், இந்தக் குடும்பக் கட்டுகளிலிருந்து விசாலத்தை விடுவிக்க வேண்டும்; அவளை வெளியில் இழுத்து வந்து, உலகத்தை விசால மனப்பான்மை யுடன் நம்மைப்போல் பார்க்கச் 'செய்யவேண்டும்' என்று லீலா நினைத்தாள். இந்த நோக்கத்துடன்தான்,

அவள் விசாலத்தை வற்புறுத்தி அடிக்கடி தன்னுடன் அழைத்துச் சென்று உலகத்திற்கு—அதாவது, அவள் புழங்கும் உலகத்திற்கு—அறிமுகம் செய்து வைப்பாள்.

விசாலத்துக்கு லீலாவின் பேரில் இருந்த வாஞ்சையால் அவளுக்காக இப்படிச் சிலசமயம் அவளுடன் வீட்டைவிட்டு வெளியில் போய்க் கேளிக்கையில் கலந்துகொண்டாலும் உள்ளூற மனத்தில், 'ஐயோ, பாவம், இந்த வெகுளி லீலா, உலக அநுபவமே இல்லாத குழந்தையாகவே இருக்கிறாளே. அவள் புத்திசாலித்தனமும், அழகும் இப்படியா வீணாக வேண்டும்? தகுந்த புருஷனிடம் யாரிடமாவது இவற்றை ஒப்படைத்தால் எவ்வளவு சௌக்கியமாக—நம்மைப் போல்—இருக்கலாம்' என்று வருந்துவாள். லீலாவின் மனப்பான்மையை மாற்றித் தன் வழிக்குக் கொண்டு வந்துவிடலாம் என்ற நம்பிக்கை அவளுக்கு. லீலாவுடன் கூடப் போனாலாவது தன் சகவாசத்தால் திருந்தமாட்டாளா என்பது விசாலத்தின் நோக்கம்.

'நீ இன்னும் இப்படி விளையாட்டுப் பெண்ணாகவே பொறுப்பற்று வாழ்க்கை நடத்துவது எனக்குப் பிடிக்கவே இல்லை' என்று பல முறை விசாலம் லீலாவுக்கு உபதேசம் செய்ததுண்டு.

'நீ சுத்தக் கட்டுப்பெட்டி. நீ குடும்பத்தோடு கஷ்டப்படுவது போதாதென்று, வால் அறுந்த நரி போல், என்னையும் பயித்தியமாகச் சொல்லுகிறாய்' என்று லீலா பதிலுக்கு ஏசிக் காட்டுவாள். இப்படி இரு சிநேகிதிகளும் ஒருவர் மனதை ஒருவர் மாற்ற முயன்று வந்தனர்.

அத்தகைய முயற்சிகளில் ஒன்றே ஆரம்பத்தில் சொல்லப்பட்டது. கடைசியில் லீலா கக்ஷிதான் அன்றும் ஜயித்தது. லீலா, அன்று அங்கேயே இருந்து, விசாலத்தின் கணவர் குப்புசாமி வந்ததும், அவரையே நேரில் கேட்டுவிட்டாள். 'என்ன, நீங்கள் விசாலத்தை எப்போதும் கட்டிப்போட்டு வைப்பது? இன்று பாருங்கள். எங்கள் கிளப்புக்கு லேடி கபால் சிங் வருகிறுள். வரவேற்கிறோம். பார்ட்டிக்கு வாவென்றால், உங்கள் பேரில் பழி போடுகிறுள்' என்று குறை கூறினுள்.

குப்புசாமி நல்ல மனிதர். விசாலத்தினிடத்தில் அவருக்கு அபார வாஞ்சையுண்டு. அவள் சிநேகிதி என்றதால் லீலாவிடத்தில் மிகவும் விசுவாசம் வைத்திருந்தார்.

அவருக்கும், தம் மனைவி, லீலாவைப் போல் நவீன நங்கையாக நடமாட வேண்டும் என்ற எண்ணமும் உண்டு. விசாலம் வீட்டோடு வீடாகச் சிறை கிடப்பதை விரும்பவில்லை.

'லீலா கூப்பிடும்போது போய்த்தான் வந்தால் என்ன?' என்று அவர் விசாலத்தைக் கோபித்துக் கொண்டார்.

'ஆமாம், நீங்கள்தான் ரொம்ப லீலாவுக்கு வேண்டியவர்களாக்கும்' என்று விசாலமும் கோபிப்பவள் போல் பாவித்தாள்.

'சரி, என்னைச் சாக்கிட்டு உங்கள் வாக்குவாதம் போதும். கிளம்பு சீக்கிரம், டிரஸ் செய்துகொண்டு' என்று கட்டளையிட்டாள் லீலா. விசாலம் மீண்டும் ஒரு முறை லீலாவின் வலையில் விழுந்தாள்.

அன்று லேடிஸ் ஸோஷல் கிளப் பார்ட்டியில் விசாலம் பாடக்கூடப் பாடினாள். விசேஷ அதிதியான லேடி கபால் சிங் அவள் பாட்டைக் கேட்டு அப்படியே ஆனந்த பரவசமடைந்தாள்.

'யார் இந்தப் பெண்? எவ்வளவு இனிமையான சாரீரம்.' என்று ஆச்சரிய மடைந்தாள்.

உடனே விசாலத்தை அந்த அம்மாளுக்கு லீலா அறிமுகப்படுத்தி வைத்தாள். லேடி கபால் சிங் ஒரு பெரிய கம்பெனி உத்தியோகஸ்தரின் மனைவி. திடீரென்று அவளுக்கு விசாலத்தின்பேரில் விழுந்த அபிமானத்தின் பலனாக, விசாலத்தின் கணவர் குப்புசாமிக்குச் சில மாதங்களுக்குள் ஒரு பெரிய உத்தியோகம் கிடைத்துவிட்டது.

2

மேற்கூறிய சம்பவம் நடந்து மூன்று வருஷங்கள் ஆயின. மிஸஸ் விசாலம் குப்புசாமியின் பெயரும் படமும் பத்திரிகைகளில் வராத நாள் கிடையாது இப்போது. லேடிஸ் ஸோஷல் கிளப்புக்கு இப்போதும் லீலாதான் காரியதரிசி. ஆனால் மிஸஸ் விசாலம் தலைவி. மிஸஸ் விசாலத்தின் தலைமையில், ஏதாவது ஒரு சாக்கிட்டு, ஒரு மாதர் நிகழ்ச்சி நடந்துகொண்டே இருக்கும். மாதர் கூட்டம் மட்டுமல்ல. ஆரம்பப் பள்ளிக்கூடத்திறப்புவிழா முதல், கலாசாலை விளையாட்டுகளில் பரிசளிக்கும் கௌரவம் வரையில் மிஸஸ் விசாலத்தின் பொறுப்புகளாயின. ஊரில் ஒரு புது டாக்கிப் படம் ஆரம்பமாகப் போகிறதா? அது மிஸஸ் விசாலம் குப்புசாமியின் பிரசன்னத்திலும்,ஆதரவிலும்தான் நடக்கும்.

டில்லில் ஒரு மாதர் மகாநாடா? அதற்கு ஸ்ரீமதி விசாலம்தான் தென்னிந்தியப் பிரதிநிதி. கன்னியா குமரியில் ஒரு கொடியேற்று விழாவா? அதற்கும் ஸ்ரீமதி விசாலம்தான். இப்படி ஸ்ரீமதி விசாலம் இல்லாத நிகழ்ச்சி, அவளுடைய படம் வராத பத்திரிகை, கிடையாது. இவ்வாறு பொதுவாழ்வில் ஈடுபட்ட விசாலத்திற்கு இப்பொழுதெல்லாம் வீட்டில் தங்கும் அவகாசம் சிறிதளவே இருந்தது. அந்த அவகாசத்தில்கூட, அவளுக்கு வெளியில் ஏற்பட்டிருக்கும் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக வேண்டிய பிரசங்கம் தயாரித்தல், கடிதங்கள் எழுதுவது முதலிய

சாமக்கிரியைகளுக்குத் தான் பொழுது சரியாக இருந்தது. வீட்டில் குழந்தைகளை முன்போல் கவனிக்க முடிகிறதில்லை. முன்னெல்லாம் பிரேமாவுக்கு (அவள்பெண்ணின் பெயர் இது; பிறந்ததும் வைத்த பெயர், சர்வ சாதாரணமான 'மங்களம்' என்றிருந்தது. சென்ற இரண்டு மூன்று வருஷத்தில் அந்தப்பெயரை இன்னும் நாஸூக்கான 'பிரேமா' என்று மாற்றி வைத்தாள்.) தானே

தலைவாரிப் பின்னி, பூ வைக்கா விட்டால் அன்று தூக்கம் வராது விசாலத்துக்கு. இப்போது அதற்கெல்லாம் பொழுது இல்லாததால் பிரேமாவின் கூந்தல், அவளுடைய பெயரைப்போல் காலத்திற்கேற்ப மாறுதல் அடைந்து, 'பாப்' செய்யப்பட்டு, 'பரட்டை' யாகத் தொங்கிக் கொண்டிருந்தது.

குப்புசாமியோ விசாலத்தை வீட்டில் சந்திப்பது நாளைக்கு ஒரு தரமோ, அல்லது இரண்டு நாளைக்கு ஒருதரமோ? அவர் நல்ல மனிதர் என்று முன்னமேயே நற்சாட்சி கொடுத்திருக்கிறோமே. அதனால் அவர் தம் மனைவியை ஏன், என்ன என்று கேட்பதில்லை. அவளைச் சந்திக்கும் அந்தச் சில நிமிஷங்களில் அவள் ஏதாவது பணம் கேட்டால் கொடுப்பார். அல்லது, இருவரும் தங்கள் தங்கள் 'எங்கேஜ்மெண்டு நோட்டு'ப் புஸ்தகங்களை எடுத்துப் பரிமாறிக்கொள்வார்கள். மிஸ்டர் குப்புசாமியும் இப்பொழுது தம் பதவிக்கு ஏற்றவாறு 'பெரிய மனுஷ்ய' வட்டாரத்தில் கலந்து வந்தார். அவருக்கும் கிளப், 'போக்கர்' சீட்டாட்டம் முதலியன இருந்தன. சிநேகிதர்களும், விருந்துகளும் அதிகரித்தன. சில சமயங்களில், மிஸஸ் குப்புசாமியைப் பிரமுகர்களுக்கு அறிமுகப்படுத்துவதற்காக விசாலத்தை அந்த விருந்துகளுக்கு அழைத்துச் செல்வார்.

விசாலம் பங்களூர் சேலை கட்டுவதை விட்டு, 'ஜார்ஜெட் ஸாரீஸ்'களில் மனதைச் செலுத்த வேண்டியதாயிற்று. கிளப்பிலும், நாகரிக சமுகத்திலும் பெண்மணிகள், 'நேற்று மிஸஸ் விசாலம் உடுத்தி வந்த 'ஸாரி, பிளவுஸ்' மாதிரி உடுத்த ஆரம்பித்தார்கள்.

பத்திரிகைகளில், பாஷன் (Fashion) பத்திகளில் மிஸஸ் விசாலம் ஒரு பிரதான பாத்திரமாக விளங்கினுள்.

விசாலத்தின் மனப்பான்மை அடியோடு மாறி விட்டது. ஆங்கிலத்தில் 'ஸொஸைட்டி பட்டர்ப்ளை' (Society Butterfly) என்று சொல்லப்படும் ஒரு பகட்டான பட்டுப் பூச்சிபோல் மாறியிருந்தாள்.

* * *

விசாலத்தின் அமர்க்களத்தில் லீலாவை அடியோடு மறந்துவிட்டோம். நாம் மட்டுமல்ல. அவள் புழங்கி வந்த உலகமேகூட மறந்தது. அவள் ஜோதி மங்க ஆரம்பித்தது. விசாலத்தின் புதிய ஜொலிப்பில் லீலாவின் மினுக்கு தென்படாமல் போயிற்று. லீலாவை முன்போல் அதிகமாக மதிப்பாரில்லை. அவளுக்காக ஹிருதயத்தைப் பணயம் வைத்துப் பறிகொடுக்கும் ஆத்மாக்கள் குறைந்துவிட்டனர். லீலா என்ற ஒரு பெயர் மட்டுமே இருந்தது. ஆனுல் லீலாவிற்கும் விசாலத்திற்கும் இருந்த நட்புமட்டும் போகவில்லை. விசாலத்தின் புதுப் பிரதாபத்திஞல் லீலா அசூயை அடையவில்லை. அதுமட்டுமல்ல. விசாலத்தை இப் படி முன்னுக்குக் கொண்டுவந்ததற்குக் காரணம் தான் தான் என்று பெருமை வேறு லீலாவுக்கு. ஆகவே, அவர்கள் நட்பு மட்டும் மாறவில்லை.

ஆனுல் லீலாவின் மனதில், நாளடைவில் ஒருவித சங்கையும் ஏற்பட்டது. விசாலம் தன் குழந்தைகளை இப்போது கவனிக்க அவகாசமில்லாமல் போனது லீலாவுக்கு ஒருவித கலக்கத்தைக் கொடுத்தது. விசாலம் அக் குழந்தைகளை அதிகமாகச் சலுகை காட்டி

வளர்த்த வரையில் லீலா அவளைப் பரிகசித்தாள். ஆனால் இப்போது அக்குழந்தைகள் அநாதைகள் போல் வளர்வதைக் கண்டதும் லீலாவுக்கே ஒரு பக்கம் மனம் சற்றுக் கலங்கியது. பல முறைகளில், வழக்கம் போல் லீலா அவள் வீட்டுக்குப் போனபோது விசாலம் வீட்டிலிருப்பதில்லை. அப்போது அக்குழந்தைகள் மேல் இருக்கும் பரிதாபத்தால் அங்கேயே வெகு நேரம் இருந்து, அவர்களுடன் விளையாடிப் பேசிக் குதூகலப்படுத்தி விட்டுப் போவாள். சில சமயங்களில் தானே, அவர்களை அருகில் இருந்து சாப்பிடச் சொல்வாள். தலைவாரி, முகம் கழுவி, நல்ல உடை உடுத்துவாள். இப்படி விசாலத்தின் குழந்தைகளிடத்தில் லீலா காட்டிவந்த வாஞ்சைக்கு முதல் காரணம் என்னவோ, அவர்களை விசாலம் கவனிக்க முடியாமல் போனதும், லீலாவுக்கு அக்குழந்தைகளின் மேல் இருந்த அன்பும்தான். நாளடைவில் இது அவள் மனத்தில் வேறுவிதமான உணர்ச்சிகளை எழுப்பி விட்டது. ஸ்திரீகளுக்கு இயற்கையாயுள்ள ஒரு மனோபாவத்தை கிளப்பியது.

'நமக்கு மட்டும் இந்த மாதிரி குழந்தைகள் மணி மணியாக இருந்தால்...' என்ற எண்ணம் சில முறைகள் அவள் மனத்தில் தோன்றும். இது நாளடைவில் விருத்தியாயிற்று. விசாலத்தின் குழந்தைகளுடன் லீலாவின் அனுதாபம் நிற்கவில்லை. சில சமயம் குப்புசாமி களைப்புடன் வீட்டிற்கு வருவார். அப்பொழுது விசாலம் வீட்டில்

இருக்கமாட்டாள். ஏதாவது மீட்டிங்குக்குப் போயிருப்பாள். அப்போது தற்செயலாக லீலா அங்கு இருக்க நேரிட்டால் லீலாவுக்குக் குப்புசாமி மேலும் அனுதாபம் ஏற்படும்.

'ஐயோ பாவம். இவ்வளவு நல்ல புருஷன் கிடைக்கக் கொடுத்து வைக்கவேண்டும்...நமக்குமட்டும் இப்படி ஒரு புருஷன் இருந்தால்...' என்று எண்ணுவாள்.

உடனே, 'சே, என்ன தப்பான எண்ணம். நாம் தான் கல்யாணமே செய்துகொள்ளப் போவதில்லையே...செய்துகொள்ள வேண்டுமென்றாலும் நமக்கேற்ற புருஷன் யாரிருக்கிறான்...?' என்று அந்த எண்ணத்தை மறக்க முயல்வாள். நாளடைவில் குழந்தைகள், கல்யாணம் என்ற கனவுகள் லீலாவுக்கு அதிகரித்தன....

* * *

மார்கழி மாதம்...விசாலம் ஏதோ ஒரு மாதர் கூட்டத்திற்காக டில்லிக்குப் போக நேர்ந்தது. போகும் போது லீலாவிடம், 'குழந்தைகளையும், வீட்டையும் கொஞ்சம் கவனித்துக் கொள்கிறாயா ?' என்று வழக்கம்போல் சொல்லிவிட்டுப் போனாள். லீலாவுக்கு இது சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. சென்ற ஒரு வருஷமாக அவள் தான் வீட்டை கவனித்துக்கொண்டு வந்தாள்.

விசாலம் ஊருக்குப் போன மறுநாள் குழந்தை பிரேமாவுக்கு பிரமாத ஜுரம் வந்தது. லீலா பிரேமாவின் பக்கத்திலேயே இருந்தாள். அன்று இரவு கண் கொட்டவில்லை. குப்புசாமி என்ன செய்வதென்று

தெரியாமல் இங்குமங்கும் அலேந்தார். டாக்டரை நாலு முறை காரில் கூப்பிட்டுக்கொண்டு வந்தார். ஜுரம் குறைந்தபாடில்லே. லீலாவும் அங்குவிட்டு அசையவில்லே. மூன்று நாளாயிற்று. ஜுரம் கடுமையான நிலேக்கு வந்துவிட்டது. குழந்தை 'அம்மா... அம்மா, இன்னும் வரவில்லே?' என்று அனத்திக் கொண்டே இருந்தது. லீலா, 'நான் இருக்கிறேன் பிரேமா, ஏன் பயப்படுகிருய்?' என்ருள்.

குப்புசாமிக்குத் தாங்கவில்லே. உடனே தந்தியடித்தார் விசாலத்திற்கு. தந்தி போய்ச் சேர்ந்த உடனே கிளம்பிலுைம் அவள் வந்துசேர மூன்று நாள் ஆகும். பிரேமாவின் ஜுரம் ஜன்னியாக மாறிற்று. லீலா அன்ன ஆகாரம்கூட சரியாகச் சாப்பிடாமல் குழந்தை பக்கத்திலிருந்து சிசுருஷை செய்தாள். ஏழாம் நாள்... டாக்டர், 'இன்று இரவு தாண்டிஞல் உங்கள் அதிர்ஷ்டம்' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். சாயங்காலம் மணி நாலு கடியாரத்தில் அடித்தது. குழந்தை மீண்டும், 'அம்மா'வைக் கூப்பிட ஆரம்பித்தாள். குப்புசாமிக்குக் கோபம் ஒருபக்கம், துக்கம் ஒருபக்கம். லீலாமனம் அப்போது படாதபாடு பட்டது. 'பிரேமா எப்படியாவது பிழைக்க வேண்டுமே, சுவாமி' என்று பிரார்த்தித்தாள். ஏனே அவளுக்குக் கவலே. மணி நாலரை...'அம்மா...' மணி ஐந்து...குழந்தைக்கு அம்மாவைக் கூப்பிடச் சக்தியில்லே...வாய்மட்டும் அசைந்தது. மணி ஐந்தரை...வாசலில் கார் நின்றது...யாரோ வந்து படிஏறும் சப்தம்...பிரேமாவின் அரை விழிகள் சற்றுத் திறந்தன.

'அம்மா...வந்து விட்டாளா...?'

விசாலம் ஓடி வந்தாள். ஸ்டேஷனில் டிரைவர் குழந்தையின் நிலையை முன்னரே சொல்லி யிருந்தான்.

'பிரேமா. கண்ணு...இதோ பார்...அம்மா...' என்று கொஞ்சினுள். விசாலத்தின் பழைய உருவம், லீலாவின் கண்ணீர் ததும்பிய கண்களின்முன் மங்கலாகத் தோன்றியது.

'அம்மா என்னை விட்டுப்போகாதே...அம்...' குழந்தை வார்த்தையை முடிக்க அவகாசமில்லை. அதற்குள் யமதூதன் அவளை அவசரமாகக் கூப்பிட்டு போய் விட்டான்...

'ஐயோ, பிரேமா...பாவி நான்...' என்று மூர்ச்சை போட்டு விழுந்தாள் விசாலம்.

(3)

இன்னும் சில வருஷங்கள் கழிந்தன.

'பிரேமா. இங்கே வா, அம்மா. தலைவாரிக் கொண்டு போ' என்றுள் விசாலம்.

'நான்மாட்டேன், போ. நீதான் என்னை விட்டு விட்டுப் போறேன் என்கிறுயே' என்றது ஒரு மூன்று வயதுப் பெண் குரல். 'இல்லை, நான் சும்மா சொன்னேன். நான் உன்னை விட்டுவிட்டு இனிமேல் எங்கேயும் போகமாட்டேன். வா, அம்மா...'

'என்ன, அசடு. மாமி சொன்னுல் கேட்கணும். போ அம்மா, பிரேமா. சமர்த்து...உன் அக்கா பிரேமா இப்படித்தான் படுத்திஞளோ, கேளு'—இந்தக் குரலை நாம் எங்கேயோ முந்தி கேட்டிருக்கிறோம்...ஆம், அது லீலாவின் குரல்தான். 'இப்போது அவள் வெறும் லீலாவல்ல,' மிஸஸ் லீலா பிரபாகர்.' ஆனுல் அதில்

முன் இருந்த அந்தக் கவலையற்ற குஷியும் கலகலப்பும் இல்லை, வாஸ்தவம். இப்பொழுது அதில் தாயின் பிரேமை நிறைந்த அன்பு தொனித்தது.

லீலா கலாசாலைப் பட்டதாரிப் பருவத்தையும் 'சமூகப் பட்டுப்பூச்சி' நிலையையும் கடந்து இப்போது ஐந்து வருஷங்கள் ஆகிவிட்டன. அதுவும், மிஸ்டர் பிரபாகர், பாரிஸ்டர், அவளுடைய ஹிருதயவானத்தில் தோன்றியதிலிருந்து, கல்யாணம், குடும்பம் இவற்றைப் பற்றி அவளுக்கு இருந்த அபிப்பிராயங்கள் ஒரு பெரும் புரட்சியடைந்து மாறிவிட்டன. இப்போது அவளுக்கு வீட்டிலும் குடும்பத்திலும் ஏற்பட்டிருந்த பொறுப்புக்குப் பிரேமாதான் நிரூபணம். பிரேமா லீலாவின் குழந்தைதான். ஆனால் விசாலம்தான் அவளைத் தன் குழந்தைகளுடன் வளர்த்து வந்தாள்.

தன்னுடைய குழந்தை பிரேமாவை இழந்தது முதல், விசாலத்தின் மனம் தத்தளித்து வந்தது. குழந்தையைத் தன்னுடைய அஜாக்கிரதையால்தான் கொன்றுவிட்டதாகத் தன்னைத்தானே குற்றம் சாட்டிக் கொண்டாள். அதுமுதல் வெளி ஜோலிகளும், பிரசங்கங்களும் அடங்கி ஓய்ந்து விட்டன.

லீலாவுக்கும் விவாகமாயிற்று. அவளுக்குப் பிறந்த குழந்தையை, இருவரும் ஒருமனப்பட்டுப் 'பிரேமா' என்று பெயரிட்டனர். மறைந்துபோன பிரேமாவே மீண்டும் உயிர் பெற்றதாக இருவரும் கருதினார்கள்.

வாழ்க்கையில் ஓர் அரிய அனுபவத்தை இருவரும் கண்டார்கள்.

ஜம்புவின் ஜோலி

வாரத்தில் முதல் ஆறு நாட்களும், 'ஞாயிற்றுக் கிழமை எப்போடா அப்பா வரப்போகிறது' என்று தோன்றும். வாரத்தில் இந்த ஒருநாள் ரஜாவை, அவ்வளவு ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். ஞாயிற்றுக் கிழமை வந்து விட்டாலோ, 'இந்தச் சனி ஏண்டா அப்பா வருகிறது' என்று தோன்றிவிடுகிறது. என்னுடைய அனுபவம் இதுதான். அந்தவாரம் பூராவும், ஞாயிற்றுக்கிழமைக்குப் 'பிளான்' போட்டு வைக்கிறோம். இரண்டு மாதமாக எழுதாத கடிதங்களை அன்று எழுதித் தீர்த்து விடுவது என்று தீர்மானிக்கிறோம். மூன்று மாதமாகப் பார்க்காத சிநேகிதர்களை அன்று பார்த்துவிட்டு வருவது என்று 'பிரோக்ராம்' தயாரிக்கிறோம். சில பத்திரிகைகளுக்கு வெகுநாளாக எழுதியனுப்ப வேண்டும் என்று யோசித்து வைத்திருக்கும் நமது அருமையான கட்டுரை, கதைகளை ஞாயிற்றுக்கிழமை யன்று வரிந்து தள்ளிவிடுவது என்று முகூர்த்தம் பார்த்து வைக்கிறோம். அந்த வாரத்தில் தூங்காத தூக்கத்தை ஒரே மூச்சில் குறட்டை விட்டுப் பாக்கி யில்லாமல் தீர்த்துவிடுவதாகச் சபதம் செய்கிறோம். மற்ற ஆறு நாட்களில் ஒழியாத

தால் படிக்க முடியாத பேப்பர், புத்தகம் முதலியவற்றை அந்த ஒரு ஞாயிறன்று படித்துக் கிழித்துவிடலாம் என்று ஒத்தி வைத்திருக்கிறோம். மொத்தத்தில் ஞாயிற்றுக்கிழமை என்றால் ஒரு சுதின மாக வைத்து, அதை உபயோகமாகக் கழிக்கவேண்டும் என்பதுதான் நமது உயர்ந்த இலக்ஷியம். ஆனால் உயர்ந்த இலக்ஷியங் களுக்கு இந்த உலகத்தில் இடம் ஏது? காரியத்தில் நடப்பதென்ன?

ஒரு கடிதம் உட்கார்ந்து எழுதுவோமென்றால், அன்றுதான் பேனா காணமல் போயிருக்கும், அல்லது பேனா முனை ஒடிந்துபோயிருக்கும். புஸ்தகத்தைப் படிக்கலாம் என்று எடுத்து வைத்துக்கொண்டு உட் கார்ந்தால், 'ஸார். ஸார்' என்று ஆயிரத்தெட்டு 'ஸார்' சப்தம். என்னவென்று பார்த்தால், கொடுக் காத பில்களுடன் கடைக்காரர், பால்காரர், பேப்பர் காரர், கணக்குத் தீர்த்து வருபவர், கடன்காரர், முனி ஸிபல் வரி கலெக்டர் எல்லோரும் அன்றுதான் நம்மை முற்றுகைபோட்டுத் தாக்க நாள் பார்த்திருப்பார்கள். இந்தமாதிரி பிடுங்கலில் படிப்பு ஓடுகிறதா? சரி, வெளி யில் தொலேவோம், சிநேகிதர்களைப் பார்த்து வரலாம் என்று புறப்பட்டால், வீட்டில் குழந்தைக்கு நேற்று இரவு முதற்கொண்டு 'மாவார்த ஜுரம்' பிளப் பதையும், தன்னை வைத்தியரிடம் அழைத்துச் செல் லாத குறையையும் மனைவி தன்னுடைய சொந்த பரி பாஷையில் பரிமாறக் கேட்டுவிட்டுச் சும்மா இருக்க

முடிகிறதா? அட, ஒன்றும் செய்யாமல் சும்மாவாவது நிச்சப்தமாக ஓய்வு எடுக்கலாமென்றுலோ, பகல் முதல் சாயங்காலம் வரையில் வருகிற நானுவித பிச்சைக்காரர்களுக்குப் பதில் சொல்வதா? அல்லது, நாம் எதிர்பாராமல் வந்து சேரும் விருந்தாளிகளையும் நண்பர்களையும் வரவேற்பதா?

இப்படிப்பட்ட ஞாயிற்றுக்கிழமையன்றுதான் நான் சாவகாசமாகப் பேப்பரைப் பிரித்து வைத்துக்கொண்டு, ஹிட்லர் என்ன செய்தார் என்று கவலையுடன் வாசிக்கத் தொடங்கியபோது, "என்ன ராஜு. சௌக்யமா? ரொம்ப நாளாச்சு" என்ற குரல் கேட்டது. இந்தக் குரலை, நான் கேட்டு வாஸ்தவத்தில் ரொம்ப நாள்தான் ஆச்சு. ஜம்புநாதனை நான் போன முறை கண்டது எனக்கு இன்னும் ஞாபகம் இருக்கிறது. என்னிடம் இருந்த கடைசி ரூபாயை அவன் அவசரமாக வாங்கிக் கொண்டு போனதை நான் மறக்கவில்லை. ஆனல் அது நடந்து கிட்டத்தட்ட ஒரு வருஷமாயிற்று. ஜம்பு அப்போது வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதாகச் சொன்னுன். வேலையிலிருந்து சுகப்படும்போது அவன் என்னிடம் வருவதில்லை.

* * *

ஜம்பு எனக்குப் பழையநாள் சிநேகிதம். நாங்கள் பள்ளிக்கூட கலாசாலைநாட்களிலிருந்து பழகினவர்கள். மாணவர்களாயிருந்த காலத்திலேயே, எனக்கு ஜம்பு விடம் பிரத்தியேக மரியாதையுண்டு. இந்த மரியாதை ஒருவிதத்தில் பயத்தினுல் வந்தது. ஜம்பு அன்று முதற்கொண்டே 'ஜகப்புரட்டன்' என்று பெயர் வாங்கியவன். அவனுக்கு, படிக்கும் புஸ்தகத்தைத் தவிர, மற்ற தெரியாத வித்தை கிடையாது. எங்கள் ஹாக்கி சாம்பியன் அவன்தான். புட்பால் காப்டன் அவன்தான். ஒரு மைல் ஓட்டத்தில் அவனை யாரும் வெல்ல முடியாது. இப்படி 'சாம்பியன்' ஆக இருந்த தால் உபாத்தியாயர் முதல் என்வரையில் ஜம்புவைக் கண்டால் கொஞ்சம் கலக்கம்தான். ஆனுல் ஜம்பு அப்படிப் பொல்லாதவன் இல்லை. என்னிடம் அவ னுக்கு அலாதி வாஞ்சை. நான் கொஞ்சம் 'வாயில் லாப் பிராணி' என்று, அவனுக்கு அனுதாபம். மற்ற பலசாலிப் பையன்கள் என்னைப் பரிகாசம் பண்ணினுல், ஜம்பு அவர்களை மிரட்டி என்னைப் பாதுகாக்க வருவான். நானும் அவன் கேட்கும்போதெல்லாம், ஸோடா, கலர், சில்லறை ஒன்றும் இல்லை என்று சொல்வது கிடையாது.

கால மாறுதலில் ஜம்பு எங்கேயோ, நான் எங் கேயோ. ஆனுல் பழைய வாசனை ஜம்புவை விடவில்லை. எப்பொழுதாவது திடீரென்று என்முன் தோன்று வான். ஆதிப் பழக்கத்தினுல், அவன் வரும்போதெல் லாம், என்னை யறியாமல் என்னுடைய கை என் மணிப் பர்ஸைத் தேடும்.

இந்த ஞாயிற்றுக்கிழமையும் இப்படித்தான். ஜம்புவைக் கண்டதும், என் கை என் பர்ஸை நாடிற்று—அவன் கேட்கும் முன்னரே.

'ஹெ...ஹெ...நீயா. ஜம்பு. வா. வா. ரொம்ப நாளாச்சு' என்று நானும் திருப்பிச் சொன்னேன்.

'என்ன விசேஷம்? ஏது இப்படி?' என்று பிரச்னையை ஆரம்பித்தேன்.

'சும்மாத்தான் வந்தேன். நாளைக்கு நான் பம்பாய் போகிறேன்...போனால் எப்போது மறுபடியும் திரும்புவேனோ, தெரியாது. அதனால் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்' என்றான்.

'பம்பாயில் என்ன விசேஷமோ?'

'அங்கே 'டாடா ஏர் மெயில்' கம்பெனியில் சேரப்போகிறேன். ஆறு மாதத்தில் 'ஏர் பைலட்' (ஆகாய சாரதி) ஆகி விடுவேன். அப்புறம் அதிலேயே ஒரு 'பைலட்' வேலை கிடைக்கலாம்.'

'ஓகோ. பேஷான வேலைதான். ஆனால் கொஞ்சம் அபாயகரமானது.'

'அபாயம். ஹும்...எதில் அபாயம் இல்லை? அப்படி உயிர் போனால் போகிறது. என்ன பிரமாதம்?'

இப்படி ஒரு பத்து நிமிஷம் சம்பாஷணை குறுக்கும் நெடுக்கும் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது. கடைசியில் அந்த முறை ஜம்புவுடன் பேட்டி ஏற்பட்டதின் பயன், அவனுடைய பம்பாய்ப் பிரயாணத்தின் பாதிச் செலவின் பொறுப்பு என்னுடையதாயிற்று.

* * *

இதற்கு அடுத்த முறை ஜம்புவை நான் சந்திக்க நேர்ந்தது ஆறு மாதம் கழித்து. அப்போது அவன் ஆகாயத்தில் பறந்துகொண்டிருப்பான் என்று எதிர் பார்த்து ஏமாற்றமடைந்தேன். மொத்தத்தில் 'மதராஸி'களுக்குப் பம்பாய் உடம்புக்கு ஒத்துக்கொள்வதில்லை என்ற உண்மையை ஜம்பு கண்டுபிடித்திருந்தான். அந்த முறை நான் அவனை ஏதோ ஒரு ஹோட்டலில் சந்தித்ததால், ஒரு ஆறணு கையைக் கடித்ததுடன் விட்டது.

ஒரு மாதம் கழிந்தது. ஜம்பு மீண்டும் பிரசன்னமானுன். அவன் வந்த கோலத்தைப் பார்க்கப் பார்க்க என் கண்களை நம்ப முடியவில்லை. மல்லால் கட்டின தலைப்பாகையும், நிஜாரும், டையும்.......

'என்ன ஜம்பு. ஊர்வலத்துக்குப் புறப்படும் புது மாப்பிள்ளை 'ஸ்டை'லில் வருகிருயே.' என்றேன்.

'ஊர்வலம்தான் புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன். இந்த ஊர் கலெக்டருக்குக் 'காம்ப்' கிளார்க்காக 'டெம்பரரி வேகன்ஸி'யில் எடுத்துக் கொண்டிருக்கிருர்கள்' என்று தெரிவித்தான்.

அந்த முறை அவன் கைமாற்ருக வாங்கிக் கொண்டு போனது ஐந்து ரூபாய்தான்.

* * *

மீண்டும் மூன்று மாதத்திற்குள்ளேயே ஜம்பு தரிசனம் கிட்டிற்று.

'என்ன, ஜம்பு. புது உத்தியோகம் எப்படி இருக்கிறது?' என்றேன்.

'கலெக்டர் ஆபீஸுக்கு ஸலாம் போட்டுவிட்டு நான் வந்து பதினைந்து நாள் ஆகிறது. நமக்கும் சர்க்கார் உத்தியோகத்துக்கும் வெகு தூரம், அப்பா. கலெக்டர் முதல், டவாலி சேவகன் வரையில் ஸலாம் போடுகிறதென்றால் கை வலி எடுத்துவிட்டது. ஒரு நாள் ஆபீஸ் ஹெட் குமாஸ்தா ஏதோ கன்னாபின்னா வென்று சொன்னான். ரிகார்டு கட்டை அவன் முகத்திலே வீசி எறிந்துவிட்டு வெளியேறிவிட்டேன்' என்றான்.

ஹெட் குமாஸ்தா, அது மட்டும் தலைதப்பியது அவர் புண்ணியம்தான். ஜம்புவின் பழைய வாத்தி

யார்களைக் கேட்டால் ஹெட் குமாஸ்தா இத்துடன் தப்பியது அவர் செய்த புண்ணியம் என்றே சொல்லியிருப்பார்கள்.

அந்த முறை ஜம்புவுக்கு சமாராதனை செய்து இரண்டு ரூபாய் தக்ஷிணையுடன் வழி யனுப்பினேன்.

அடுத்த முறை ஜம்பு என்முன் ஆஜரானபோது ஆச்சரியமான காட்சியளித்தான். கதர் ஜுப்பாவும், கதர் சால்வையும், கதர் தொப்பியும்,—காங்கிரஸ் தலைவர் தோற்றார் தோற்றத்தில்.

' என்னடா, ஜம்பு, வேஷம் ... இது?' என்று கேட்டேன்.

'இனிமேல் நான் ஸர்வத்தையும் பரித்தியாகம் செய்துவிட்டேன். கதர் இயக்கத்திற்கே என் உடல்

பொருள் ஆவி மூன்றையும் சமர்ப்பித்துவிட்டேன்' என்று பெரிய பிரசங்கம் தொடங்கிவிட்டான்.

அவன் தான்மட்டும் வரவில்லை ; ஒரு வண்டியில் கதர் துணி மூட்டைகளை அடுக்கிக் கொண்டுவந்து இறக்கிவிட்டான். தன் சுமையில் கால் பங்கை நான் குறைத்த பிறகுதான் நகர்ந்தான். ஆனல் இந்த முறை ஜம்புவிடம் நான் கடனுக கொடுக்கவில்லை. ரூ. 18—9—6 நான் வாங்கிய கதர் துணியின் விலை போக, சில்லறை ரூ. 1—6—6 பாக்கியை அவனிடம் சில்லறை இல்லாததால் அப்புறம் வாங்கிக் கொள்வதாக நானே சொல்லிவிட்டேன். அது அவன் குற்றமா ?

மற்றொரு நாள் ஆபீஸிலிருந்து நான் திரும்பி வீட்டிற்கு வந்தேன். வீட்டு வாசலில் ஒரு பெரிய ஜவுளிக் கடை திறந்திருப்பதைக் கண்டேன். என்னுடைய சகதர்மிணி சந்ததி சமேதமாக, பிரமாதமாகப் பேரம் செய்துகொண்டிருந்தாள். இரண்டு மூன்று பெரிய டிரங்குகள் வாசலில் இறங்கியிருந்தன. அவற்றிலிருந்த சாமான்கள் பல வெளியில் கடை பரப்பப்பட்டிருந்தன. என்னுடைய இளவரசர்களும் இளவரசிகளும் தலைக்கு ஒரு பட்டுச் சொக்காயை மாட்டிக்கொண்டு 'மினுக்கி'க் கொண்டிருந்தார்கள். அம்மாள் கராச்சி ஸில்க் புடவைகளையும், புதுச்சேரி பட்டு ரவிக்கை தினுசுகளையும் பரிசீலனை செய்து



கொண்டிருந்தாள். இந்த அமோக தர்பாருக்கிடையில் கொலுவீற்றிருந்த ஆசாமி யார்? ஜம்புதான். அவன் கதரெல்லாம் பஞ்சாய்ப் பறந்து போய்விட்டது. ஸில்க் ஷர்ட்டும், ஸிந்தி வியாபாரிபோல் தொள தொள நிஜாரும் கஜக்கோல் இடது கரத்திலும் கத்தரிக்கோல் வலது ஹஸ்தத்திலுமாக, பரந்த தோள்களில் விரித்த வாயில் ஸில்க் தாரியாகவும், திவ்ய தரிசனம் கொடுத்தான்.

'என்னடாது. ஜம்புவா?' என்றேன்.

'ஆமாம், அப்பா.' என்றான்.

'கதருக்காக வல்லவா உன் உடல் பொருள் ஆவி......'

'கதராவது கிதராவது. கதரில் காலணா லாபம் கிடையாது. கையைக் கடித்துவிட்டது' என்றான். யார் கையை என்று மட்டும் சொல்லவில்லை.

'நான் இப்போது சேவல்ராம் கில்லாசந்த் கம்பெனியின் பிரதான பிரதிநிதியாக இருக்கிறேன். இதோ பாரு, முதல்தரமான 'டஸ்ஸர் ஸூட்டிங்' 'வெரி சீப்' என்று ஆரம்பித்தான். உள்ளே போய் ரகசியமாக சகதர்மிணியைக் கூப்பிட்டுப் பார்த்தேன். வந்தால்தானே? தீபாவளி அடுத்த வாரம். அவள் ஏன் வருகிறாள்? ஜம்பு அன்று என்னுடைய குழந்தைகளை ஒன்றன்பின் ஒன்றாயும், சில சமயங்களில் ஒரே மூச்சில் இரண்டு மூன்றாகவும், தூக்கி வைத்துக் கொண்டு கொஞ்சினதும் உறவாடினதும், என்றைக்கும் எனக்கு மறக்காது. சேவல்ராம் கில்லாசந்துக்கு ஜம்புவின் தீவிர முயற்சியாலும், என்னுடைய மனைவி

மக்களின் தயவாலும் ரூ. 89-15-3 - இதில், பழைய விசுவாசத்துக்காக கமிஷன் 0-3-3 தள்ளி - விற்பனை.

* * *

தீபாவளி கழிந்தது. ஒரு ஞாயிற்றுக்கிழமை, வழக்கம்போல், செய்யத் தீர்மானித்த காரியங்களை யெல்லாம் செய்யாமல், சோம்பலுடன் பத்திரிகையை ஆவாஹனம் செய்து கொண்டிருந்தேன்.

ஜம்பு ஒரு சிறிய கைப்பெட்டியுடன் எதிரில் தோன்றினான். வழக்கம்போல் வரவேற்று உபசரித்தேன்.

'சொல்லு கதையை' என்றேன். மொத்தத்தில் வியாபாரிகளே மோசக்காரர்கள் என்றும், அதிலும் ஸிந்தி வியாபாரிகளிடம் வெகு ஜாக்கிரதையா யிருக்க வேண்டும் என்றும் ஜம்பு பலவாருகச் சொன்னதி லிருந்து, சேவல்ராம் கில்லாசந்த் ஜம்புவின் மதிப் புயர்ந்த சேவையை இழந்துவிட்டார்கள் என்று அறிந் தேன். பேச்சு சற்று நேரம் பல விஷயங்களில் போயிற்று. கடைசியில் நான், 'ஏண்டா ஜம்பு. நீ ஏன் இன்னும் கல்யாணம் பண்ணிக்கொள்ளவில்லை? ஒரு கல்யாணமாகி விட்டால்தானே உனக்கும் ஒரு நிலையுள்ள வாழ்வு ஏற்படும்' என்றேன். ஜம்பு சிரித்தான்.

'இதோ பாரு, அதைத்தான் உன்னிடம் சொல்ல வந்தேன். நீ கிருகஸ்தனுயிருக்கிருய். சந்தோஷம் தான். ஆனால் உன் குடும்ப விருத்தியைப் பார்த்தால் எனக்கே பயமாயிருக்கிறது. இப்படியே உன் குடும்பம் வளர்ந்துகொண்டு போனால், நீ எப்படி மாள்வது,

மீள்வது? நிஜமாகச் சொல்கிறேன். அன்றைக்கு நான் உன் குடும்பத்திற்காக ஸப்ளை செய்த துணிமணிகளின் மதிப்பை நினைத்தேன். உன்னைப்பற்றியே எனக்குக் கவலை, இராத் தூக்கம் வரவில்லை. எப்படியாவது உன்னை இதிலிருந்து மீட்கவேண்டும் என்று நினைத்தேன். இதோ இந்தப் புஸ்தகங்களை வாசித்துப் பாரு. உனக்கு இப்போது ரொம்ப உபயோகமாயிருக்கும். என்று சொல்லிவிட்டு மளமளவென்று பெட்டியிலிருந்து நாலைந்து புத்தகங்களை எடுத்து என் கையில் சுமத்தினான். பார்த்தேன்.

'கர்ப்பத்தடையின் அவசியம்.'

'அபாயமில்லாத கர்ப்பத்தடை.'

'வேண்டாத பிள்ளைகளைப் பெறாதீர்கள்.'

......இப்படித் தலைப்பிட்ட புத்தகங்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. புத்தகங்களைத் திருப்பிக் கொடுக்க முயன்றேன். ஜம்பு அதைத் தடுத்து, 'நீ வாசித்துப் பார், பிடித்தால் புஸ்தகங்களை நீயே வைத்துக்கொள். இல்லாவிட்டால் நானே திருப்பி வாங்கிக் கொண்டு போகிறேன். விலை அதிகமில்லை. நீ படித்த பிறகு அதில் ஏதாவது, மருந்து சாதனங்கள் வேண்டுமானால் எனக்கு இந்த விலாசத்துக்குத் தெரிவி. இப்போது சும்மா, கம்பெனிக்கு ஐந்து ரூபாய் 'டிபாஸிட்' செய்தால் போதும் பிடித்தால் வாங்கிக்கொள். புஸ்தகத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டால், பணம் வாபஸ்' என்றான். வேறு வழியில்லை. ஐந்து ரூபாயைக் கழற்றிக்கொண்டு வழி நடந்தான்.

* * *

ஜம்புவை நான் பார்த்து இப்போது இரண்டு வருஷம் ஆகிறது. ஒன்று மட்டும் இரகசியமாக ஒப்புக்கொள்கிறேன். அவன் வந்துபோன பின்னர் எனக்குச் சந்ததி ஒன்றும் இது வரையில் இல்லை. அவன் கொடுத்த புத்தகங்கள்தான் இதற்குக் காரணம் என்று நான் உறுதி கூறத் தயாராயில்லை. ஆனால் எனக்கு ஒரு திகில் இருந்துகொண்டேதானிருக்கிறது. ஜம்பு திரும்பி வந்தால் வரட்டும். ஆனால் அவன் இப்போது சந்ததி விருத்தி கவச கம்பெனிக்கு ஏஜெண்டாக இல்லாமல் இருக்க வேண்டுமே என்பதுதான் என் கவலை.

அஷ்டாவதானம்

சொல்லப்போகும் சம்பவம் நடந்து சுமார் பதி னைந்து வருஷங்களிருக்கலாம். எஸ். ஐ. ஆர். ரயில்கள் இவ்வளவு வேகமாக அக்காலத்தில் ஓடியதில்லை. உங் களுக்கு ஞாபகமிருக்கலாம். பழைய காலத்து வண்டி கள் புலிக்கூண்டுகள் மாதிரி யிருக்கும். புளி மூட்டை கள் மாதிரி ஜனங்களை அடைத்துக்கொண்டு 'குப் குப்' பென்று ஒரு மைல் நீளம் புகை விட்டுக்கொண்டே போகும். என்ஜின்கள் இப்பொழுதுள்ள 'எம்' கிளாஸ் 'பி' கிளாஸ் என்ஜின்கள்போல் கொழுமழு வென்று இரா. இளைத்துக் கறுத்து இருக்கும். ஆறடி நீளம் உள்ள ஒரு புகை போக்கும் குழாய் உண்டு. வாயைத் திறந்தால், அதாவது என்ஜின் கூவினால், கருங்குயில் என்றால் தகுமோ! இப்பொழுதுள்ள என்ஜின்கள் எருமைக்கடா அல்லது காண்டாமிருகம் மாதிரி கத்துகின்றனவே! அதெல்லாம் கிடையாது மெல்லிய குரல், நுண்ணிய சரீரம், நீண்ட கழுத்து, உருண்டை முகம்; இன்னும் என்ன சொல்வது?



இந்த வர்ணனையில், சொல்ல வந்த சம்ப வத்தை மறந்து விட் டேன். கி. பி. 18... வருஷம் திருநாகேஸ் வரம் ஸ்டேஷனுக்கு இப்பொழுது இருப்

பதுபோல் கல் கட்டிடம் இல்லை. சுற்றுமுற்றும் ஹோட்டல்கள் இல்லை. குப்பிப் பாட்டி இட்லிக் கடைதான் இருந்தது. திருநாகேஸ்வரம் ஸ்டேஷன் என்றால், இரண்டு வேப்பமரங்கள் நடுவே, சக்கரமில்லாத 'கூட்ஸ்' வண்டி ஒன்று நிற்கும். இதற்குள்ளேதான் ஸ்டேஷன் மாஸ்டர் தர்பார் நடத்தி வந்தார்.

அந்தக் காலத்தில் ஸ்டேஷன் மாஸ்டர் அஷ்டாவதானம் ஐயர் என்று ஒருவர் இருந்தார். அஷ்டாவதானம் என்றால் அவருக்கே தகும். எப்படித்தான் அவரை எஸ். ஐ. ஆர். ஏஜண்டு கண்டு தேர்ந்தெடுத்தார் என்பது எனக்கு அடிக்கடி வியப்பளிக்கும். அந்த ஸ்டேஷனுக்கு ஒரு நாளைக்கு நாலு ரயில்கள்தான் வரும். இடையிடையே தன் பள்ளி உபாத்தியாயர் தொழிலையும் பார்த்துக் கொள்ளுவார் அஷ்டாவதானம். ஸ்டேஷனில் அவர் ஒருவரும், பொன்னன் என்ற போர்ட்டருந்தான் சிப்பந்திகள். பொன்னன் மாதத்தில் பதினைந்து நாள் வரமாட்டான். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் நமது ஐயர் பூர்த்தியாக அஷ்டாவதானம் செய்வார். ரயில் வருவதற்கு அரைமணி முன்னால், தான் முதல் முதல் வேலைக்கு வந்த சமயத்தில் தைத்து வைத்திருந்த - அவரைப்போல் வெகு காலம் ஸர்விஸ் பார்த்த - ஓர் கிழிந்த

கோட்டை எடுத்து அவசரமாக மாட்டிக்கொள்வார். தலையில், ஓர் ஓலைக் குல்லாய்மேல் சுற்றிய துணியுடன் கூடிய 'தலைப்பாகை' என்ற வியாஜத்திற்குள் கட்டுக் குடுமியைத் தள்ளி வைப்பார். ஒரு துண்டு புகையிலையைக் கிள்ளி வாயில் போட்டுக் குதப்புவார். பிறகு 'கர், கர்' என்று காறிக்கொண்டே, 'எலே பொன்னு, எலே,'—ஒரு வைதிகத் திட்டு - 'எங்கேடா தொலைஞ்சுட்டே? மணி அடி - நம்பர் எயிட் ஷட்டில் அவுட், லயன் கிளியர்' என்பார். ஆனால் பொன்னன் அநேகமாக எங்கேயாவது தொலைந்து போயிருப்பான். உடனே தானே வந்து, தொங்கவிட்டிருக்கும் தண்டவாள மணியை 'டங் டங்' என்று கோபத்துடன் அடிப்பார். அடித்துவிட்டு, ஆபீசுக்குள் போய் டிக்கட் - ஜனங்கள் இருந்தால் - கொடுப்பார். தானே வெளியில் வந்து அதை 'செக்' செய்து கத்தரிப்பார். பிறகு கைகாட்டியை இறக்குவார். கையில் பச்சை சிவப்புக் கொடியை எடுத்துக்கொண்டு வண்டிக்குத் தயாராயிருப்பார். அஷ்டாவதானம் என்ற பெயர் தகுமா, தகாதா அவருக்கு?

ஒரு நாள் நான் பாபநாசம் முன்சீப் கோர்ட்டுக்குச் சாட்சி சொல்லப் போகவேண்டி வந்தது. திருநாகேஸ்வரத்திலிருந்து ஒரு ரயில் காலை 9 மணிக்குக் கிளம்பி 11 மணிக்குப் பாபநாசம் போவது வழக்கம். அந்த

ரயிலுக்குப் போகவேண்டுமென்று தீர்மானித்திருந்தேன்.

மறுநாள் காலையில் பரபரப்புடன் பழையதை அள்ளிப் போட்டுக்கொண்டு சொக்காவை மாட்டிக் கொண்டு கிளம்பினேன். ஊரை விட்டுப் புறப்படும் போது சுமார் 8-30 மணி இருக்கும். ஸ்டேஷன் இரண்டு மைல் தூரம். ரயில் 9 மணிக்கு. விரைவாக நடந்தேன். மணல் ரோட்டில் வயிறு 'கடபுடா' என்று குலுங்கிற்று. அநேகமாக ஒவ்வொரு நாளும் திருநாகேஸ்வரம் வரும் ரயில் வண்டிகள் அரை மணி, ஒரு மணி, சில சமயம் இரண்டு மணியும் லேட்டாக வரும். சரியான மணிக்கு வந்த நாளே கிடையாது. அப்படித் தப்பித் தவறி சரியான சமயத்தில் வந்து விட்டால் ஐயருக்குப் பொறுக்காது. கைகாட்டியைத் தழைக்கமாட்டேனென்று வண்டியை "அவுட்டரில்" நிறுத்திப் போடுவார். ரயில் தவறினால் மறு ரயில் கிடையாதே என்று ஓட்டமாக ஓடினேன். ஒரு பர்லாங்குக்கு அப்பால் 'கோ'வென்று என்ஜின் கூவின சப்தம் கேட்டது. இன்னும் விரைவாக ஓடினேன். புகை தெரிந்தது. ஸ்டேஷனில் ரயில் வந்து நின்றுகொண்டிருப்பதைப் பார்த்தேன். போய்விடப் போகிறதே என்று

குறுக்கே விழுந்தடித்து ஓடினேன். ஸ்டேஷன் கம்பி களைத் தாண்டவில்லை. 'குப் குப்' பென்று புறப்பட்டு விட்டது வண்டி. ஓடினாலும் பிடிக்க முடியாது. 'ஓ ஈச்வரா,' என்று நினைத்துக்கொண்டு, போகும் ரயில் கண் மறையும் வரையில் பார்த்தேன்.

ஸ்டேஷனில் அஷ்டாவதானம் ஐயர் நின்று கொண்டிருந்தார். அவர்மேல் வந்த கோபம் கணக் கில்லை. தினம் வண்டியைக் கைகாட்டியண்டை நிறுத்திவைப்பவர், நான் கோர்ட்டுக்குப் போகவேண்டு மென்று தெரிந்து வேண்டுமென்றே இப்படிச் செய் திருக்கிறார் என்று எண்ணினேன். 'ஏங்காணும், ஓய்.

உமக்குத்தான் தெரியுமோ ரயில் விட? வரத்துக் குள்ளே என்னங்காணும் அவசரம்? நான்தான் கோர்ட்டுக்குப் போகணும் இன்னு நேத்துச் சொல்லி விட்டுப் போனேனே? வரமாட்டேனோ? மணியைப் பார்த்தீரா? ஒன்பது அடிக்கலே இன்னும். வேணும்னு இப்படிச் செய்தீரே. சரிதாங்காணும் தெரியும்.' என்று வாயில் வந்தபடி பழையது பாதி ஜீர்ணமாகும்படி கத்தினேன்.

புகையிலையை மெதுவாய் உமிழ்ந்துவிட்டு, அஷ்டாவதானம் திருவாய் மலர்ந்தருளினார். "கர் கர் - அடே ஏங்காணும் வெறுமே 'வாள் வாள்' இன்னு கத்தறீர். உமக்கு ஏதானும் எங்க ரயிலைப்பத்தி முன்னப்பின்ன தெரியுமா? அதோ போறது உம்ம வண்டியில்லை. நேத்து ராத்திரி ஷட்டில் இப்போதான் போறது. உம்ம வண்டி, இன்னி சாயந்தரத்துக்குள்ளே வந்துடும். போய்ப்-பேசாதே தூங்கும்."

தியாகுவின் மறுமலர்ச்சி

1

பம்பாயிலிருந்து கிளம்பிய மதராஸ் எக்ஸ்பிரஸ் பூனாவை நோக்கிப் பறந்துகொண்டிருந்தது. பூனா வரையில் மின்சார என்ஜினால் இழுக்கப்பட்ட அந்த ரயில் தூரத்தை வெகு அலட்சியமாக விழுங்கிக் கொண்டு போயிற்று. அதன் வழியில் குறுக்கிட்ட மலையாகட்டும், மடுவாகட்டும், இவைகளைச் சற்றும் சட்டை செய்யாமலே கடந்து சென்று கொண்டிருந்தது. இருள் நிறைந்த மலைக்குகைகள் வாயில் அச்சமின்றிப் புகுந்து, மலையைக் குடைந்துகொண்டு வருவதுபோல் வெளிக் கிளம்பிற்று. இயற்கை தேவிக்கும் மனிதனுடைய மூளைக்கும் நடந்த யுத்தத்தில், மனிதனின் வெற்றிக்கோர் அறிகுறியாக அந்த ரயில் வண்டி விளங்கிற்று.

அந்த ரயிலில் இரண்டாவது வகுப்புக் கம்பார்ட்மெண்டில் உட்கார்ந்திருந்த ஓர் ஆசாமியும் நவீன உலகத்தின் ஓர் அற்புத சிருஷ்டியாகவே காணப்பட்டார். மினுமினு வென்று அழுத்தமாக வாரிவிட்டிருந்த அவருடைய "ஆக்ஸ்போர்ட் கிராப்பு" முதல், பளபளவென்று பாலிஷ்போட்டுத் தேய்த்த அவருடைய பூட்ஸ் வரையில் ஒவ்வோர் அம்சத்திலும் "நாகரிகம்" பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

பச்சைப் பசேல் என்று செடி கொடிகளும், வயல் வரப்புகளால் கோலமிடப்பட்ட சமதரைகளும், புதர் களும் சோலைகளும் நிறைந்த பள்ளத்தாக்குகளும், உருக்கிவிட்ட வெள்ளியைப்போல் சூரிய வெளிச்சத் தில் காணப்பட்ட அருவிகளும், சோவென்று அலறிக் கொண்டு விழும் நீர்வீழ்ச்சிகளும், மேகங்களால் மறைக் கப்பட்ட குன்றுகளும் - இப்படிப் பற்பல ரமணீயக் காட்சிகளை அந்த ரயில் கடந்து சென்றுகொண்டிருந் தது. சாதாரண மனிதனுயிருந்தால் இவைகளைக் கண்டு மலைத்து அதிசயப்படுவான். கவியாயிருந்தால் இயற்கை இலட்சுமியின் லீலைகளைப்பற்றி அத்தியாயம் அத்தியாயமாகக் காவியங்கள் கட்டியிருப்பான்.

அந்த இரண்டாவது வகுப்புப் பிரயாணி மிஸ்டர் டி. டி. ராஜனோ கவியுமல்ல; சாதாரண மனிதனுமல்ல. ஆகவே இயற்கைக் காட்சிகளால் அவர் மனம் சஞ்சல மடையவில்லை. தற்காலத்து நவீன மனிதர்களில் ஒருவ ராதலால், அவருடைய கவன மெல்லாம் அவர் கையில் வைத் திருந்த அமெரிக்க நடிகைகளின் அழகிய படங்கள் நிறைந்த ஸினிமா சஞ்சிகையில் ஆழ்ந் திருந்தது. அதிலிருந்த படங் களை அவர் பலமுறை திருப்பித் திருப்பிப் பார்த்துவிட்டு மூடி வைத்தார். எதிரில் உட்கார்ந் திருந்த மற்றோர் ஆசாமி அவர் கண்ணுக்கு அப்பொழுதுதான் புலப்பட்டார்.

காந்திக் குல்லாயும், முரட்டுக் கதர் சொக்காயும் தரித்திருந்த அந்த ஆசாமியைக் கண்டதும், மிஸ்டர் ராஜனுக்கு ஒருவாறு பரிகாசமாகவே மனதில் பட்டது.

"ஹூம்... இந்த நவீன யுகத்தில்கூட இந்தமாதிரி அநாகரிகப் பிராணிகள் இன்னும் இருக்கின்றனவே" என்று மனத்திற்குள் வியப்புற்றார்.

இதற்கிடையில் திடீரென்று பழைய ஞாபகங்கள் வந்து தொந்தரவு செய்தன.

"நாமும் இப்படி ஒரு காலத்தில் பித்துக்கொள்ளியாக இருந்தோமே" என்று நினைக்க அவருக்கு இப்பொழுது விளையாட்டாகவே இருந்தது. அவர் அவ்வாறு பித்துக்கொள்ளித்தனம் செய்த நாட்கள் அவர் கலாசாலையில் படிக்கும்போது. அப்பொழுது திடீரென்று ஒருநாள் அவருக்கும் அவருடைய கலாசாலை நண்பர்கள் சிலருக்கும் காந்திக்குல்லாய் போட்டுக்கொள்ள வேண்டுமென்று ஓர் ஆசை தோன்றிற்று.

அது வெகு வருஷங்களுக்கு முன்பு நடந்த சங்கதி. அந்தக் காலத்தில் "மிஸ்டர் ராஜன்" வெறும் "தியாகராஜ" னாகவும் தியாகுவாகவும்தான் விளங்கி வந்தார். காந்திக் குல்லாய் அந்தக்காலத்தில் ஒரு புதுமையாக இருந்தது; அதைத் தரிப்பது தியாகுவுக்கு ஒரு தமாஷாக இருந்தது.

அப்பொழுது இருந்த தியாகுவுக்கும் இப்பொழுது இருக்கும் மிஸ்டர் ராஜனுக்கும் எவ்வளவோ வித்தியாசம் உண்டு. இப்பொழுது மிஸ்டர் ராஜன் புத்திசாலியாகிவிட்டார். அவருடைய மதிப்புயர்ந்த தலை, விலையுயர்ந்த ஹாட்டுகளுக்குத்தான் தகுதி என்பதைக் கண்டு பிடித்திருந்தார்.

அன்று தியாகு அறியாப் பையன்; இன்று மிஸ்டர் ராஜன் உலகமறிந்த மேதாவி. இல்லாவிட்டால் சும்மாவா பம்பாயில் பிரபலமான துணி ஆலையில் அவரை உதவி மானேஜராகப் போட்டு ஆயிரம் ரூபாய் சம்பளமும் கொடுத்தார்கள்?

அவர்மட்டும் புத்திசாலியாயில்லாமல் தம்முடைய கலாசாலை நண்பன் கோபாலனைப்போல் அன்று பிடித்த கதர் பைத்தியம் நீங்கப் பெறுமலிருந்தால், இன்று இப்பதவி அவருக்குக் கிட்டியிருக்குமா? அவரும் ஒரு குக்கிராமத்தில் ஆசிரமவாசம் செய்துகொண்டு திண்டாட வேண்டியதுதானே?

பாவம். கோபாலன். அவனை நினைக்கும்போது மிஸ்டர் ராஜனுக்குப் பரிதாபமாகத்தானிருந்தது. கோபாலன் கலாசாலையில் கெட்டிக்காரப் பையன்; "கணக்குப்புலி" என்றுகூடப் பேர்வாங்கினவன். அவன் போதாத காலம் இந்தக் காந்தி மகானுபாவர் வந்து சேர்ந்தார். கோபாலனும் ஏதோ அந்தச் சமயத்தில் இருந்த கோலாகலத்தில், கதர்க்குல்லாய் தரித்ததுடன் நின்றிருக்கலாம். ஆனால் அவன் அப்படி நிற்கவில்லை; கலாசாலையிலிருந்தே நின்றுவிட்டான். அது முதற்கொண்டு ஆசிரமவாசமும், சிறைவாசமும், தடியடி படுவதும், சேரிகளில் சாக்கடை பெருக்குவதுமே அவனுடைய வாழ்க்கையில் முக்கிய அம்சங்களாகிவிட்டன.

இப்படிப்பட்ட எண்ணங்களும், ஞாபகங்களும், ரயில் செல்லும் வேகத்தில் மிஸ்டர் ராஜன் மனதில் சுழன்றன. பழைய நண்பன் கோபாலனை நினைத்து

இப்பொழுது வருந்தினார். அவனைப்பற்றி நினைக்க அவருக்கு ரயிலில்தான் சாவகாசம் ஏற்பட்டது.

மிஸ்டர் டி. டி. ராஜன், பி. ஏ., எம். எஸ். ஸி., கோபால்தாஸ் கோமுக் தாஸ் மில்ஸ் லிமிடெட் உதவி மானேஜர். பம்பாயிலிருந்து தெற்கே தமது ஊருக்குத் தீபாவளிக்குமுன் ஒரு மாதம் லீவில் சென்றுகொண்டிருந்தார். அவர் அவதரித்த க்ஷேத்திரம் தஞ்சாவூர் ஜில்லாவில் ஒரு கிராமம்; ஆனால் இப்பொழுது அவருடைய ஊர் கோயமுத்தூர்தான். அவருக்குக் கலியாணம் ஆன நாள்முதல் கோயமுத்தூர் அவரை ஸ்வீகரித்தது. அவருடைய மாமனார் கோயமுத்தூரில் பிரபல வக்கீல்.

அவருடைய மனைவி, குழந்தைகள் எல்லோரும் பிறந்தகம் சென்று சில மாதங்களாயின. இப்பொழுது தீபாவளிக்கு மாமனார் வீட்டிலிருந்து அவருக்கு அழைப்பு வரவே, வெகுநாளாகத் தெற்கத்திச் சீமையை எட்டிப் பார்க்காத மிஸ்டர் ராஜன் ஒருமாத லீவில் கிளம்பினார். ரயிலில் பழைய தோழன் கோபாலன் நினைவு வரவே, அவருடைய லீவில் ஒரு பாகத்தை அவனுடன் ஏன் கழிக்கக்கூடாதென்றும் நினைக்கலானார். கோபாலனுக்கு ஏதாவது ஒத்தாசை செய்யவேண்டுமென்று ராஜனுக்கு வெகுநாளாக எண்ணம். அவன் இப்படி ஆசிரம வாசத்தில் வாழ்நாளைக் கழிப்பதில் அவருக்குத் துளிக்கூட இஷ்டமில்லை. இப்பொழுது நேரில் போய்ச் சொல்லி, எப்படியாவது அவனை வேறு வழியில் திருப்ப வேண்டுமென்று ராஜனுக்குப் பட்டது.

2

கோயமுத்தூர் போய்ச் சேர்ந்து சில நாட்கள் ஆனதும், கோபாலனுக்குக் கடிதம் போட்டுவிட்டு ராஜன் தம் நண்பன் இருக்கும் கிராமத்திற்குப் புறப்பட்டார். வெளிப்பாளையம் என்ற அந்த கிராமத்துக்குப் போக ஒரு சிறிய ஸ்டேஷனில் இறங்கவேண்டும். அங்கிருந்து பத்து மைல் பஸ்ஸில் கருப்பங்காடு என்ற ஊருக்குப் போகவேண்டும். கருப்பங் காட்டிலிருந்து ஏழு மைல் மாட்டுவண்டியில் கிராமத்துக்குப் போக வேண்டும்.

ராஜன் அந்தச் சிறிய ஸ்டேஷனில் இறங்கியதும், அவரை எதிர்பார்த்துக் காத்திருந்த கோபாலன் வரவேற்ருன்.

காலையில் ஏழு மணிக்குப் படுக்கையை விட்டெழுந்ததும் எழாததுமாகச் "சோட்டா ஹஜ்ரி" முகத்தில் விழித்துப் பழக்கம் ராஜனுக்கு. ஆனல் அன்று காலையில் காப்பியில்லாத் திண்டாட்டத்திற்கு அவர் உள்ளாக நேர்ந்தது. சிறிய ஸ்டேஷனுதலால் மற்ற இடங்களில்போல் வழக்கமான காப்பி, டீ கடைகள்கூட அங்கு இல்லை.

"இந்த 'டாம்' ஸ்டேஷனில் ஒரு ரிப்ரெஷ்மெண்ட் ரூமுக்கு விதியில்லையா? இந்த 'ரெட்சட்' ரயில்வேயில் இப்படித்தான்" என்று ஸ்டேஷன் மேலும் ரயில் மேலும் எரிந்து விழுந்தார் ராஜன். காலைக் காப்பி வாயில் மண்விழுந்தவர்கள் ஆத்திரப் படுவதில் ஆச்சரியமில்லையே.

கோபாலன் தன்னுடைய நண்பன் ஆத்திரத்தைக் கண்டு பரிதாபப் பட்டவனாய், "என்ன செய்வது. ஏழைப்பட்ட இடங்களில் காப்பிக் கடைகள் எப்படியிருக்கும்? கள்ளுக்கடைகள் மட்டும்தான் இங்கெல்லாம் வலுத்து வருகின்றன" எனப் புன்னகையுடன் தெரிவித்தான்.

"இருந்தாலும் வா போகலாம். முதல் பஸ்ஸிலேயே போய்விடலாம். கருப்பங்காட்டில் ஒரு ஹோட்டல் இருக்கிறது. அங்கே காப்பி அகப்படும்" என்று தைரியங் கூறினான் கோபாலன்.

பஸ்ஸில் கருப்பங்காட்டை யடைந்ததும், கோபாலன் இரட்டை மாட்டு வண்டி யொன்றைத் திட்டம் செய்து சாமான்களை அதில் போட்டான். பிறகு, அந்த ஹோட்டலுக்குத் தன் நண்பனை அழைத்துச் சென்றான்.

கருப்பங்காட்டு "ஹோட்டல்" அவ்வூர் ஜகதீசுவரர் கோயில் சான்னித்தியம் பெற்று விளங்கிற்று. கோயில் மண்டபத்தை யொட்டி ஒரு சிறிய கூரைக் குச்சு; கரியைப் பூசி, அதன்மேல் "பிராம்மணாள் தண்ணீர்ப்பந்தல்" என்று சாக்கட்டியால் எழுதப்பட்ட ஓர் உடைந்த கள்ளிப்பலகை வாசலில் கட்டித் தொங்க விட்டிருந்தது. வாசலில் சாக்கடை ஜலமும் எச்சிற்கலைகளும் கலந்து, கிராமத்துக்கோழி, நாய்களுடன் உறவாடிக்கொண்டிருந்தன.

இதையெல்லாம் கண்ட ராஜனுக்குப் பகீர் என்றது. டாஜ்மஹால் ஹோட்டலில் எலெக்ட்ரிக் பங்காவின்கீழ் ஜாம் என்று ஒரு முழம் உள்ளே வாங்கும் மெத்தை தைத்த சோபாவில் அமர்ந்து

இஸ்திரி மடிப்புக் கலையாத வெள்ளைத் தலைப்பாகை நிஜார் அணிந்த பட்லர்கள் பீங்கான் தட்டுகளிலும் கோப்பைகளிலும் பரிமாற, வெள்ளி ஸ்பூன் போர்க் இவைகளின் உதவியால் நாஸூக்காக அறுசுவை உண்டிகள் அருந்திய ராஜனுக்கு அன்று ஒரு பட்டிக் காட்டுச் சாப்பாட்டுக் கடையில், தலையை டொக் கென்று இடித்துக்கொண்டு உள்ளே புகுந்து, இரண்டு அரிசி இட்லியும், காப்பி என்று புனைபெயர் பூண்ட கிரஸின் ஆயில் மணம் வீசிக்கொண்டிருந்த திராவக மும் எப்படித்தான் உள்சென்றதோ, அந்த ஊர் ஜகதீச னுக்குத்தான் வெளிச்சம். காப்பியென்ற பெயருக்கு அவ்வளவு மகாத்மியம்.

காப்பிக் கடனை முடித்துக்கொண்டதும், கோபால னும் ராஜனும் மாட்டு வண்டியில் ஏறி உட்கார்ந்தார் கள். உயர்தர கார்களில் உடம்பு நலுங்காமல் சவாரி செய்த ராஜனுக்கு நாட்டுப்புறத்து மாட்டு வண்டிப் பிரயாணம் ஓர் எலும்புப் பரீட்சையாகவே இருந்தது. போதாதற்கு அந்த ரோடு ஜில்லா போர்டு நிர்வாகத்தில் இருந்ததென்பதை இடித்துக் காட்டிக்கொண்டுவந்தது.

நொடிகளில் வண்டி அசைந்து குலுங்கும்போ தெல்லாம் "அப்பாடா.......ஐயாடா" என்று ராஜன் தலை, முதுகு, முழங்கால் முதலிய இடிபட்ட பாகங்களைத்தொட்டுப் பார்த்துக் கொண்டே பரிதபித்தார்.



"பட்டணத்தான், நீ ஏன் பட்டிக்காட்டுக்கு வந்தாய்?" என்று குட்டிக் காண்பிப்பது போலிருந்தது அவருக்கு அப்பிரயாணம். இருபுறங்களிலும் வயற்காடுகள் எனக் கூறப்படும் ஒரே பொட்டல்கள். இவைகளுக்கு நடுவில், "நானும் இருக்கிறேன்" என்று கர்வத்துடன் ஓர் ஒற்றைப் பனைமரம் அல்லது கருவேலமரம் ஓங்கிநின்றது. கரடு முரடான அந்த நிலத்தை ஏர்கட்டிச் சிலர் உழுதுகொண்டிருந்தார்கள். கூழாங்கற்களையும் மணல் திட்டுகளையும் எதற்காக உழுகிறார்கள் என்று ராஜனுக்குப் புரியவில்லை.

"கூழாங்கல்லை உழுது இவர்களுக்கு என்ன லாபம்?" எனப் பரிதாபமாகக் கேட்டார்.

"அவர்கள் லாபத்துக்காக வேலை செய்யவில்லை. அவர்களின் பிழைப்பே அது; கூழாங்கல்லையாகிலும் கரைத்தால்தான் ஒரு வாய்க் கஞ்சி கிடைக்கும். மழை வந்தால்தான் இதுவும். மழை தவறினால் அந்த ஒரு வாய்க் கஞ்சியும் போயிற்று. சென்ற இரண்டு வருஷங்களாக இந்தப் பக்கத்தில் மழை இல்லை. இந்த வருஷமாவது வராதா என்று காத்துக்கிடக்கிறார்கள். எத்தனையோ வருஷங்கள் இவ்விதம் காத்துக் காத்து அவர்களுக்குப் பழக்கம்" என்று கோபாலன் விஸ்தரித்தான்.

"இவ்வளவு நிர்மூடர்கள் உண்டா? இப்படி வீண் சிரமப்படுகிறார்களே. பேசாமல் நகரங்களுக்குப் போனால் வேறுவேலை பார்த்துப் பிழைக்கலாமே?" என்றார் ராஜன்.

"அவர்களுக்கு அவ்வளவு யுக்தி தெரியாததால் அல்ல. நகரத்துக்குப் போனால் வேலை கிடைக்கும் என்ற நிச்சயமில்லையே. அதனால் அகப்பட்டது

போதும் என்று பரம்பரையாகத் தங்களுக்கு உள்ள பண்ணை வேலையைப் பார்த்துக்கொண்டு திருப்தியடைகிறார்கள்" என்றான் கோபாலன்.

ராஜனுக்கு இந்தச் சமாதானம் துளியாகிலும் பிடிக்கவில்லை. கிராம வாழ்க்கையே சுத்த முட்டாள் தனம் என்பது அவர் கொள்கை.

"இதோ பார், கோபாலா. நான் இந்தக் கண்றாவியெல்லாம் பார்க்க இங்கே வரவில்லை. உன்னிடம் எனக்கிருக்கும் பழைய வாஞ்சைவிடவில்லை. நீ இப்படி இருப்பது எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. உன் புத்திசாலித் தனமென்ன, உன்னுடைய திறமை என்ன? அதெல்லாவற்றையும் இந்தப் பொட்டல் காட்டில் வீணாக்குகிறாய். போனது போகட்டும். இனிமேலாவது முன்னுக்கு வரும் வழியைப் பார். உன்னுடைய சாமர்த்தியத்திற்கு, நீயும் என்னைப்போல் எவ்வளவோ நல்ல பதவியைப் பெறலாம். பேசாமல் என்னுடன் பம்பாய்க்கு வந்துவிடு. எங்கேயாவது உனக்கேற்ற நல்ல உத்தியோகம் கிடைக்காமல் போகாது. காலாகாலத்தில் சீக்கிரம் ஒரு கலியாணம், கார்த்திகை, பிள்ளைகுட்டி, குடும்பம் என்று ஏற்பட்டு, நாலு பேரைப்போல் நீயும் நன்றாயிருக்க வேண்டாமா? உன்னை இந்த நரகத்திலிருந்து மீட்டுக்கொண்டு போகவே நான் இங்கே மெனக்கட்டு வந்தேன், தெரியுமா?" என்று தம் மனதை உடைத்துச் சொன்னார் ராஜன்.

கோபாலன் இதைக் கேட்டுப் புன்னகை புரிந்தான். "ஓ. அப்படியா? அதற்கென்ன பார்க்கலாம்.

இன்னும் சாவகாசம் இருக்கிறதே அதைப்பற்றியெல்லாம் பேச" எனச் சொல்லிவிட்டுச் சும்மா இருந்தான். கலாசாலை நாள் முதற்கொண்டு கோபாலன் என்றைக்கும் சிரித்த முகத்துடன்தானிருப்பான். இன்று அவன் முகத்தில் தவழ்ந்த புன்னகையில் தோன்றிய ஒரு விசேஷ ஜோதியை ராஜன் அதற்குமுன் பார்த்ததில்லை.

3

காலை பத்து மணிக்கு வெளிப்பாளையம் ஆசிரமத்தை அடைந்தார்கள். அடர்ந்த தென்னந்தோப்பு ஒன்று. அதன் மத்தியில் அழகான குடிசைகள் அமைக்கப்பட்டிருந்தன. அந்த ஊருக்கே தென்னந்தோப்பும், ஒழுங்காக அமைக்கப்பெற்ற அக்குடிசைகளும் நூதனங்களாக விளங்கின.

கோபாலன் தன் நண்பனை நடுவில் இருந்த தன்னுடைய குடிசையில் இறக்கினான். களைப்படைந்திருந்த ராஜன், அக்குடிசையில் ஒரு கயிற்றுக் கட்டிலின்மேல் சாய்ந்தார்.

கோபாலன் ஆசிரமத்துப் பண்டகசாலைக்கு ஏதோ சாமான் வாங்கிவரச் சென்றான். அவன் திரும்பி வரும்போது கொண்டுவந்த செய்தி ராஜனுக்குக் கொஞ்சம் நஞ்சம் இருந்த மனோ தைரியத்தையும் கலைத்துவிட்டது. ஆசிரமத்திற்கு வழக்கமாக வரும் பால்காரர்களும் தயிர்க்காரர்களும் நின்றுவிட்டதாகக் கேள்வியுற்றுத் திகைத்துப் போனார்.

மழையில்லாமல், ஊரில் இருந்த கிணறுகள் வற்றிக்கிடந்தன. ஊருக்கு அரைமைல் தூரத்தில்

கழனியில் இருந்த ஒரு கேணியில்மட்டும் கொஞ்சம் ஜலம் இருந்தது. அதைத் தவிர ஆசிரமத்தில் இருந்த பெரிய கேணியிலும் ஜலம் ஊறிக்கொண்டிருந்தது. ஊர் ஜனங்கள் கழனிக் கேணியில் ஜலம் எடுத்து வந்தார்கள். ஆனால் அந்தக் கிராமத்துச் சேரி வாசிகளுக்கோ ஜலம் அகப்படாமல் தவித்தார்கள். ஆசிரமத்துக் கேணியில் அவர்களை ஜலம் எடுக்க ஆசிரம வாசிகள் விட்டார்கள். இதைக்கேட்டு, கிராமத்தில் உள்ள மற்ற ஜாதியாரிடையே பரபரப்பு உண்டாயிற்று. கிராமத்து நாட்டாண்மைக்காரர் ஜாதிக் கட்டுப்பாடு செய்து, ஆசிரமத்தைப் பகிஷ்காரம்செய்ய ஏற்பாடு செய்தார். ஆசிரமத்துக்கு வழக்கமாகப் பால், தயிர், நெய், காய்கறி முதலிய உணவுப் பொருள்கள் கொண்டு வருபவர்கள் இதனால் நிறுத்தப்பட்டுவிட்டனர்.

இந்த விருத்தாந்தத்தைக் கேட்ட ராஜனுக்கு ஆச்சரியம் அதிகரித்தது. பம்பாயில் ஜாதி என்ற பேச்சு அவர் பழகும் இடங்களில் எழுவதில்லை. பணப்புழக்கம் இருக்குமிடங்களில் ஜாதி வித்தியாசங்கள் தலை கிளப்புவதில்லை.

“ஆச்சரியமாக இருக்கிறதே. தண்ணீருக்குக் கூட்டா தீட்டு. இவ்வளவு அறியா மக்களும் இந்த யுகத்தில் இருக்கிறார்களா?” என்று வியந்தார்.

ராஜனுக்கு அந்த ஆறு நாட்களும் ஆறு யுகங்களாகவே சென்றன. முதல் நாள் காப்பியில்லாமல் தலைவலி வந்தது; இரண்டாம் நாள் தலைவலி வந்ததாக நினைத்துக்கொண்டு கஷ்டப்பட்டார்; மூன்றாம் நாள்

தலைவலியை எதிர்பார்த்துக்கொண்டே சஞ்சலமடைந் தார்; நாலாம் நாள் தலைவலியை மறக்க ஆரம்பித்தார்; ஐந்தாம் நாள் காப்பியையே மறக்கத் தொடங்கினர்; காப்பியில்லாமல் ராஜனும் பிழைத்துவிட்டார். இது வும் ஓர் அதிசயம் அல்லவா?

ஆசிரமத்துக்கு வந்த முதல்நாள் முற்பகல் பூரா வும் கோபாலன் ஒரு பெரிய கொட்டாரத்தின் திண்ணை யில் உட்கார்ந்துகொண்டு, கூட்டம் கூட்டமாக வந்த கிராம ஸ்திரீகளிடமிருந்து நூலை வாங்கி எடை போட்டுக் கூலி கொடுத்துக்கொண்டிருந்தான். இதை யெல்லாம் ராஜன் பக்கத்திலிருந்து வேடிக்கை பார்த் துக்கொண்டிருந்தார்.

"வேலையற்ற வேலை. ஒரு நொடியில் மெஷின் வெகு நைஸாகச் செய்யும் இக்காரியத்தை இவ்வளவு ஸ்திரீகளும் கஷ்டப்பட்டு நூல் நூற்றுக்கொண்டு வருகிறார்களே எனத் தோன்றிற்று ராஜனுக்கு.

எலும்பும் தோலுமாக இருந்த ஒருத்தி தன் நூலைக் கொடுத்துவிட்டுக் கோபாலனிடம், 'ஏஞ்சாமி. தீவுளி வந்திருச்சே. இந்த வாட்டி ஐயாகிட்ட எட்டணுக் காசுகூட வாங்கலையே நானு. போன வருசமெல்லாம் ஐயா நிரம்ப நூலு வாங்கிச்சு. இந்த வாட்டி பாதி நூலு கூடத் தேறலையே. ஏளேங்க கதி என்னு ஆவுறது?" என்று முறையிட்டாள்.

"என்ன அம்மா செய்கிறது? கதர் வாங்குபவர்கள் இந்தக்காலத்திலே குறைந்துவிட்டார்கள். நம்ம பம்பாய் ஐயாக்கள் மில்லிலே ரொம்ப மலிவாகத் துணிகள்போட்டு அனுப்பிவிடுகிறார்கள். ஜனங்கள் அதுதான் வேணும், கதர் வாணும் என்கிறார்களே." எனச் சொன்னான். ராஜன் மனதில் இது சுருக்கென்று தைத்தது. தம்முடைய ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் அந்த ஏழைக் கிழவிக்குக் கிடைக்காத கூலி எவ்வளவு சேர்ந்திருக்குமோ வென்றுகூடச் சந்தேகமடைந்தார்.

கோபாலன் ராஜனை ஆசிரமத்தின் துணிக்கிடங்குக்கு அழைத்துச் சென்றான். வரிசை வரிசையாகக் கூரைவரைக்கும் கதர்த் துண்டுகளும், வேஷ்டிகளும், பீஸ்களும் திணியத்திணிய அடுக்கப்பட்டிருந்தன.

"என்ன? தீபாவளி சமயத்தில்கூட இவ்வளவு சரக்குகள் இங்கே ஏன் அடைபட்டிருக்கின்றன?" எனக் கேட்டார்.

கோபாலன் முகம் வாட்டமடைந்தது.

"என்ன செய்வது? வியாபாரம் முன்போல் இல்லை. உனக்குத் தெரியாதா? மில் துணியோடு கதர் போட்டிபோட முடியுமா? போன வருஷத்திலிருந்து நூற்றுக் கணக்கான ராட்டைகளும் தறிகளும் நின்று போய்விட்டன. அப்படியும் சரக்கு ஏராளமாகச் சேர்ந்துவிட்டது" எனக் குறை சொல்லிக்கொண்டான்.

"எங்கள் மில் கிடங்கில் ஒரு முழந் துணிகூட இப்போது கிடைக்காது. ஆறு மாதத்திற்கு முந்தியே பிடித்து ஆர்டர்கள் குவிந்துவிட்டன. மெஷினிலிருந்து வந்ததும் வராததும் மூட்டை கட்டிப்போய் விடுகின்

றன" என்று தம் வியாபாரப் பெருமையை ராஜன் சொல்லிக்கொண்டார்.

'அதனால்தான் இந்த மூட்டைகள் இங்கே இப்படிக் குவிந்துகிடக்கின்றன' என்றான் கோபாலன்.

ராஜனுக்கு இந்த நியாயம் ஒன்றும் பிடிபடவில்லை. ஆயினும் அன்று அவர் கண்ட கதர்க் குவியல்கள் அவர் மனதில் ஒரு பாரமாகவே தங்கின.

அன்று சாயங்காலம் ஆசிரமத்தைச் சேர்ந்த இலவச ஆஸ்பத்திரிக்குச் சென்றார்கள். ஆசிரமத்து ஆஸ்பத்திரிக்கு வந்த நோயாளிகள் பெரும்பாலும் பாலர்களும், குழந்தைகளும்தான். சோனிகளாக இருந்த அவர்கள் முகத்தில் ஒரு நோய்தான் முக்கியமாகக் காணப்பட்டது; அது வறுமை நோய். வளரும் பிராயத்தில் ஆகாரம் சரியாக இல்லாவிட்டால் குழந்தைகள் என்ன செய்யும்?

4

மறுநாட் காலையில் சுற்றுப்புறக் கிராமங்களுக்குத் தன்னுடன் ராஜனை இட்டுச் சென்றான் கோபாலன். ஆசிரமத்தில் கண்ட வறுமைக் காட்சிகள் இன்னும் பெரிய அளவில் இங்கே காணப்பட்டன. இடிந்த மண் சுவர்கள்; ஓட்டைக் கூரைகள்; மெலிந்த ஜனங்கள்; இவைகளிடையே ராட்டை மட்டும் வீட்டுக்கு வீடு சுழன்று கொண்டிருந்தது.

ஒரு வீட்டு வாசலில் தொண்டு கிழவி ஒருத்தி இடைவிடாது நூல் சுற்றுக்கொண்டிருந்தாள். கோபாலனும் ராஜனும் அவள் முன் நின்றதை அவள் கவனிக்காது தன் வேலையில் ஈடுபட்டிருந்தாள்.

'என்ன கிழவி. எவ்வளவு நூல் எடுத்தாய் இந்த வாரம்?' என்று கோபாலன் குரல் கேட்டதும் அவள் சற்று நிமிர்ந்தாள். ராஜனுக்குப் பகீர் என்றது. அவர்கள் இருந்த இடத்தை நோக்கினளே ஒழிய, அவள் கண்களில் ஒளி இல்லை; அவள் பார்வையை இழந்து வெகு காலமாயிற்று. 'வா...ஆ...ஐயா...ஆ...என்ன ...மோ...கிளம் நூத்துக்கிட்டிருக்கிறது, பாரேன்... மவராசன் புண்ணியத்திலே கூளுக்கு ஆவுது...ஏ...ன் ...ஐயா...காந்தி...மவராசா எப்போ வாராரு?...... வந்தாக்கே இந்தக் கிளத்தைக் கொஞ்சம் பார்க்கச் சொல்லேன்...' என்று உடைந்து உலர்ந்த குரலில் கண்ணில்லாக் கிழவி சொன்னது ராஜன் மனதில் என்னவோ செய்தது.

'இந்தக் கிழவிக்கு வீட்டில் வேறு யாரும் கிடையாதா, சோறு போடுவதற்கு?' என்று கோபாலனைக் கேட்டார்.

'அவளுக்கு ஒரு மருமகள் இருக்கிறாள். வீட்டில் அவள் ஒருத்திதான் பாக்கி. கிழவியின் மூத்தமகன் மலாயாவுக்குப் போனவன் சங்கதி ஒன்றும் தெரியவில்லை. இளையவன் சில வருஷங்களுக்கு முன் கழனியில் பாம்பு கடித்துச் செத்துப் போய் விட்டான். அவன் மனைவிதான் கிழவிக்கு ஒத்தாசையாக இருக்கிறாள். அவளுக்கும் கழனி காட்டில் வேலை அகப்பட்டால்

இரண்டு காசு கிடைக்கும். வேறு வேலை கிடைக்காத போது—வருஷத்தில் எட்டு மாதம்—அவளும் நூல் நூற்று, வருவதைக்கொண்டு ஜீவனம் நடத்துகிறாள்” என்ற வரலாறுகளைக் கோபாலன் தெரிவித்தான்.

கிழவி நூற்ற முடி ஒன்றை ராஜன் கையில் வாங்கிப் பார்த்தார். ‘எங்கள் மில் நூல் அவ்வளவு நைஸாக இருக்கிறதே.’ என்று ஆச்சரியப்பட்டார்.

அந்தக் கிராமத்தின் பக்கத்தில் உள்ள கிராமங்களிலும் பல வீடுகள் பாழடைந்தும் பூட்டப்பட்டுமிருப்பதைக் கண்டு ராஜன் காரணம் என்னவென்று விசாரித்தார். கிழவியின் மூத்த மகனைப்போல் பஞ்சத்தால் ரங்கூன், பினாங்கு முதலிய அக்கரைச் சீமைகளுக்குப் பல குடும்பங்கள் குடியேறிவிட்டதாகக் கோபாலன் தெரிவித்தான்.

மறுநாள் நெசவு கிராமம் ஒன்றுக்கு இரு நண்பர்களும் சென்றார்கள். வீட்டிற்கு இரண்டு மூன்று தறிகள் இருந்தன. ஆனால் ஒன்றுக்குமேல் வேலை செய்யவில்லை. மற்றவைகளில் சிலந்திகள் நூல் நூற்றுக்கொண்டிருந்தன.

சென்ற மூன்று நாட்களில் கிடைத்த அனுபவங்களிலிருந்து ராஜன் பார்த்த காட்சிகளுக்கெல்லாம் இனிக் காரணம் கேட்பதை விட்டுவிட்டார். அவர் கண்களில் பட்ட ஒவ்வொரு காட்சியும், ‘இந்த வறுமைக்கு உன் பங்கு எவ்வளவு?’ என்று படித்துப் படித்துக்கேட்பதுபோலிருந்தது. அவர் இதுவரையில் அனுபவிக்காத புதிய உணர்ச்சி ஒன்று எங்கிருந்தோ கிளம்பிற்று. அவர் ஹிருதயம் ஒரு மூலையிலிருந்து பக்கு பக்கென்று அடித்துக்கொள்ள ஆரம்பித்தது.

மறுநாள் ஆசிரமத்திற்குப் பக்கத்தில் இருந்த சேரிக்குச் சென்ருர்கள். இதுவரையில் அங்கே பார்த்த கிராமங்களைவிட அந்தச் சேரி சுத்தமாயிருந்ததைக் கண்ட ராஜனுக்கு அதிசயமாயிருந்தது.

சேரியின் நடுவிலிருந்த ஒரு வீட்டுவாசலில் மட்டும் குப்பை கொட்டியபடி இருந்தது. இதைக் கண்டதும் கோபாலன் கச்சத்தை இழுத்துக் கட்டிக்கொண்டு குப்பையைத் தானே அப்புறப்படுத்த ஆரம்பித்தான். ராஜனுக்குத் தன் அருமை நண்பன் தோட்டி வேலை செய்வதைப் பார்த்து உண்டான மனக் கலக்கம் சொல்லி முடியாது.

அதற்குள் கோபாலன் செய்யும் வேலையைப் பார்த்த அந்த வீட்டிலிருந்த பெண்மணி ஓடி வந்து, 'ஐயா. ஐயா. நீங்க சும்மா இருங்க. நானே குப்பையை வாரிப் போட்டுடறேன்' என்று பரபரப்புடன் முன் வந்த பிறகுதான் கோபாலன் திரும்பினுன்.

5

ஆறு நாட்கள் இப்படிக் கழிந்தன. ராஜனுடைய மனேநிலை நாளுக்கு நாள் மாறி வந்தது. பட்டிக்காட்டு அநாகரிகங்கள் இப்பொழுது அவருக்கு சகஜமாகி விட்டதால் அவ்வளவு அருவருப்புத் தோன்றவில்லை. இது வரையில் அவர் ஒரு பிரத்தியேக உலகத்தில் வசித்து வந்தார். இப்பொழுது பிரத்யக்ஷமாக அவர் கண்ட பல உண்மைகள், அவர் மனதில் பதிந்தன. நாடெல்லாம் இப்படித்தான் இருக்கிறதா என்பதை நினைக்கத் திடுக்கிட்டார். செல்வம் நிறைந்த ஒரு பம்பாய் நகரத்திற்கு எவ்வளவு ஆயிரக்கணக்கான

வெளிப்பாளையம் போன்ற கிராமங்கள் வறுமையில் கிடக்கின்றன என்பதை நினைக்கக்கூட அவருக்குப் பயமாயிருந்தது.

இதற்குள் கோயமுத்தூரிலிருந்து தீபாவளிக்கு உடனே புறப்பட்டு வரவேண்டுமென்று கடிதம்மேல் கடிதம், தந்திமேல் தந்தி ராஜன் மாமனாரிடமிருந்து வந்துகொண்டிருந்தன. 'போவதா, வேண்டாமா? எதற்காகப் போகவேண்டும்? இவ்வளவு ஏழைகள் கஷ்டப்படும்போது நமக்கு மட்டும் என்ன கொண்டாட்டம் வேண்டியிருக்கிறது.' என்றெல்லாம் அவர் மனம் சஞ்சலப்பட்டுத் தவித்தது. ஏழாம் நாள் கோபாலனே தனது நண்பனை 'தீபாவளிக்கு நீ மாமனூர் வீட்டுக்கு போகவேண்டாமா?' எனக் கேட்கும் நிலை ஏற்பட்டது.

சொல்லமாட்டாமல் தவித்துக் கொண்டிருந்ததை ராஜன் இப்பொழுது வெளியிட்டார். 'கோபாலா. உன்னைப் பைத்தியக்காரன் என்றல்லவா எண்ணினேன். நான் இங்கே பார்க்கும் காட்சிகள் என்னையே பைத்தியம் பிடிக்க அடித்துவிட்டன. இது வரையில் ஒரு ம்ாய உலகத்தில் உழன்ற நான், அதுதான் நிஜம் என்று எண்ணியிருந்தேன். இப்பொழுது என் கண்முன் திரையைக் கிழித்துக் காட்டுவதுபோல் மற்றோர் உண்மை உலகம் என்முன் நிற்கிறது. என் மனம் தாளவில்லை. இனி நான் ஒரு புது மனிதன் ஆகிவிட்டேன்' என்று நெஞ்சிலிருந்ததை யெல்லாம் மளமளவென்று ஆவேசம் வந்தவர்போல் பொழிந்து கொட்டினார்.

கோபாலனுக்குத் தன் கண்களையும், செவிகளையும் நம்ப முடியவில்லை. ஒரு வாரத்திற்கு முன், தான்

அழைத்து வந்த ராஜனு இவன் என்று திகைத்துப் போனுன்.

அந்த வருஷம் மிஸ்டர் ராஜனின் தீபாவளி வழக்கம்போல் இல்லாமல் ஒரு தனி மோஸ்தராகப் போய் விட்டது. நாலுமுழக் கதர் வேஷ்டியுடனும், மூணு முழத் துண்டுடனும், ஆசிரமத்திலேயே ராஜன் தீபாவளியைக் கொண்டாடினுர். அவருக்காக மாமனுர் வாங்கி வைத்த பட்டுவேஷ்டியும் ஜரிகை துப்பட்டாவும் பீரோவில் பத்திரமாய்த் தூங்கின.

வெளிப்பாளையம் கிராமத்திலோ அத் தீபாவளி ஒரு புது விசேஷமாகவே கொண்டாடப்பட்டது. கிராமத்துக் குழந்தை குட்டிகள் எல்லோரும் பளிச் சென்று எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்து புதுக் கதர்வேஷ்டி உடுத்திக் கொண்டனர். ராஜன் அவர்களை மறக்கவில்லை. அவர்கள் அத்தகைய சந்தோஷம் அடைந்தது அவர் செலவில்தான்.

சென்னையிலிருந்து புறப்பட்ட பம்பாய் எக்ஸ்பிரஸ் பூனுவைத் தாண்டி அதே மலைப்பாதையைக் கடந்து சென்று கொண்டிருந்தது. ஏற்றப் பிரதேசமாதலால், இப்போது அதன் வேகம் சற்றுத் தளர்ந்தது. அந்த ரயிலில் போய்க்கொண்டிருந்த கதர் உடை அணிந்த ஒரு மனிதரைத் தெரிந்தவர்கள்கூட எளிதில் மிஸ்டர் ராஜன் என்று அடையாளம் கண்டு பிடித்திருக்கமாட்டார்கள். அவருடைய கவனமெல்லாம் இப்பொழுது சினிமா சஞ்சிகையில் இல்லை; வெளிப்பாளையம் ஆசிரமம் அவர் மனக்கண்முன் நின்றுகொண்டே இருந்தது.

அக்ஷதை அண்ணாஜி

அக்ஷதை அண்ணாஜியை அறிமுகப்படுத்தும் பொறுப்பு என் மெலிந்த தோள்களில் விழாதென்றே நினைக்கிறேன். பிறருக்கு இவ்விதச் சிரமத்தை வைப்பதில் அக்ஷதை அண்ணாஜிக்குத் துளிக்கூட இஷ்டமே கிடையாது. அவரைப் பொறுத்தவரையில் தம்மை அறிமுகப்படுத்திக் கொள்ளவேண்டிய உபாயங்களும் முயற்சிகளும் இவ்வுலகில் எவ்வளவு உண்டோ அவ்வளவையும் தேடிக் கையாண்டிருக்கிறார். இனியும் அவரை அறியாத பாமர உலகம் ஒன்று உண்டெனில் நிச்சயமாக அது அவர் குற்றமாகாது; உலகத்தில் பரவிய அறியாமையே காரணம் ஆகும்.

அக்ஷதை அண்ணாஜியின் ஜனனதினம் அக்கம் பக்கத்தாருக்கு ஒரு பெரிய மறக்கவொண்ணு தினமாயிற்று. பிறவியிலேயே பிரம்மா இவர் விஷயத்தில் பட்சபாதத்தைக் காட்டிவிட்டார். நமது தேசத்தில் பெரும்பான்மையான மக்கள் வாயில்லாப் பூச்சிகளாகப் பிறக்கிறார்கள் என்று ஐதிகம். இவர்களிடம் கொடுக்காத சாரீர சக்தியைத் திரட்டிப் பிரம்மா அண்ணாஜியிடத்தில் ஒப்படைத்தார் போலும். அவர் பிறந்த அன்று கிளப்பிய கண்ட நாதத்தைக் கேட்டு, ஓட்டம் பிடித்த நித்திராதேவியை அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் இன்னும் தேடிக்கொண்டுதானிருக்கிறார்கள்.

கலியாணம், கார்த்திகை என்றால் அண்ணாஜி

இல்லாமல் நடக்க முடியாதென்றதோர் அபிப்பிராயம் எங்கள் ஊரில் பலமாக இருந்து வருகிறது.

ஒரு சமயம் அவர் ஒரு கலியாண வீட்டிற்குப் போயிருந்தார். தாலி கட்டிய பின் (நல்ல வேளையாய் அண்ணுஜி வருவதற்குமுன் மணமகன் தாலிகட்டி விட்டார்) தம்பதிகளுக்கு ஆசீர்வாதம் நடந்தது. அங்கே கூடியிருந்தவர்கள் முறைப்படி அக்ஷதை வாங்கித் தம்பதிகள்மேல் தெளித்தார்கள். அண்ணுஜி

மட்டும் தம் தலையையும் அக்ஷதைவிழும் இடத்தில் நீட்டியதல்லாமல், தன் கையிலிருந்த அக்ஷதையையும் வீணுக்காமல் தமது சிரஸிலேயே அபிஷேகம் செய்து கொண்டார். இது முதல் 'அக்ஷதை' யென்ற நாமாக்ஷரத்தைப் பெற்ருர். இக்கதை நிஜமா பொய்யாவென்று எனக்குத் தெரியாது. ஆனல் 'அக்ஷதை'க்கு ஆதாரம் ஒன்று வேண்டாமா?

எவ்விதம் அண்ணுஜி இல்லாத பந்தல் சோபிக்காதோ, அவ்விதமே அண்ணுஜியின் உருவப்படமில்லாத பத்திரிகைகளும், அவர் பெயரில்லாத தினசரிகளும் சுவையற்றவையாகும். இன்று ஒரு புத்தகாலயத் திறப்பு விழாவா? அக்ஷதையின் மறக்கமுடியாத

உருவம் அங்கே தோன்றும்; நாளை ஒரு கொடியேற்ற விழா வருகிறதா? அக்ஷதை இல்லாமல் அது எப்படி கொடி ஏறும்? பிரதான மந்திரி விருந்து கொடுத்தாரா நேற்று? வந்த பிரமுகர்கள் ஜாபிதாவில் அக்ஷதையின் பெயர் முதலில் வராவிட்டால் என்ன விருந்து அது?

இது நிற்க, ஒரு நாள் திடீரென்று தினசரிப் பத்திரிகைகளின் விற்பனை 'டபக்'கென்று இறங்கிவிட்டது. வழக்கமாக எங்கள் ஊரில் ஆயிரம் பிரதிகள் விற்ற பத்திரிகை அன்று ஐந்நூறுக்குமேல் ஓடவில்லை. மறுநாள் மற்றொரு பத்திரிகைக்கும் இதே ஆபத்து நேரிட்டது. அந்த வார முழுதும் ஒவ்வொரு பத்திரிகையும் இவ்வாறு நஷ்டப்பட்டது. இதில் ஏதோ சூட்சமம் இருக்கிறதென்று பத்திரிகாலயங்கள் ஆராய்ச்சி செய்யத் தொடங்கின. கடைசியில் இரகசியம் வெளிப்பட்டது. அக்ஷதை அண்ணாஜி வீட்டிற்குப் பத்திரிகை விசேஷ நிருபர்கள் அனுப்பப்பட்டனர்.

அக்ஷதை ஒரு வாரம் ஊரில் இல்லாததால் பத்திரிகைகள் இவ்வாறு பாதிக்கப்பட்டு விட்டன. தினசரி அவர் பெயரோ உருவப்படமோ பிரசுரமாகும் பத்திரிகையில் அவர் வாங்கும் ஐந்நூறு பிரதிகள் அந்த வாரம் அவர் ஊரில் இல்லாததால் விற்பனையில்லாமல் போயின.

அன்று முதல் பத்தரிகாலயங்கள் அக்ஷதை விஷயத்தில் வெகு ஜாக்கிரதையாகத்தான் நடந்து கொள்கின்றன.

அக்ஷதை அண்ணாஜியைப் போய் யாராவது 'உங்கள் உத்தியோகம் என்ன?' என்று மரியாதைக் குறைவாகக் கேட்டுவைக்கப் போகிறீர்கள். போன 'ஸென்

ஸஸ்' குறிப்பில் இவர் பெயருக்கெதிரில் உத்தியோகம் 'பப்ளிக் ஸர்விஸ்' என்று பதியப்பட்டிருப்பதைப் பார்த்திருந்தால் அவ்வாறு கேட்கமாட்டீர்கள். 'பொது மனிதர்'களில் ஒருவராகத் தம்மைச் சொல்லிக்கொள்வதில் அக்ஷதைக்குப் பெரும் கௌரவம். பொது வாழ்வில் இவர் ஈடுபட்டுப் பத்துப் பதினைந்து வருஷங்கள் ஆகின்றன. இவர் பாராத கூட்டமில்லை; ஏருத மேடையில்லை. எந்தப் பொதுக் காரியம், பொதுக்கூட்டம், பொது ஊர்வலம்,—இப்படிப்பட்ட எந்த ஜனசமூகத்தின் முன்னணியிலும் அக்ஷதை அண்ணாஜியைக் காணலாம். மற்றவர்களைப்போல் கூப்பிட்டால்தான் போவது என்ற முடுக்கு, அக்ஷதையிடத்தில் ஒருபோதும் கிடையாது. 'பொதுக்காரியம் என்ருல் அதில் கலந்துகொள்வது நம் கடமையில்லையா?' என்று கருதுபவர்.

ஆனால் இந்த உலகமிருக்கிறதே, ஆனாலும் கண்மூடி உலகம். ஏது, ஒரு சிறிய மனிதர் இப்படிக் கர்வம், கௌரவம் எல்லாம் பார்க்காமல் முன் வருகிருரே என்று உணர்ந்து மரியாதைப்படுத்தத் தெரிகிறதா? வெகு நாள் உலகத்தாரின் அறியாமையாலும், பராமுகத்தாலும் அக்ஷதை தம் மேளத்தைத் தாமே வாசிக்கும் பாக்கியத்தைப் பெற்ருர். வெகுகாலம் கூட்டம் கூட்டுபவர்கள் இவருக்குத் தீராத இழவேயென்று, ஆரம்பத்தில் கூட்டத் தலைவரைப் பிரேரேபிப்பது, அல்லது தேசீய கீதம் பாடுவது, கடைசியில் வந்தனோபசார மொழிகள் சொல்வது, ஆகிய இக் கௌரவங்களையே கொடுத்து வந்தார்கள். அதையும் பாராட்டாமல் அக்ஷதை அண்ணாஜி மேடைமீது ஏறித்

தம் முழு வாக்குசாதுரியத்தையும் உலகத்தாருக்குத் தாராள புத்தியுடன் வாரி இறைத்து வந்தார். நாளடைவில் இவர் பெயரும் பொதுக் கூட்டப் பிரசங்கங்களில் வழக்கமான ஒன்ருகச் சேர்க்கப்பட்டு விட்டது. முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்பதற்குப் பிரத்தியக்ஷ சாக்ஷி அக்ஷதை அண்ணுஜிதான்.

*　　　*　　　*

அக்ஷதை அண்ணுஜியின் பெயரை இரவல் வாங்காத ஸ்தாபனத்தை நாங்கள் ஊரில் காண முடியாது. 'நகர சுகாதார சங்க'த்தின் வாராந்திரப் பிரசங்கிகளில் இவர் ஒருவர். 'ஆடு கோழி சம்ரக்ஷண சபை'யின் உபதலைவராக விளங்குகிருர். 'புகையிலை உபயோகிப்போர்' சங்கத்திற்குப் பொக்கிஷதார். 'சினிமா பார்ப்போர் சங்கம்' இவரைத் தலைவராக் கொண்டிருக்கிறது. சென்ற மாதந்தான் 'அகில இந்திய பூச்சிகள் மகாநாட்'டிற்கு அக்கிராசனம் வகித்தார். 'சர்வதேச சகோதர ஸ்தாபன'த்தை ஸ்தாபித்தவர் இவர்தான். 'பாவாடை லீக்'குக்கு இவர் சகாயம் அத்தியாவசியமாக இருக்கிறது. 'வாலிபர் வாதாடி பார்லி மெண்'டில் இவர் பிரபல மெம்பர். 'பாட்டிமார், அத்தைமார் ஐக்கிய சபை'க்கு இவர் ஒரு தீபம் போல் விளங்குகிருர். 'அகிலலோக ஆகாய சஞ்சாரி சபை'யில் இவர் ஒரு முக்கியஸ்தர். 'சர்வ பிரபஞ்ச சல்லாப சபை'யில் சிகரம்போல் விளங்குகிருர். 'சர்வ பக்ஷண சகாய மண்டல'த்தில்

இவர் ஒரு காரியதரிசி. 'அகில இந்திய கடன்காரர் கூட்டுறவு ஸ்தாபன'த்தில் இவர் ஒரு கௌரவப் பதவி வகிக்கிருர். 'அமெரிக்கன் கிராஸ் ஸொஸைடி'யில் பிரதான ஸ்தானம் இவருக்குண்டு. 'அகில தேச அமங்கிலி சகாய சபை' இவர் பேராதர வின்கீழ் நடக்கிறது. 'அகண்ட பாரத கன்னிகா கழகம்' இவரை அண்டியே நிலைத்திருக்கிறது. 'சர்வ தேச சேலைச்சங்கம்' இவர் ஆதீனத்தில் பிராபல்யம் பெற்றிருக்கிறது. இன்னும் பற்பல ஸ்தாபனங்கள் இவர் இல்லாமல் பிழைக்காதென்ற நிலையில் இருக் கின்றன.

இவ்வளவு வல்லமையும், சர்வ பிராஞ்ஞுத்துவ மும், கீர்த்தியும், பராக்கிரமமும் நிறைந்த இம் மகா புருஷரின் பூர்வ சரிதையைப்பற்றி விவரிக்கும்படி வேண்டுகிறீர்கள். 'பூர்வ சரிதை' என்ருல் குறிப்பிட்ட ஒரு காலத்திற்குமுன் நடந்த விவரங்கள்தானே? ஆனுல் அக்ஷதை அண்ணுஜி விஷயத்தில் கால சக்கரம் என்பது சுழல மறுத்துவிட்டது. சென்ற பத்து வருஷங்களாக அக்ஷதை அண்ணுஜியின் வயது இருபத் தைந்து, தப்பினுல் இருபத்துநாலு, இவைகளில் வந்து ஊர்ஜிதமாக நின்றுகொண்டு, திருவாரூர்த் தேர்போல் அசையமாட்டேன் என்கிறது. வயது விஷயத்தில் அவரைச் சென்ற பத்து வருஷங்களாகக் கேட்டவர் கள் எல்லாம் ஒரே பதிலைத்தான் வாங்கி வருகிருர்கள். இப்படி மாருத வாலிபத்திற்கும் குன்ருத இளமைக் கும் இவர் வைத்திருக்கும் இரகசியம் என்னவென்று பல ஔஷதாலயங்களும், பிரபல வைத்தியர்களும் கஜ கர்ணம் போட்டும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனுல்

சமீபத்தில் இவர் வழுக்கைத் தலையில் மட்டும் ஊறி யுள்ள தைலாதி திராவகங்கள், நூறடி சதுரமும், ஐம்பதடி ஆழமும் உள்ள குளத்தை நிரப்பக் கூடும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

* * *

அக்ஷதை அண்ணுஜி இன்று வரையில் பிரம்மசாரி தான். ஆனால் விவாகமாகாதது பெண் அகப்படாத தால் என்று நினைத்துவிடப்போகிறீர்கள். எவ்வளவோ தகப்பன்மார்கள் பெண்ணும் கையுமாக வந்து இவர் எதிரில் காத்துத் தவித்துப் பலியாமல் போனதையும், எவ்வளவோ இளம் நங்கைகள் ஹிருதயம் உடைந்து துறவறத்தையோ, ஆத்ம ஹத்தியையோ தேடிக் கொண்ட விவரங்களையும், அக்ஷதையே மனமுருகச் சொல்லுவார், கேட்டுப் பாருங்கள்.

ஆனால் இதனால் அக்ஷதை அண்ணுஜிக்கும் சேலை கட்டிய மாதருக்கும் வெகுதூரம் என்று வைத்துவிடா தீர்கள். ஸ்திரீ வாசனையே கூடாதென்று வெறுக்கும் அசட்டுத் துறவிக் கூட்டத்தைச் சேர்ந்தவரில்லை அண்ணுஜி. ஸ்திரீ வர்க்கத்திடத்தில் அவருக்குள்ள சிரத்தா பக்தியும், ஸ்திரீ வர்க்கத்திற்கு அவரிடத்தில் உள்ள அபார நம்பிக்கையும் சொல்லொணாதது. சுருங்கச் சொல்லில் எங்கள் ஊரில் ஒரு மாதர் கூட் டமோ, ஸ்திரீ சங்கமோ அக்ஷதையின் உதவியில்லாமல் நடைபெற முடியாது. துண்டுப் பிரசுரங்கள் அச் சடித்து விநியோகிப்பது, கியாஸ் லைட் அமர்த்துவது முதல், அக் கூட்டங்களுக்குப் பெண்மணிகள் சேர்த் துக்கொண்டு வருவது வரையில் எல்லாப் பொறுப்புக்

களையும் அக்ஷதை தம் பரந்த தோள்களின்மேல் ஏற்றுக் கொள்வார் என்று சொல்வது மிகையாகாது.

பூர்வ சரிதை யென்றல் புடவையில் கொண்டு வந்து முடிக்கிறேனே யென்று குறை கூறுதீர்கள். அக்ஷதையின் அடிச்சுவடுகளைப் பின்பற்றினல் போகிற இடந்தெரியாமல் போய்க்கொண்டிருப்போம் என்பதில் ஆச்சரியமில்லை.

அரசியல் அரங்கத்தில் அக்ஷதை அண்ணுஜி ஒரு மறக்க முடியாத உருபு. இவருடைய தேச பக்தியும் தேச சேவையும் பல துறைகளில் இறங்கியிருப்பது யாவரும் அறிந்த விஷயம். முதல் முதலில் மகாத்மா காந்தி அன்னியத் துணி தகனம் செய்தபோது இவரும் அன்னியச் சரக்கு தகனக் கிரியையில் ஈடுபட்டவர் தான். அன்று கொளுத்திய சிகரெட்டுதான் இன்றும் அவர் திருமுகத்தில் எரிந்து சாம்பலாகிக் கொண்டிருக்கிறது.

சமீபத்தில் காங்கிரஸ் தலைமையைப்பற்றிப் பிரஸ்தாபம் ஏற்பட்டபோது, தாமே அப் பொறுப்பை ஏற்றுத் தேசத்தை விடுதலை செய்வதாக அண்ணுஜி முன் வந்தார். ஒன்றும் தெரியாத அப்பாவிகள் வேறு யாரையோ தேர்ந்தெடுத்துவிட்டார்கள். இதனுல் இவருக்குத் தலைவர்கள் மேலும், தேசத்தின் மேலும் வெறுப்பு ஏற்பட்டதில் ஒன்றும் அதிசயமில்லை. பொது சேவையை விட்டு விலகி விடுவதாகப் பயமுறுத்தியிருக்கிருர். நானும் "ஐயோ. அப்படிச் செய்து விடாதீர்கள். குடி முழுகிப் போய்விடும். உம்மைப்போல் ஒருவர் இருப்பதால்தான் இந்த தேசம் பிழைத்து வருகிறது" என்று தடுத்தேன்.

ஊம்...ஊம்...கேட்கவில்லை. தேசத்தையே விட்டு வெளியேறுவதாக பிரதிக்ஞை செய்தார்.

'அமெரிக்கத் தலைவரிடத்திலிருந்து அழைப்பு வந்திருக்கிறது. சிக்கலான சில அரசியல் விஷயங்களைப் பற்றி என்னிடத்தில் நேரில் யோசனை கேட்கவேண்டுமாம். பேசாமல் அமெரிக்காவுக்குப்போய் ஓய்வு எடுத்துக் கொள்கிறேன்' என்று விரக்தியாகக்கூறினார்.

'நல்ல காரியம். அங்கே போனால் டிம்பக்குவுக்குப் போகாமல் வரக்கூடாது. இந்தியாவைப்பற்றியும் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு வாருங்கள். நீங்கள் சொன்னால்தான் நடக்கும்' என்றேன்.

* * *

சென்ற மாதம் அக்ஷதை அண்ணாஜி ஒரு மாதிரிப் புது உடையில் தரிசனமளித்தார். நீளமான கறுப்புக் கோட்டு, ஜரிகைத் தலைப்பாகை, புன்னகை இவைகளால் அலங்கரிக்கப்பட்டவராகத்தோன்றினார்.

'ஏது. தடபுடலாக இருக்கிறதே. அமெரிக்காவுக்கு எப்போது பிரயாணம்?' என்று கேட்டேன்.

ஏதோ சில டாக்டர்கள் அவர் தேகஸ்திதியைப் பற்றிக் கூறிய வரலாறுகளைச் சொன்னார்.

'நாளைக்கு மைசூர் போகிறேன். தசராவுக்காக மைசூர் தர்பாரிலிருந்து அழைப்பு வந்திருக்கிறது.

போகாதபோனால் மகர்ராஜாவும், திவானும் ஏதா வது மாருக நினைப்பார்கள்' என்றார்.

'வாஸ்தவம். வாஸ்தவம். நீங்கள் போகாமல் தர்பார் எப்படி நடக்கும்? மகாராஜா மனதைப் புண் படுத்தி விடாதீர்கள். அவசியம் போங்கள். அதற் குத்தானு இந்தக் கோலம் எல்லாம்' என்றேன்.

'ஆமாம்...போய்த்தான் தீரவேண்டும்...முதல் வகுப்புப் பாஸ்கூட அனுப்பியிருக்கிறார்கள். அது கிடக்கு. நீ ஓர் ஒத்தாசை பண்ணவேணுமே. அர் ஜெண்டா காஷ் கொஞ்சம் வேண்டியிருக்கு. இந்தச் செக் தருகிறேன். இதை வைத்துக்கொண்டு நூறு ரூபாய் இருந்தால் கொடு. நாளை மைசூர் போவதற் குள் வேணும்' என்றார்.

'ஆகா. நாளைக்கு அவசியம் பார்த்துத் தரு கிறேன்' என்று சொல்லிவிட்டு அவசரமாக நடந்தேன். என் காலெண்டரில் 'நாளைக்கு' இன்றுவரையில் வர வில்லை.

கெட்டுப்போன ஞாயகம்

மதுரை பிளாட்பாரத்தில் ரயிலேறுவதற்குப் போய்க் கொண்டிருந்த நான் தெரியாத்தனமாக அவர் மேல் போய் மோதிக் கொண்டிருப்பானேன்? போதா தற்கு ஜன்மத்திலும் அவர் முகத்தைப் பார்த்திராத நான் ஏதோ தெரிந்தவன் போல், 'அடாடா. நீங்களா? பார்க்கவில்லை' என்று அசட்டுத்தனமாக மன்னிப்பும் கேட்டிருக்க வேண்டுமா? உடனே அவரும் பத்து வருஷமாகப் பிரிந்த பிறகு சந்தித்த பந்துவைப்போல், 'ஓஹோ. நீங்களா? நானும் பார்க்கவில்லை' என்று கொண்டாட ஆரம்பித்தார். அத்துடன் நிறுத்தி

யிருந்தால் நன்று யிருந்திருக்கும். அவர் விடவில்லை. 'எங்கே. ரொம்ப தூரமோ?' என்று விசாரித்தார்.

'இல்லை ; திருச்சிறுப்பள்ளி வரையில்தான்' என்று நான் பதில் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

'நானும், அந்த ரயிலுக்குத்தான் போகிறேன்' என்று மகிழ்ச்சியுடன் அவர் தெரிவித்துக் கொண்டார்.

'ஓ, அப்படியா ?' என்றேன்

அவர் மேலே பேசுவதற்குள் நல்ல வேளையாக ரயிலும் வந்து விடவே, நானும் விமோசனம் பிறந்த தென்றெண்ணி, 'நான் வருகிறேன் ; அப்புறம் பார்க்கிறேன்' என்று சொல்லிக் கொண்டே கூட்டத்தில் நழுவினேன். ரயிலில் காலியாக விருந்த கடைசி வண்டியில் ஏறி பிளாட் பாரத்துக்கு எதிர்ப்புற மிருந்த ஒரு கோடி ஸீட்டில் உட்கார்ந்து கொண்டேன். அந்த மனிதன் என் தலையைக் கண்டு அந்த வண்டியில் ஏறி விடுவாரோ என்ற திகில் என்னை விடவில்லை.

முன்பின் தெரியாத அவரிடத்தில் எனக்கு ஏதனால் அவ்வளவு வெறுப்பு ஏற்பட்டது என்பதற்குக் காரணம் ஒன்றும் கிடையாது. பின்னால் ஏற்படப் போகும் சம்பவங்களுக்கு அறிகுறி முன்னரே மனதில் தோன்றி விடும் என்று சித்த நிபுணர்கள் கருதுகிறார்கள். ஒரு வேளை அப்படியும் இருக்கலாம். அவர் என்னை ரொம்பத் தெரிந்தவர்போல் பாவித்து ஏன் நடித்தாரோ அறியேன்.

ரயில் சற்று நகர ஆரம்பித்தது. தடாலென்று வெகு அவசரமாக என் கம்பார்ட்மெண்டுக் கதவு திறந்தது. வியர்க்க விறுவிறுக்க ஓர் ஆசாமி பொத்தென்று ஸீட்டில் வந்து உட்கார்ந்தார். யார் என்று நினைக்கிறீர்கள் ? அவர்தான்—என் பிளாட்பார 'நண்பர்'. எனக்கு அப்பொழுது ஏற்பட்ட ஆத்திரத்துக்கு

அளவில்லை. எப்படியாவது அவர் கண்ணில் படாமல் இருந்தால் போதுமென்று கையிலிருந்த பத்திரிகையைப் பிரித்து முகத்தை மறைத்துக் கொண்டேன்.

'உஷ். அப்பாடா. இரண்டு நிமிஷம் காப்பி சாப்பிட்டு வரலாமென்று போனால் பாவி ரயிலை விட்டு விட்டான்' என்று அந்தப் பிராமணன் யாரிடம் குறை கூறினார் என்று எனக்குத் தெரியாது. ஆனால் ரயிலை விட்ட பாவி இன்னும் இரண்டு நிமிஷம் முன்னாலேயே விட்டிருந்தால் நன்றாயிருந்திருக்குமென்றே எனக்குத் தோன்றிற்று.

'இன்னிப் பேப்பரா? என்ன ஸார் விசேஷம்?' என்ற கேள்வி என் காதில் விழுந்தும், செவிடுபோல் இருந்து விட்டேன்.

'வெளி ஷீட் ஒன்று இப்படி கொடுங்கோ, ஒரு நிமிஷம்' என்று ஆவலுடன் ஒரு சாண் கிட்டே நகர்ந்து, கையை நீட்டினார். பல்லைக் கடித்துக் கொண்டு, இதுவரையில் அவர் வந்ததே அறியாதவன் போல் திடுக்கிட்டு, 'ஊம்...எது...ஓ. எடுத்துக் கொள்ளுங்கள்' என்று அந்த பேப்பர் முழுவதையும் அவர் கையில் சமர்ப்பித்து விட்டு, இனியாவது சும்மா இருக்கமாட்டாரா என்று எதிர் பார்த்திருந்தேன்.

என் முகத்தை நன்றாகக் கண்டதும், அவர் முகம் மிகவும் மலர்ச்சியடைந்தது. 'ஓ. நீங்கள் தானா. கடைசியில் ஒரே வண்டியில் தான் போகிறோம்.' என்று அவருக்குப் பொங்கின சந்தோஷத்தை வெளியிட்டுக் கொண்டார். அவருடைய பேரானந்தத்தில் நான் சம்பந்தப்படாதவனாயினும், வெளியில் சொல்லமாட்

டாது, 'ஹெம்...ஆமாம்...ஹி...ஹி...' என்று அசடு வழிய இளித்தேன்.

பத்திரிகை கேட்டவர், பத்திரிகையல்லவா ஒழுங்காக வாசிக்க வேண்டும்? இரண்டு நிமிஷம் அதைப் புரட்டிவிட்டு, மறுபடியும் ஆரம்பித்துவிட்டார்.

சம்பாஷணை உபாயத்தால் என்னை வசப்படுத்த முடியாத அவர், தாம்பூலம் வைத்து அழைக்கத் தொடங்கினர். பளபள வென்றிருந்த பெரிய பித்தளை வெற்றிலைப் பெட்டியைத் திறந்து என்னிடம் நீட்டி, 'வெற்றிலை போடுங்கள்.' என்று வருந்தி யழைத்தார். அச்சமயம் அப்பெட்டியைப் பிடுங்கி அவர் தலையில் போட்டு நொறுக்க வேண்டுமென்ற உன்னதமான உணர்ச்சி எனக்குப் பிறந்தது. அஹிம்ஸா தர்மம் ஒன்று குறுக்கிட்டு அதை தடுத்தது.

'இல்லை; வேண்டாம்' என்று மறுத்தேன்.

பிறகு சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு கிச்சிலிப் பழத்தை உரித்து வைத்துக் கொண்டு உபசாரம் செய்தார்.

'பல்வலி' என்று சாக்குச் சொன்னேன்.

'ஐயோ. பல்வலியா? அப்படித்தான் எனக்கும் வந்து ரொம்ப அவஸ்தைப் பட்டேன். கடைசியில் டாக்டர் இரண்டு பல்லைப் பிடுங்கி விட்டான்...இதோ பாருங்கோ' என்று கிருஷ்ண பரமாத்மா மண்ணைத்தின்று விட்டு யசோதையிடம்

நடந்துகொண்டபடி நடித்தார். அந்தப் பாழாகப் போன டாக்டர் பாக்கி முப்பது பற்களையும் விட்டு விட்டானே என்று நான் மனதிற்குள் வருத்தப் பட்டேன்.

எத்தனை நேரம்தான் இப்படி அவரை நான் அறிந் தவன்போல் பாவனை செய்வது? அவருடைய அன்னி யோன்னியமோ மேன்மேலும் விருத்தி யடைந்து கொண்டே போயிற்று. முதலில் ஒரு சிறிய தவறு செய்ததை ஒளிக்க முயன்றதால் ஏற்பட்ட விபரீத மல்லவா இது என்று வருந்தினேன். பார்த்தேன்; உள்ளதைச் சொன்னுலொழிய வேறு வழி யில்லை என்று எண்ணி விஷயத்தை உடைத்துப் பேசி விட்டேன்.

'ஸார். மன்னிக்கணும், ஆனுல் தாங்கள் யாரென்று எனக்குத் தெரிய வில்லையே.?' என்றேன்.

'ஹா ஹா...ஹா...' என்று திடீரென்று அந்த மனிதன் ரயில் அதிரும்படி சிரிக்க ஆரம்பித்ததும் எனக்குப் பயமாகப் போய்விட்டது. அப்பொழுது தான் மனிதனுக்கு மூளை கீளை சரியாக இல்லையோ எனச் சந்தேகிக்கத் தொடங்கினேன்.

சிரித்த வேகம்போல் தடக்கென்று ஓய்ந்தார். உடனே இன்னும் என்னருகில் வந்து, 'நான் யாரென்று எனக்கே தெரியவில்லை, ஸ்வாமி. அதுதான் உங்களுக் குத் தெரியுமோவென்று பார்த்தேன்' என்று இரகசிய மாகச் சொன்னுர்.

சரிதான், இனி 'ஸெமி' இல்லை, முற்றின சரக்குத் தான் என்ற முடிவிற்கு வந்தேன்.

" ஆனால், 'ராமக்கோனன் யாத்ரா ஸ்பெஷல்'லே கொண்டைத் தடியால் என் மண்டையில் தட்டினவர் நீர் இல்லையா?" எனக் கேட்டதும் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

சங்கிலியை இழுத்து வண்டியை நிறுத்தி இறங்கி விடலாமா எனத் தோன்றிற்று. ஐம்பது ரூபாய் அபராதம் கொடுக்கச் சக்தி இல்லாததால் அவ்வெண்ணத்தை யொழித்தேன்.

இதென்னடா சங்கடம், வரவர ஆபத்தாகிக் கொண்டிருக்கிறதென்று நடுங்கினேன்.

" இதோ பாரையா...இங்கே...இதோ முண்டு தெரிகிறதே...என் தலையிலே இப்படி நொறுக்கிப் பிட்டான் அந்தப்பாவி; உம்முடைய சாயலாகவே இருந்தது...' என்று சொல்லிக் கொண்டே குனிந்து தன் தலை உச்சியில் குமிழிபோலிருந்த முண்டின்மேல் என் கையைப் பலாத்காரமாக இழுத்து வைத்துத் தடவிப் பார்க்கச் செய்தார். பிறகு ஓவென்று அழ ஆரம்பித்து விட்டார்.

இனி இந்தப் பைத்தியத்தினிடம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று நினைத்து மெதுவாகப் பேசித் தப்பிக்க உத்தேசித்தேன்.

'த்ஸோ...த்ஸோ... பாவம்...யாரோ அந்தப் பாவி...' என்று சொல்லிப் பரிதாபப் படுவதுபோல் பாசாங்கு செய்தேன். உண்

மையில் அவர் நினைத்ததுபோல் நானே அந்தக் கொண்டைத் தடிக்கு சொந்தக்காரனு யிருந்திருந்தால் அதைச் சரியாகவே உபயோகித்திருப்பேன்.

'...நான் யார் என்று எனக்கே தெரியாததற்குக் காரணம் இதுதான் ஸ்வாமி...' என்று விம்மிக் கொண்டே தம் கதையை ஆரம்பித்தார் :

'போன வருஷமோ...இல்லை அதற்கு முன் வருஷமோ...எனக்கு ஞாபகமில்லை. இந்த 'ராமக்கோனுன் யாத்ரா ஸ்பெஷ'லில் நானும் ஒரு யாத்ரிகனுகச் சேர்ந்தேன். காசி முதலிய இடங்களில் போய் என் பாபத்தைக் கழிக்கலாம் என்று கிளம்பினேன். பாபத்துடன் ஞாபக சக்தியையும் இழந்துவிட்டேன்...அது எப்படி நேர்ந்ததென்று எனக்கே தெரியாது. எனக்கு எல்லாம் ஒரு ஸ்வப்னம்போல் வெகு மங்கலாகத் தோன்றுகிறது. பிறகு என்னுடன் வந்தவர்கள் சொல்லித்தான் தெரியும்...நாங்கள் போய் காசியில் இறங்கி ஸ்நானம்செய்துவிட்டு மறுநாள் பாட்னுவை யடைந்தோம். அங்கு அன்று இரவு வண்டியிலேயே கழித்தோம். நான் வழக்கம்போல் ரயில் மேல்தட்டில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தவன் திடீரென்று எங்கேயோ, யாராலோ உலுக்கிக் குலுக்கிப் பிடித்து இழுக்கப்படுவதுபோல் உணர்ந்தேன். சற்று நேரத்துக்கெல்லாம் தொப்பென்று கீழே தள்ளப்பட்டேன்.

'அன்றுமுதல் ஆறுநாள் வரையில் பிரக்ஞை யில்லாமல் ஆஸ்பத்திரியில் கிடந்தேன். வெளியில் வந்ததும் யாத்ரா ஸ்பெஷலையும் காணேம், ஒன்றையும் காணேம்...ஆனுல் ஞாபகசக்தி போய்விட்டதால் நான் அந்த ஸ்பெஷலைப்பற்றி அப்பொழுது நினைக்கவுமில்லை.

அதற்கு முந்தைய வாரம் பூகம்பம் ஒன்று ஏற்பட்டதாகவும், ஸ்டேஷன் பூராவும் விழுந்துவிட்டதாகவும், காயம்பட்டவர்களில் நான் ஒருவனென்றும் ஆஸ்பத்திரியில் சொல்லித்தான் தெரியும். என் பெயர் அவர்களுக்குத் தெரியாது. நானும் மறந்து விட்டேன்... உம்மைப்போல் என்னுடன் அந்த ஸ்பெஷலில் வந்த ஆசாமி ஒருவர் அவருடைய கொண்டைத் தடியால் தட்டினதாக மட்டும் எனக்கு ஞாபகமிருக்கிறது. நான் சென்றபோது என்னிடமிருந்த ரூபாய் ஐந்நூறும் பெட்டியில் வைத்திருந்தேன். பெட்டி என்ன ஆயிற்றோ தெரியவில்லை. உம்மைப்போல் இருந்த அந்தக் கொண்டைத் தடி ஆசாமி, 'அந்தப் பெட்டி எங்கே வாங்கினீர்கள்? நன்றாயிருக்கிறதே' என்று சொல்லி அதில் கண் வைத்துக்கொண்டே இருந்தார்.'

ஏதேது, நமக்கே திருட்டுப் பட்டம் கட்டி விடும் போலிருக்கிறதே இந்தப் பைத்தியம் என்று அஞ்சினேன்.

'இப்பொழுது இப்படி ஊரூராகத் திரிகிறேன். என் வீடு வாசல் ஞாபகமே போய்விட்டது... உங்களைப் போல் யாராவது தெரிந்த மனுஷாளைப் பார்த்தால்...' என்று அவர் இழுக்க ஆரம்பித்ததும், அவர் உண்மையில் பைத்தியமா, காரியப் பைத்தியமா என்று சந்தேகிக்க ஆரம்பித்தேன். அவர் சொன்ன விருத்தாந்தத்தில், பல விஷயங்களில் ஞாபக சக்தி போயிருந்தாலும், கொண்டைத் தடி மனுஷன், என்னுடைய ஜாடையாக அவன் இருந்தது, அவனுக்கு அவர் பெட்டியின்மேல் கண், அவன் கொண்டுபோன ரூபாய் இதெல்லாம் மட்டும் எப்படி ஞாபகம் வந்தது என்று புரியவில்லை.

எல்லாம் ஒரே 'கொளரிபிகேஷ'னாக இருந்தது. மனிதன் பைத்தியமா அசடாவென்று நிர்ணயிப்பது கஷ்டமாயிருந்தது.

'எல்லாம் சரிதான். அவ்வளவு ஞாபகமிழந்தும் உங்கள் வெற்றிலைப் பெட்டியை மட்டும் மறக்காமல் எடுத்து வந்தீர்களாக்கும்' என்று குத்தலாகச் சொன்னேன்.

'ஓ, அதுவா...அது உங்களைப்போல் தெரிந்த மனுஷாள் யாரோ கொடுத்தது' என்றார். அதற்குள் ஸ்டேஷனும் வந்தது. தப்பித்தோம் என்று நானும் அவசரமாக இறங்கினேன்.

* * *

மண்டையில் ஒரு முண்டு இருக்கும் மனிதரை வெற்றிலைப் பெட்டியுடன் யாராவது சந்தித்தால் 'இதோ ஒரு நிமிஷம் எழுதிவிட்டுத் தருகிறேன்' என்று என்னிடம் வாங்கிக்கொண்ட பதினைந்து ரூபாய் பேனா ஒன்று அவர் சட்டைப் பையில் இருக்கிறதா என்று கவனியுங்கள். பிறகு நீங்களாவது கொஞ்சம் பத்திரமாக இருங்கள்.

மாப்பிள்ளைத் தோழன்

தலைதீபாவளிக்கு மாமனார் வீட்டிலிருந்து அழைப்பு வந்ததும், ரகுராமனுக்குப் போகவேண்டும் என்ற ஆசைதான். தனியாகத் தான்மட்டும் போவதற்குக் கூச்சம் சற்று. ஆகவே தனது உயிர்த்தோழன் சாமிநாதனைக் கூட வரும்படி வருந்தியழைத்தான்.

' வாடா, சாமி. கூப்பிட்டால் என்னமோ கிராக்கி பண்ணுகிறாயே. ஒரு வாரம்தானே ? அதற்குள் நீ படித்துக் கிழித்துவிடப் போகிறாயாக்கும். பம்பாய் பார்த்ததில்லை நாம் இருவரும். தமாஷாகப் போய் வரலாம், வா ' என்று வருந்தினான்.

சாமி உக்கிர பிரம்மசாரி. அவனுக்கு கலியாணம் ஆன புது மாப்பிள்ளைகளைக் கண்டாலே கேலியாக இருக்கும். மனிதர்கள் எதற்காகக் கலியாணம் செய்துகொண்டு திண்டாடுகிறார்கள் என்பதே அவனுக்கு அதிசயமாயிருந்தது. ரகுவைப்போல் உள்ள சாதுப் பிராணிகள் கலியாணம் செய்துகொள்வதெல்லாம் தன்னைப்போல் புத்திசாலி பிரம்மசாரிகளைத் துணைக்கு மாமனார் வீட்டுக்கு அழைத்துச் செல்லும் உபத்திரவத்துக்குத்தான் எனத் தோன்றியது.

சாமிக்குத் தன் படிப்பைத் தவிர வேறு லௌகிக விஷயங்களில் புத்தி செல்லவில்லை. கலாசாலை படிப்பு முடியும்வரையிலாவது, அவன் கிரகஸ்தாசிரமம் புகக்கூடாதென்று தன் தோழன் ரகுவினிடமிருந்து சபதம்

வாங்கியிருந்தான். ஆனால் ரகு லீவுக்கு ஊருக்குப் போயிருக்கையில் இச்சபதத்தை மறக்க நேரிட்டது அவன் குற்றமில்லை. நல்ல பெண்ணும், நிறையப் பணமுமிருக்கும் மாமனாரும் வாய்த்தால் அவன்தான் என்ன செய்வான்? விவாக மடுவில் இறங்கியது சாமிக்குத் துளிக்கூடப் பிடிக்கவில்லை. ஆப்த நண்பன் என்பதால் ஒருவாறு அவன் தப்பை மன்னித்து அவனிடம் சகஜமாகவே இருந்து வந்தான்.

ஆனால் தலைதீபாவளிக்காக வேலைமெனக்கட்டு அவன் போவதுமல்லாமல் தன்னையும் எதற்காக கூப்பிடுகிறான் என்பது சாமிக்குப் புரியவில்லை.

'உனக்குத்தான் மாமனார் வீடு, தலைதீபாவளி. எனக்கு என்ன வந்தது? நான் எதற்காக உன்னோடு தொத்திக்கொண்டு வரவேண்டும்?' என மறுத்தான்.

'பாதகமில்லை. வாயேன். உனக்கென்ன. என்னை விட அதிக மரியாதை நடக்கும், பாரேன்; பம்பாய் போக வேறு எப்பொழுது நமக்குச் சந்தர்ப்பம் ஏற்படப்போகிறது? இருவரும் தமாஷாகப் போய்வரலாம். ஊர்களைச் சுற்றிப் பார்த்து வரலாமே' என்று ரகு ஆசை காட்டி வருந்தினான்.

கடைசியில் உபத்திரவம் பொறுக்காமலும், நண்பன் வற்புறுத்தலுக்குப் பிடிவாதமாக மறுக்க முடியாமலும், ரகுவுடன் போக சாமி அரை மனதுடன் 'சரி' என்று தலையை அசைத்தான்.

*　　*　　*

ரகுவின் மாமனார் பம்பாயில் ரயில்வேயில் பெரிய உத்தியோகஸ்தர். அவர் பெயர் ஏ. எஸ். எஸ். ஐயர்

எனச் சுருக்கப்பட்டு விளங்கிற்று. ஐயர் தற்காலப் போக்கை ஒட்டிய பெரிய மனிதர். சீர்திருத்த மனப்பான்மை கொண்டவர். அதாவது அவருடைய சீர்திருத்தம் தம்முடைய பிள்ளைகளுடன் பெண்களுக்கும் படிப்புச் சொல்லிக்கொடுக்கும் வரையில் எட்டிற்று. மூத்த பெண்ணாகிய சம்பகாதான் ரகுவின் மனைவி. அவள் மெட்ரிகுலேஷன் வரையில் எட்டிவிட்டாள். அதற்குப்பிறகு சம்பந்திகள் எதிர்ப்பும், ஐயர் மனைவியின் மனோபாவமும், அவருடைய சீர்திருத்த நோக்கத்துக்குக் குறுக்கேநின்று பெண்ணின் படிப்பை நிறுத்திவிட்டன. இரண்டாவது பெண் ரேவதிக்கு மட்டுமாவது உயர்தரப் படிப்பு அளிக்க வேண்டுமென்று அவருக்கு ஆசை. ரேவதிக்கு இப்பொழுது பதினைந்து வயது இருக்கும். கவிகள் வருணிக்கும், கமலநயனங்கள், மெல்லிய இடை, அன்ன நடைபோன்ற சௌந்தரிய பாக்கியங்கள் இல்லாவிட்டாலும், அவள் முகத்தில் தேஜஸ் இல்லாமல் போகவில்லை. அவளுடைய கோணல் வகுட்டின் லாவண்யமும், காதில் லோலாக்குத் தொங்கும் அழகுமே பெண்வாசனையே கூடாதென்றிருந்த சாமியின் கண்களைக்கூடக் கவர்ந்தன வென்றால் சொல்வானேன் ?

மாப்பிள்ளைத் தோழன் ஹோதாவில் சாமிக்கு ஷோடசோபசாரங்களும் நடந்தன. ஆனால் எல்லா உபசாரங்களையும்விட, ரேவதி 'நீங்கள் காப்பி சாப்பிடலை ? சாப்பிட வரலை ?' என்று விசாரித்தலே அவனுக்கு ராஜ உபசாரமாகத் தோன்றிற்று.

வந்த இரண்டு நாளைக்குள்ளேயே சாமிக்கு ரகுவின் மாமனார் வீடு ரொம்பப் பிடித்துப் போய்விட்டது.

தன் வீட்டில் தன் தங்கை ஏதாவது 'பலப்பம் வேணும்' 'பப்ரமுட்டு வேணும்' எனக் கேட்டால் கூட சாமி சள்ளுப்புள்ளென்று விழுவான். பிறந்தது முதல், பெண்கள் என்றாலே துவேஷம் அவனுக்கு. பெண் பிறவிகளை பூமிதேவிக்கு ஒரு பாரமாகக் கருதியவன். அப்படிப்பட்டவன் இப்பொழுது பெண்களிடத்தில் தனக்கிருந்த மனப்பான்மையை மாற்றிக்கொள்ள வேண்டி வந்தது. அதற்குக் காரணம் ரேவதிதான்.

பொதுவில் குழந்தைகள் என்றால் சாமிநாதனுக்குப் பதினெட்டாம் பொறுத்தம். அவனிருக்குமிடத்திலிருந்து ஐந்து மைல் சுற்றுவட்டாரத்திற்குள் குழந்தையென்ற வாசனை கண்டாலே காததூரம் ஓட்டம் பிடிப்பவன் சாமிநாதன். இது அவன் நண்பன் ரகுவுக்கு நன்றாகத் தெரியும். அதனால்தான் தன்னுடைய மைத்துனன் அம்பிப் பயலிடத்தில் சாமிக்குத் திடீர் என்று ஏற்பட்டிருந்த வாஞ்சையைக் கண்டு அதிசயமடைந்தான் ரகு. குழந்தைகளைக் கையால்கூடத் தொடாத சாமி, அம்பிப் பயலை மடியில் தூக்கி வைத்துக்கொண்டு கொஞ்சுவதும், உப்புமூட்டை தூக்குவதும், குதிரை போடுவதும் ஆச்சரியத்திலும் ஆச்சரியமா யிருந்தது. அம்பிப் பயலுடைய விளையாட்டுச் சாமான்கள் 'ஸ்டாக்' திடீரென்று அதிகரிக்கத் தொடங்கியது. வீட்டில் தன் தம்பி தங்கைகள், மருமான் மருமகன்களுக்கு ஒரு ஆரஞ்சு பெப்ரமுட்டுக்கூட வாங்கிக்கொடுக்காத சாமி பம்பாயில் உள்ள சாகலேட்

பிஸ்கோத்துக் கடைகளைச் சூறையாடிக் காலிசெய்து அம்பிப் பயல் வயிற்றிலும் சட்டைப் பைகளிலும் நிரப்ப ஆரம்பித்தான்.

இதெல்லாம்கூட அவ்வளவு அதிசயமில்லை. சாக லேட்டுகளை வாங்கிக்கொண்டு வந்து அம்பிக்குக் கை நிறையக் கொடுத்துவிட்டு, 'இது நோக்கு' என்று உரக்கச் சொல்லிவிட்டு 'இது அக்காவுக்கு' என்று ஸ்வரத்தை இறக்கிச் சொல்லுவதை அகஸ்மாத்தாகக் கேட்டுக்கொண்டு வந்த ரகுவுக்குச் சிரிப்பு அடக்கமுடியாமல் வந்துவிட்டது. ஊர் சுற்றிப் பார்க்கப் புறப்படும்போதும், ஸினிமா, வேடிக்கைகள் பார்க்கப் போகும்போதும், 'பசங்களை' அழைத்துக்கொண்டு போகவேண்டும் என்றதில் சாமிக்கு இருந்த ஊக்கம் மாப்பிள்ளை ரகுராமனுக்குக் காணேம். அதிலும் 'எல்லாப் பசங்களும்' வந்தால்தான் சாமி உத்ஸாகமாக இருப்பான். முக்கியமாக ரேவதியின் கண்ணொளிகள் அவனுக்கு வழி காட்டாவிட்டால் ஊரே அஸ்தமித்ததுபோல் தோன்றும்.

ரேவதி வெகுளி; பழைய காலத்துப் பாட்டிகளைக் கேட்டால் "ஒன்றும் தெரியாத பெண்" என்பார்கள். வயது வந்த நமது நாட்டுப் பெண்களில் பலரைப்போல் அவள் புருஷர்களைக் கண்டால் நாணிக்கோணி தலை குனிந்து கதவிடுக்கில் போய் ஒளிந்து கொள்பவளல்ல. இதற்குக் காரணம் ஓரளவு அவளுக்குக் கொடுக்கப்பட்டுவந்த படிப்பும் பயிற்சியும் என்றுகூடச் சொல்லலாம். அவள் தகப்பனுர் மிஸ்டர் ஐயர்தான் விசால நோக்கங்கள் கொண்டவராயிற்றே. பெண்களும் புருஷப்பிள்ளைகளைப் போல் சங்கோசமின்றி ஸ்வபாவமாக

நடந்துகொள்ள அவர் பெரிதும் இடம் கொடுத்திருந் தார். மேலும், ஒரு விஷயம் நீங்கள் கவனிக்கலாம். உள்ளூரில் மகா சம்பிரதாயத்துடன் நடந்துகொள்ளும் பலர், பம்பாய் முதலிய நாகரீக நகரங்களுக்குக் குடியேறிவிட்டாலே, அங்கே அவர்கள் வாழ்க்கை, நோக்கம் முதலியவை மாறுதலை அடைந்து "விசால" மடைகின்றன.

தனது ஸ்வபாவம், படிப்பு, பயிற்சி இவைகளின் பயனாக ரேவதி வெகுளியாக இருந்தது சாமிநாதனுக்கு வெறுப்பளிக்கவில்லை.

காலையிலும் மாலையிலும் அவள் கொண்டுவந்து கொடுக்கும் காப்பி, அவ்வளவு சிரமப்பட்டு க்ஷீரஸாகரத்தைக் கடைந்து தேவர்கள் எடுத்த அமிர்தத்திலும் இனிதாக இருந்தது. சாமிநாதன் மீண்டும் ஹைஸ்கூல் மாணவனானதிற்கும் அந்த ரேவதிதான் காரணம். அவனுடைய ஸ்கூல் நாட்களில் வேப்பங்காயாக அவன் ரஸித்த கணக்குப் பாடங்கள் இப்போது எப்படியோ பம்பாய் ஜிலேபியாக இனிக்க ஆரம்பித்தன. இல்லா விட்டால் ரேவதியின் "ஹோம் வர்க்" பாடங்களை அவ்வளவு திறமையுடன் சாமிநாதன் எப்படிச் செய்து கொடுத்திருக்க முடியும்? அதிகம் சொல்வானேன்?

புஷ்பபாணன் சாமிநாதனைக் குறிபார்த்துவிட்டான். ஆனால் இம்முறை அந்த மன்மதன் பாணம் அந்த ஐந்து மலர்கள் ரூபத்தில் இல்லை. ஒரு டம்ளர் காப்பி ரூபமாக விடுத்தான்.

சாமிநாதனும் ரகுராமனும் வந்து சில நாட்கள் கழிந்தன. சாமிநாதன் கண் வண்டுகள் ரேவதியின் நேத்திராரவிந்தங்களின் ஒளி மதுவில் மயங்கிநின்று நாற்பத்தெட்டு மணி நேரமாகவில்லை. ரகுராமனுக்கும் சாமிநாதனுக்கும் ரேவதி காப்பி கொண்டுவந்தாள். ரகுராமன் வாசலில் நாற்காலியில் உட்கார்ந்து காப்பி சாப்பிட்டுக் கொண்டிருந்தான். சாமிநாதன் உள்ளே நாற்காலியில் சாய்ந்து பேப்பர் படிப்பதுபோல் பாவனை செய்துகொண்டிருந்தான். என்ன படித்த பெண்ணாயிருந்தாலும் புதிதாகையால், பேசாமலே ரேவதி சாமிநாதன் உட்கார்ந்திருந்த நாற்காலிக் கட்டையின் மேல் காப்பியை வைத்தாள். அந்தச் சமயம் ஜன்னல் புறம் ஒளிந்து பார்த்துக்கொண்டிருந்த மன்மதப் பெருமான் விட்டான் ஓர் அம்பு. அது அந்தக் காப்பி டம்ளரைக் கவிழ்க்கவே சாமிநாதன் வெளியே போவதற்காக அணிந்திருந்த ஜரிகை வேஷ்டி பூராவும் காப்பிச் சாயம் தோய்த்தாகி விட்டது. ரேவதிக்கு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை. கானகத்தில் காற்றோசை கேட்டு திடுக்கிடும் மானைப் போல் மிரண்டு விழித்தாள்.

3

(இந்த உபமானங்கள் கதாசிரியரின் சொந்தக் கற்பனைகள் என்று நம்பி ஏமாற வேண்டாம். சாமிநாதனுடைய கவிதா சக்தி அந்தச்சமயத்தில் ரேவதியின் நிலையை அப்படி எல்லாம் சித்திரித்துக் கொண்டது).

ரேவதிக்கு வெட்கத்தால் முகம் சிவந்தது. சற்று ஸ்தம்பித்து நின்றுவிட்டு லஜ்ஜையி லாழ்ந்தவளாய் ஒன்றும் செய்யத் தோன்றுமல் உள்ளே ஓடிப்போய் விட்டாள். அவள் கண்களான தாமரை இதழ்களில் (மீண்டும் வர்ணனை என்னுடையதல்ல; சாமிநாதனுடைய அபார கவிதா சக்தியின் கற்பனை) பனித் துளிகள் தோன்றியதுபோல் நீர்த்துளிகள் கிளம்பியதாக சாமிநாதன் நினைத்துக்கொண்டான்.

இந்தமாதிரி சமயத்தில் நீங்களும் நானுமாயிருந்தால் என்ன செய்திருப்போம்? ஜரிகை வேஷ்டியில் உயிர் வைத்திருப்போமானுல், முன்கோபிகளானுல், முகத்தைச் சிணுக்கிக்கொண்டு "சனி, தரித்திரம். இருக்கிற ஒரு வேஷ்டியையும் காப்பியைக் கொட்டிப் பாழாக்கிவிட்டாயே" என்று வெளியில் சொல்லாவிட்டாலும் மனதில் நினைத்துக்கொண்டிருப்போம்.

அல்லது சாமிநாதன் ஓர் அசல் கதாநாயகனுயிருந்தால், முகம் சிவந்து லஜ்ஜித்து ஓடும் அப்பெண்ணை வழிமறித்து மண்டிபோட்டு "மானே, மயிலே, குயிலே...காப்பியபிஷேகக் கழனியப்பன் - உந்தன் பாதப் பிரசாதம் பரமானந்தம்" என்று பாடியிருப்பான். நீங்களும், நானும் கதாநாயகன் இல்லையென்பது இக்கதை முடிவதற்குள் நிச்சயமாகத்

தெரிந்துவிடும். ஆகவே சாமி மேற்குறிப்பிட்ட இரு காரியங்களையும் செய்யவில்லை. பின் என்ன செய்தான்? அவனும் திக்கித்து ஒன்றும் சொல்லத் தெரியாமல் விழிக்கத்தான் விழித்தான். ஆனால் "ஜரிகை வேஷ்டியில் காப்பியைக் கொட்டிய எந்தப் பெண் ஜடத்தின் மேல் எந்த ஆண் முட்டாளுக்குத்தான் கோபம் வராது?" என்று நாம் நினைக்கக்கூடும். சாமிநாதன் பழைய சாமிநாதனாயிருந்து, அந்த காப்பி கொட்டிய பெண் தனது தங்கை, மருமகளாக இருந்தால் அவர்கள் கன்னங்கள், தாமாக சிவக்காவிட்டாலும், சாமிநாதனே சிவக்க வைத்திருப்பான். ஆனால் இப்போது காப்பி கொட்டியது அந்தப் பெண்கள் யாருமல்லவே? இது சாதாரணப் பெண்ணா? பெண் தெய்வமல்லவா? அதுவும் யார் கொட்டினது? ஜன்னல் வழியாகப் பார்த்துக்கொண்டிருந்த அந்த மன்மதன் விஷயம் அன்றோ இது?

ஆகவே, சாமிநாதன் மனதில் அப்போது என்ன எண்ணங்கள் உதித்தன வென்று நினைக்கிறீர்கள்.

"ஐயோ. இன்னும் நாலு ஜரிகைவேஷ்டி வேண்டுமானாலும் மாற்றி மாற்றிக் கட்டிக் கொள்ளலாமே? இப்படி அபிஷேகம் செய்ய

இப்பேர்ப்பட்ட பக்தர்கள் இருந்தால்." என்றுதான் தோன்றியிருக்கும். (இது நிச்சயமாக எனக்குத் தெரியாது. ஒருவேளை "இன்னும் ஒரு குடம் காப்பி கொண்டுவந்து என் தலையில் வேண்டுமானாலும் அபிஷேகம் செய்யக்கூடாதா?" என்றுகூட சாமி நாதனுக்கு அச்சமயம் தோன்றியிருந்தால் ஆச்சரியப் படுபவன் நானல்ல.) இந்த ஒரு டம்ளர் காப்பி - அதுவும் கொட்டிப்போன - காப்பிக்கு என்ன சக்தி பாருங்கள். சாமிநாதனுக்கு அன்று முழுவதும் தூக்கமே வரவில்லை. அந்த ஜரிகை வேஷ்டியை நினைத் தல்ல. "பாவம் அந்தப் பெண் வீணுக சஞ்சலப்படப் போகிறதே." என்ற கவலையில் அவனுக்குத் தூக்கமே வரவில்லை. உலகம் உலகமாயில்லாமல், தேவலோகமா யிருந்தால் அந்த க்ஷணமே அவன் ஓடிப்போய் அப் பெண்ணின் கண்களை, கண்ணீர்த் துளிகள் இல்லாவிட் டாலும், துடைத்து, "வருந்தாதே அம்மா. பரவா யில்லை. காப்பிதானே கொட்டிப் போயிற்று. பிரமாதம் ஒன்றுமில்லையே. இன்னும் கொஞ்சம் வேண்டுமானு லும் கொட்டு அம்மா." என்று ஆறுதல் சொல்லியிருப் பான். உலகம் உலகமாகவே இருந்ததால் இம்மாதிரி தீரச் செயல்களுக்கு இடமில்லாமல் போய்விட்டது.

ஆகவே, மறுநாள் ரேவதி வழக்கம்போல் காப்பி கொண்டுவந்து வைத்துவிட்டு "காப்பி வைத்திருக்கு; பத்திரம் கொட்டப் போகிறது" என்று சொல்லி விட்டு, அரை க்ஷணம் சும்மா இருந்து பிறகு "நேற்று வேஷ்டியெல்லாம் வீணுய்விட்டதே. கோபமா உங்க ளுக்கு என்மேல்?" என்று கேட்கவே, இரண்டு நிமிஷம் மூன்று விநாடி சாமிநாதனுக்கு உலகம்

ஸ்வர்க்கமாக மாறி நின்றது. பிறகு எப்படியோ முழுங்கி மென்றுகொண்டு "கோபமா. யாருக்கு? எனக்குக் கோபமே வராதே. அதுவும் உன்மேல்..." என்று அசட்டுச் சிரிப்பு சிரித்துக்கொண்டு அந்த வார்த்தைகளை நாக்கிலிருந்து வெளியேற்றுவதற்குள் சாமிநாதன் உயிர் சப்த லோகங்களுக்கும் சென்று சஞ்சாரம் செய்துவிட்டுத் திரும்பி வந்தது.

அன்று முதல்தான் சாகலேட் பெட்டிகளும், பிஸ்கோத்து டின்களும், "ஹோம் வர்க் எக்ஸர்ஸை ஸுகளும்", அம்பிப் பயல் கொஞ்சல்களும் அந்த வீட்டில் அதிகரிக்கத் தொடங்கின.

* * *

ஒரு வாரம் பம்பாயில் கழிப்பதென்று போட்ட திட்டம் இரண்டு வாரத்திற்கு ஓடினதற்கு மாப்பிள்ளை ரகுராமன்மேல் யாரும் குற்றம் சொல்ல முடியாது. மாமனார் வீட்டார் மாப்பிள்ளைத் தோழன் வழியாக அதை நீடித்தார்கள். மாப்பிள்ளைத் தோழன் சாமிநாதன் எப்படி மறுக்க முடியும்? அதுவும் ரேவதி சொல்லும்போது? பிறகு பம்பாயைவிட்டுப் போகவே அவர்கள் - மாப்பிள்ளையை விடத் தோழருக்குப் - பிடிக்கவில்லை. என்ன செய்வது? பாழாகப்போன பரீட்சை ஒன்று வருகிறதே யென்று ஊர் திரும்பினார்கள்.

பம்பாய் ஸ்டேஷன் கண்மறைந்ததும் சாமிநாதன் ஏதோ ஒருமாதிரி ஆகிவிட்டதை ரகுராமன் கண்டான். கலகலப்பு, பிரகாசம், உத்ஸாகம், எல்லாவற்றையும் பம்பாயில் ரகுவின் மாமனார் வீட்டிலேயே வைத்து

வந்துவிட்டதுபோல் காணப்பட்டது. சாமிநாதன் என்றும் இப்படி இருந்ததில்லை. ரகுவிற்கு இதன் தாத்பரியம் பிடிபடவில்லை. பின்னரும் வந்த நாட்களும் வாரங்களும் மாதங்களும் சாமிநாதனுக்கு நீண்டதொரு இரவைப்போல் மெல்லவே சென்றன. அந்த வருஷம் பரீட்சையில் ரகு முதலில் பாஸ்செய்தான். சாமிநாதன் "கோட்" அடித்தான்.

* * *

அந்த வருஷம் கோடை விடுமுறைக்காக ஊருக்குப் போயிருந்த சாமிநாதனிடமிருந்து வந்த கடிதம், ரகுவைத் தூக்கி வாரிப்போட்டது; அக்கடிதத்தின் சாராம்சம் பின்வருமாறு:

"எனது அன்பார்ந்த நண்பா! உன் கடிதம் கிடைத்தது. நான் உனக்குக் கடிதம் எழுதாத குற்றம் முற்றிலும் என்னுடையதல்ல. என்னுடைய மனம் பெரும் கிளர்ச்சியடைந்து தவிக்கிறது. அதை உன்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்வது.

நீ உன்னுடைய கடிதத்தில் உன்மாமனுர் குடும்பத்துடன் அங்கே வந்திருப்பதாயும் உன்னுடைய மைத்துனி ரேவதிக்குத் தக்க வரன் தேடுவதாகவும் தெரிவித்திருக்கிருய். ...நண்பா. நான் சொல்லவேண்டுமென்று பொங்கி வருவதெல்லாம் எழுத்தில் எழுத முடியாது. உனக்குமட்டும் அந்தரங்கமாக ஒரு வார்த்தை. போன தீபாவளிக்கு நாம் பம்பாய் போனது முதல் என்னுடைய வாழ்க்கையில் பெரிய மாறுதல் ஏற்பட்டுவிட்ட தென்பதை நீ தெரிந்து கொண்டிருப்பாய்... இன்னும் ஒரே வார்த்தையில்

சொல்ல வேண்டுமானால்...எனக்கும் கலியாணப் பித்துப் பிடித்துப்போய்விட்டதென்பதை வெட்கத்தை விட்டு உன்னிடம் தெரிவித்துக்கொள்கிறேன். ரேவதியைப் பார்த்த நாள்முதல் என் ஹிருதயம் என்னிடமில்லை...அதிகம் சொல்வானேன்? பாக்கியை நீயே தெரிந்துகொண்டு உசிதப்படி செய்வாய் என்று நம்புகிறேன்..."

ரகுராமனுக்கு இக்கடிதம் ஆச்சரியத்தையும் ஆனந்தத்தையும் விளைவித்ததென்று சொல்ல வேண்டியதில்லை.

இதோ கதை முடியப்போகிறது. "எப்படி முடியும்" என்று ஆவலுடன் எதிர்பார்க்கிறீர்கள். ஒன்று, சாமிநாதனுக்கு ரேவதியுடன் கல்யாணம் செய்து வைக்கவேண்டும், அப்பொறுப்பு ரகுராமனை விட எனக்குத்தான் இங்கு அதிகம். அநேகமாக இதையே நீங்கள் எதிர்பார்ப்பீர்கள் என்று நானும் எதிர்பார்க்கிறேன். அல்லது காதல் மயக்கத்தால் தலைசுற்றிக் கீழே விழுந்து, அப்புறம் பிரக்ஞையே வராமல் சாமிநாதனை உயிரிழக்கச் செய்யும் பாபம், ரேவதிக்கும் அவர்கள் பெற்றோர்களுக்கும் சேர்வதை விட என்னையே சேரலாம்.

ஆனால் இம்மாதிரி சந்தர்ப்பத்தில் கொலைபாதகத்தைவிட கலியாணம் செய்துவைக்கும் புண்ணியமே மேல் என்று வெகுநேரம் யோசித்துத் தீர்மானத்துக்கு வந்தேன். மேளங் கொட்டியது. அவ்வருஷம் வைகாசி மாதத்தில் தினசரிகளில் "சமூக விவாகப்" பத்திகளில் ஸ்ரீமான் சாமிநாதன் - ரேவதி விவாகம் போட்டோப்

படங்களுடன் வெளியான விவரங்களை உங்கள் ஊகத்திற்கு விட்டுவிடுகிறேன்.

அடுத்த வருஷம் தலைதீபாவளிக்கு சாமிநாதனுக்கு ரகுராமன் மாப்பிள்ளைத் தோழனாகப் போகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

கலியாணம் என்பது வாழ்க்கை வீதியில் ஒரு "மூலை திரும்புதல்" என்கிறார்கள். சிலருக்கு விவாகம் ஆனதும் அதிர்ஷ்டம் அடித்து, அவர்கள் வீட்டில் லக்ஷ்மி தாண்டவமாடுகிறாள் என்பது ஓர் ஐதீகம். புது மாப்பிள்ளைகளான சில மாணவர்கள் விவாகமானதும், பரீட்சைகளில் "கோட்டு" வாத்திய வித்வான்களாகப் பிரபலமடைவது மற்றோர் அனுபவம். சாமிநாதன் விஷயத்தில் விவாகமானதும் பரீட்சைகள் போன இடம் தெரியாமல் பறந்தன.

ரகுராமன் எப்போதும்போல் நிதான வாழ்க்கை நடத்தி வந்தான். சாமிநாதனோ மிகவும் முன்னேறி விட்டான். விவாகமாகி ஐந்தாவது ஆண்டிற்குள் ரயில்வேயில் நல்ல உத்தியோகமும், இவன் வம்சத்தில் மூன்று பிறவிகளும் இவனுக்கு லாபமாயின.

சங்கரன் ஐ.ஸி.எஸ்.

சங்கரனும் அவன் தாயார் தவம் செய்து பெற்ற ஒரே புதல்வன்தான். அவன் பிறந்த முகூர்த்தத்தில் அவன் தந்தை தாணு ஜோசியர் புரட்டாத ஜோதிஷச் சுவடிகள் இல்லை. "பயல் ஜாதகம் ஒண்ணுங்கிளா ஸாய்க்கும். ஏ! இத்தரை அதிர்ஷ்டம் ஒரெடுத்துலே வச்சுக் கண்டதில்லே! ஏ!" என்று எக்களித்தார். தாணு ஜோஸியர், தொழில் முறையில், தன்னைத் தானே ஏமாற்றிக்கொண்டார் என்று சொல்வதற்கில்லை. சங்கரன் ஜாதகத்தில் என்னமோ, அப்படிக் கிரகங்கள் ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக் கொண்டு, க்ஷேம லாப ஸ்தானங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன.

"முப்பது வயசுக்குள்ளேயே பயலுக்கு அக்கரைச் சீமைப் பிரயாணம் லபிச்சிருக்கு" என்று கண்டுபிடித்தார். இருபதாவது வயதுக்குள்ளே ஒரு பெரிய இடத்தில் அந்தரங்கமான மந்திரிப்பதவியோ அதற்குச் சமமான பதவியோ வகிக்கப் போகிறான் என்பது அவருடைய ஜோதிஷக் கணக்கு நிச்சயமாகப் புலப்பட்டது.



சுருங்கச் சொல்லில் எல்லா கிரக பலன்களையும் ஜோதிட சாஸ்திரத்தாலும், அனுபவ சாஸ்திரத்தாலும் துருவி ஆராய்ந்த தாணு ஜோசியர் தம் ஏக புத்திரன் ஐ. ஸி. எஸ். பரீட்சை தேறி

விட்டு ஒரு ஜில்லாவை ஆளப் போகிறான் என்ற முடிவைத் தன் மனைவி தைலம்மாளுக்குப் பலமுறையும் எடுத்துரைத்தார்.

* * *

சங்கரனின் வாழ்க்கையில் முதல் பிராயம், பெற்றோர்களுக்கிருந்த இந்த நம்பிக்கையிலேயே, நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாகக் கழிந்தது. சங்கரனுக்கு ஆறாவது வயதில் அவனுடைய தந்தை, ஏதோ பொல்லாத வேளையில் போட்ட பச்சைக் கொட்டைப்பாக்கின் பயனாக, திடீரென்று மூச்சுப் பேச்சில்லாமல் சொல்லாமல் கொள்ளாமல், விண்ணுலகம் ஏகினார்.

சங்கரனைப்பற்றி கணவன் சொன்ன ஜோசியத்தில் இன்னும் நம்பிக்கை வைத்திருந்த அவன் தாயார் அவனைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினாள். வெகு சிரமப்பட்டு, அப்பளம் ஊறுகாய் செய்து விற்று அவன் படிப்பின் செலவை ஈடுகட்டித் தங்கள் ஜீவனத்தையும் நடத்த முயன்றாள்.

பள்ளிக்கூடம், பக்கத்து வீட்டுத் திண்ணையில் இருந்தும், அதற்கும் சங்கரனுக்கும் வெகு தூரமாகி விட்டது. பள்ளிக்கூடத்தை ரணகூடமாக சங்கரன் மாற்ற முயன்றான். முதலில் தன் வயதுக்குச் சின்னப் பையன்களின் தேகபலத்தைச் சோதிக்கத் தொடங்கினான். தன்னுடைய சொந்த பலத்தை இதில் ஸ்தாபித்துக்கொண்டு சரியான கோதாவில் இறங்கி, மல்யுத்தம், முஷ்டியுத்தம், கால் முறித்

தல், கைமுறித்தல், பல்லுடைத்தல் முதலிய வித்தைகளில் தேறினுன். பிறகு கேவலம் பள்ளிக்கூட மாணவர்கள் அவனுக்கு ஒரு கிள்ளுக்கீரையாகிவிட்டதால், டிராயிங் மாஸ்டரிடம் ஆரம்பித்து, ஹெட்மாஸ்டர் வரைக்கும் தன் கைவரிசையைத் தாராளமாகக் காண்பித்தான். பள்ளிக்கூட அதிகாரிகள், இவனுக்குச் சரியான இடம் குஸ்தி மேடை அல்லது ராணுவம்தான் என்ற முடிவுக்கு வந்து, அவனைப் பள்ளிக்கூடத்தினின்றும் வெளியேற்றப் பட்டபாடு அந்தச் சங்கரனுக்குத்தான் தெரியும்.

"வஸ்தாத்து சங்கரன்", "சிப்பாய் சங்கரன்" என்ற வீரப் பட்டங்களுடன் பள்ளியிலிருந்து வெளியேறிய சங்கரன் தனது பதினேராம் வயதில், தன் தாயாரையும் இழந்து, பரந்த உலகத்தை நோக்கி, திடகாத்திரத்துடன் நடந்தான். அவனுடைய இரும்புக் கால்கள்கூடச் சற்றுத் தளரவே, சென்னையில் வந்து "போண்டா ஹோட்டல்" என்ற பிரசித்திபெற்ற சிற்றுண்டி விடுதியில் குண்டு கிச்சுவையர் ஆதீனத்தின் கீழ் வந்தான்.

சங்கரன் கை பலம் பூராவும் இப்பொழுது, ஆட்டுக்கல்லில் செலுத்தப்பட்டது. கால் வலிமை பூராவும், போண்டாப் பிரியர்களை திருப்தி செய்வதில் ஈடுபட்டது.

வெகு சீக்கிரத்தில் சங்கரன், குண்டு கிச்சுவய்யரின் அந்தரங்க சிஷ்யனுக ஆனுன். குண்டு கிச்சுவையர் "சங்கரா" என்று அவனை அந்தரங்க அன்புடன் கூப்பிடும் அழகு ஒன்றே போதும்.

"ஓன் மெனிட், ஸேர். ஆட்...ஆட் போண்டா கமிங், ஸேர். ஓன்னே மெனிட், ஸேர்.—வாங்கோ முதலியார்வேள்...உட்காருங்கோ—ஓன் மெனிட் கமிங் ஸேர்—(தனக்குள்) வந்தயா அப்பா மகானுபாவா?... டேபள் க்ளீன்ஸ்!......அண்ணு...உட்காருங்கோ...... ஸாருக்கு என்ன வேணும்...கேளும்...இதோ வந்துட் டேன் ஸேர் (தனக்குள்) அட, தொல்லே புடிச்ச மனுஷன் என்ன அவசரம்! மழை பெய்யறதோ. ......யெஸ் ஸேர்—சட்னியா...ஒரு அரை ஸ்பூன் தள் ளட்டுமா அப்பா—(தனக்குள்)-சட்னி தின்னே மனு ஷன் வளர்ரான்.—ரெடி ஸேர் - மஸால்தோஷ்—ஆங் —இதோ வந்தேன்—ஷுகர் ரெண்டு அவுன்ஸ் போடட்டுமா (தனக்குள்)-ஏங்காணும் சக்கரையைத் தின்னு உடம்பை உருக்கிக்கறே — ஓ யெஸ், டிகே ஷு—ஓன் மெனிட், ஸேர்—(தனக்குள்)-ஏன் ஐயா டிகேஷன் டிகேஷன்னு அடிச்சுக்கறே. தலே சுத்தப் போகிறது—" என்றெல்லாம் சங்கரன் வருகிறவர்களை வரவேற்பதே போண்டா ஹோட்டலுக்கு ஒரு அலாதி கலகலப்புக் கொடுத்தது. போண்டா ஹோட்டல் போண்டா, ஹல்வா முதலிய ஸ்பெஷல்களுடன் சங்கர னுடைய ஓயாத ஹாஸ்யத்தையும் ரஸிக்காதவர்கள் கிடையாது. சங்கரன் பேச்சுத் தமாஷுக்காகவே பலர் அங்கு வந்து அரை கப் காப்பியாவது போட்டுவிட்டுப் போவார்கள். இது குண்டு கிச்சுவையருக்கும் தெரி யாத விஷயமல்ல. அதனுலேதான், அவர் சங்கரனை அதிகப்பிரசங்கி என்று செல்லப்பெயரிட்டு அழைத் தும்கூட அவன் வாயரட்டைக்காக அவனைக் கடிந்து கொள்வதில்லை.

சங்கரன் சிறிய சட்னிக் கரண்டியிலிருந்து பெரிய சாம்பார்க் கரண்டி வரையில் கையாளுவதில் தேர்ச்சி பெற்றான். தனக்குத் தெரிந்தவர்கள் யாராவது அவனை "சங்கரா. இப்போது என்ன செய்கிறாய்?" என்று கேட்டால் "நமக்கென்ன ஸேர் குறைச்சல். நம்பளுக்கு கரண்டியாபீஸ் கலெக்டர் உத்தியோகமாக்கும்" என்று பெருமையாகச் சொல்லிக் கொள்வான். அவன் தொழிலில் அவனுக்கு ஒரு தனிக் கைராசியும் இருந்தது. "சங்கரன் சண்டே ஸ்பெஷல்" வெங்காய சாம்பாருக்காக நாக்கைத் தீட்டிக்கொண்டு, எத்தனை பேர் வீட்டில் சண்டை போட்டுக்கொண்டு, வீட்டு வத்தல் குழம்பை விட்டுவிட்டு, போண்டா ஹோட்டலுக்கு வருவார்கள்.

சங்கரனுக்கு இதுவே ஒரு பெருமை. "என்ன ஸேர். ஒவ்வொருத்தர் சீமைக்கெல்லாம் போய் காசைக் கரச்சுப்புட்டு ஐ. ஸி. எஸ்., யு. ஸி. நோ என்றெல்லாம் பட்டம் வாங்கிண்டு வர்ராங்க. நம்மைப் பாருங்க. லொண்டானுக்குப் போனேனா? அமெரிக்காவுக்குப் போனேனா? நானும்தான் ஐ. ஸி. எஸ்., ஓ. எஸ். ஸேர்! நானும் இண்டியன் கூக்கிங் ஸர்விஸ்தான். நான் என்ன கெட்டுப்பூட்டேன்? நான் கரண்டியாபீஸ் கலெக்டர்தான்!" என்று கொஞ்சம் தற்பெருமையிலும் சங்கரன் ஈடுபட்டால் அதைக் கேட்பவர்கள் அவனை வெறுப்பதில்லை.

சங்கரனுக்காக போண்டா ஹோட்டலை ஆதரித்தவர்களில் மிஸ்டர் ஷங்கர் ஐ. ஸி. எஸ். ஒருவர். அவருடைய ஆங்கில சகதர்மிணிக்கும் இந்தியப் பெண்களைப்போல் புடவை கட்டிக்கொண்டு, போண்டா சாப்

பிடுவதில் அதிகப் பிரியம். அந்த அம்மாளுக்கு சங்கரன் லொடலொடவென்று வாயரட்டல் அடிப்பதே ஒரு விசித்திரப் பொழுதுபோக்காக இருந்தது. ஆகவே, மிஸ்டர் ஷங்கரும், மிஸஸ் ஷங்கரும் குண்டு கிச்சுவைய ருக்குப் போன ஜன்மத்தில் பட்டிருந்த கடன்களை இப்போது மும்முரமாகக் கொடுப்பதில் ஈடுபட்டார்கள்.

சங்கரன் ஜாதக விசேஷம் வீண் போகவில்லை. அவன் தந்தை சொன்ன ஜோஸியமும் பொய்யாக வில்லை. சீக்கிரத்தில் சங்ஙரன் 'ஐ. ஸி. எஸ்.' ஷங்கர் ஐ. ஸி. எஸ். வீட்டில் சமையல் மேடைக்கு தளபதி ஆனான். அடுத்த கோடைகாலத்தில், இந்திய வெப்பம் பொறுக்காத மிஸஸ் ஷங்கர் தன் பிறந்தகத்துக்குப் போனபோது சங்ஙரன் ஐ. ஸி. எஸ். பின்தொடர வேண்டி வந்தது. சங்ஙரன் லண்டன்மா நகரம் என்ன, ஆக்ஸ்பர்ட் என்ன, கேம்பிரிட்ஜ் என்ன, எடின்பரோ என்ன, முதலிய பிரதான நகரங்களைப் பார்வையிட்டு, ஐரோப்பாவில், பாரிஸிலிருந்து ரோம் வரையில் கண்ணோட்டம் விட்டு, ஆப்பிரிக்காவிலும் கொஞ்சம் பார்த்துவிட்டு, இந்தியா திரும்பியபோது அவன் பழைய சங்ஙரன் என்று யாரும் சொல்லியிருக்க மாட்டார்கள். அவன் மேனியில் ஒரு மெருகு ஏறியிருந்தது. தேகத்தில் ஒரு ஸூட், கால்களில் பளபள வென்று பூட்ஸ், தலையில் ஹாட், கழுத்தில் டை, இத்தியாதிகளுடன் எல்லாம் தடபுடலாக வந்து அவன் இறங்கிய காட்சியே காட்சி.

வெளித் தோற்றத்தில் இப்படி மாறுதல் அடைந்திருந்தாலும் அந்த மாறு வேஷத்துக்குள்ளே பழைய சங்கரன் பழைய சங்கரன் பழைய சங்கரனாகவே இருந்தான். மிஸ்டர் ஷங்கரிடமிருந்து சிறிது காலத்தில் பென்ஷன் பெற்றுக்கொண்ட சங்கரன் மறுபடி தன் பழைய எஜமானர் குண்டு கிச்சுவையரிடம் வந்தான்.

'எந்தடா சங்கரா? உன்னை இங்கே வச்சுக் காணலை இத்தரை திவசமா? எங்கேடோ போயிட்டாய்? சீமை சீமைக்கு போயிட்டயோன்னு நினைச்சேன்' என்று குண்டு கிச்சுவையர் ஹாஸ்யமாகச் சொன்னது உண்மைதான் என்பதை அவர் பிறகு தான் உணர்ந்தார்.

குண்டு கிச்சுவையருக்கும், நாற்காலியில் உட்கார்ந்து சில்லரை எண்ணி தள்ளாமை வந்துவிட்டது. 'பெண் குஞ்சரத்துக்கும் கலியாண வயசு ஆகலாச்சு' என்று கவலையும் கொண்டார். சில்லரையும் எண்ணி, பெண்ணையும் பார்த்துக்கொள்ள, சங்கரனையே பிரம்மா சிருஷ்டித்திருக்கையில் குண்டு கிச்சுவையர் வேறு இடம் தேடிப்போவானேன்? அவருக்கும் அப்படியெல்லாம் அனுவசியப் பிரயாணம் செய்வதற்கு தேக வசதி இல்லை. 'சுபஸ்ய சீக்கிரம்' என்று மேளம் கொட்டிற்று; வாத்தியம் முழங்கிற்று; குஞ்சரத்தின் கழுத்தில் தாலியும் ஏறிற்று. சங்கரன் காலில் ஒரு கட்டும் ஏறிற்று...அன்று சங்கரனுக்குக் கிடைத்த பரிசுகளில் மிஸஸ் ஷங்கரிடமிருந்து தங்கக் கரண்டியும் ஒன்று; அதுதான் இன்றும் சங்கரன் 'சாம்பார் கபே'

யில் சங்கரன் நாற்காலிக்கு மேல், கண்ணாடிக்குள் வைக்கப்பட்டிருப்பது.

சங்கரன் சீமையில் கண்டு கற்று வந்ததெல்லாம் வீண் போகவில்லை, சங்கரன் 'சாம்பார் கபே'யில் எல்லாம் இங்கிலிஷ் ஹோட்டல் மாதிரித்தான் ஸ்டைலாக இருக்கும். போண்டாக்கள்கூட ஒரு தனி தேஜஸுடன் விளங்குகின்றன. போர் முனைக்குப் போகாத ஸோல்ஜர்களும் சிப்பாய்களும் அவற்றை கத்தி, சூலம் வைத்துக்கொண்டு ஹதம் செய்வதிலிருந்தே சங்கரன், ஐ. ஸி. எஸ், கலெக்டரைவிடப் பெரிய உத்தியோகம் பார்க்கிறான் என்பது விளங்கும். தாணு ஜோசியர் மேலிருந்து இதைக் கண்டு களிக்கிறார் என்பதில் என்ன சந்தேகம்? அவர் பார்த்துச் சொன்ன ஜோசியம் பொய்யாகவில்லை.

கனம் கம்பிளிசாமி

'உப்' என்று ஊதினால் கீழே விழக்கூடிய ஆசாமி தான் கம்பிளிசாமி; ஆள் ஆகிருதியில் அப்படி ஓடிசல். ஆனால் அவர் எப்படி 'கனம்' ஆனார் என்பது ஒரு சரித்திர விசித்திரம். அவருடைய பெயரே விசித்திர மாகத் தோன்றலாம். அவர் உண்மைப் பெயர் என்ன வென்பதை அவர் 'கன'மானதும் அவரே மறந்து விட்டார். கந்தசாமியாக இருக்கலாம்; கருப்பண்ண சாமியாக இருந்திருக்கலாம்; கண்ணாருவிசாமியாகக் கூட இருந்திருக்கலாம். ஆனால் அவர் நாமதேயத்தில் கம்பிளி எப்படி வந்து ஒட்டிக்கொண்டது என்பதே ஒரு கதை. கதைக்குக் காரணம் உண்டு. காரணம் காக்கைதான். கனம் கம்பிளிசாமி காக்கை பிடிப்பவர்

என்று சொல்ல வரவில்லை. அந்தப் பட்சியினத்தின் பெயரால் ஒரு வலிப்பு உண்டு. அந்தக் காக்கை வலிப்பு கம்பிளிசாமியின் அதிர்ஷ்ட தேவையாக வந்தது. அவ ருக்கு அந்த வியாதி வரவில்லை. அவருக்கு அஷ்டமத் தில் இருந்த சனி பெயர்ந்து, சுக்ரனைக் கொண்டு வந்து அவர் மேல் தள்ளிற்று. இல்லாவிட்டால் தெருவில்

போய்க்கொண்டிருந்த கம்பிளிவாலாவுக்கு காக்கை வலிப்பு வந்து அவன் கீழே விழுவானேன்? அந்தச் சமயத்தில் கம்பிளிசாமி, அரை வயிற்றுக் கஞ்சிக்காக அலைந்து திரிந்து, அந்த இடத்தில் வந்து சேருவானேன்? அந்தக் கம்பிளி வியாபாரியைக் கையில் தாங்கி சிசுருஷை செய்வானேன்? அவன் அவர் மாடியில் பிராணனை விடுவானேன்? கம்பிளிசாமிக்கு வந்த அதிர்ஷ்ட தேவதை அந்த கம்பிளி மூட்டைக்குள் புகுந்துகொண்டிருந்தாள். வடநாட்டிலிருந்து வந்து எங்கேயோ பிராணனை விட்ட கம்பிளிவாலாவின் சகல சொத்தாகிய அந்தக் கம்பிளி மூட்டைக்கு நமது கதாநாயகர் வாரிசு ஆனார்.

* * *

முன்பின் கம்பிளி வியாபாரம் செய்யாத அவருக்கு சந்தர்ப்பம் கிடைத்ததும், எங்கேயோ ஒளிந்து கொண்டிருந்த வியாபாரத் தந்திரமெல்லாம் வந்து உதவி புரிந்தது. ஒரு மூட்டை கம்பிளி இரண்டு மூட்டையாயிற்று; பத்து மூட்டையாயிற்று; அவர் முதுகில் சவாரி செய்த கம்பிளிகள் இப்பொழுது ரப்பர் டயர் வண்டியில் ஏறி பவனி வந்தன. இன்னுங் கொஞ்ச நாளில் அவரே ரப்பர்டயர் மோட்டாரில் பவனி வந்தார். தெருவில் சுற்றிய கம்பிளிகள் பெரிய கடைத்தெருவில் கண்ணாடி ஜன்னல்களுக்குப் பின்னால் தீபாலங்காரத்துடன் பிரகாசித்தன. இருளில் திரிந்த கம்பிளிசாமி, வெளிச்சத்தில் வந்து ‘டால்’ அடிக்க ஆரம்பித்தார். கேட்க வேண்டுமா? கம்பிளி வியாபாரம் வலுக்க, வலுக்க, மாடி மேல்மாடி, வீடுமேல் வீடு விருத்தி

யாயின. வெகு சீக்கிரத்தில் கம்பிளிசாமி பிரபல மனுஷ்யரானார்.

* * *

ஊரில் பெரிய மனுஷ்யர்கள் கூடும் 'பலப்பட்டறை கிளப்பு'க்குத் தலைவரானார். உடனே ஊரிலுள்ள சங்கங்களும், சபைகளும் அவரைத் தலைவராக்கின. வியாபாரிகள் சங்கம், வாடிக்கைக்காரர்கள் சங்கம், மோட்டார் சொந்தக்காரர் சங்கம், மோட்டாரில் நசுக்கப்படுவோர் சங்கம், ஸைக்கிள் வாலாக் கழகம், பாட்டில் வாலா மகாசபை, ஹோட்டல் சொந்தக்காரர் ஸ்தாபனம், டேபிள் கிளீனிங் குழாம், அத்தைப் பாட்டி சமூகம், அழுமூஞ்சி மகாநாடு இத்தியாதி பற்பல ஸ்தாபனங்களும் நீ முந்தி நான் முந்தி என்று கம்பிளிசாமியைத் தலைமைப் பதவிக்குத் தேர்ந்தெடுத்துக்கொண்டன. கம்பிளி மூட்டை தூக்கிய தோள்களுக்கு இந்த சங்கங்கள்தானா பெரும் பாரம்? கம்பிளிசாமிக்கு பிரபலமாகும் வித்தை புதிதாகத் தோன்றவில்லை. கூரையைப் பிய்த்துக்கொண்டு கொடுக்கும் தெய்வம் சும்மா விடுமா? இதே சமயத்தில் கம்பிளிசாமிக்கு ஆப்த சிநேகிதராக சமீபத்தில் வாய்த்த கனம் காலகண்டம், மாரடைத்து திடீரென்று காலமானார். காலமானவர் அடிச்சுவட்டில், மறுபடி வந்த அதிர்ஷ்ட தேவதையின் வரப்பிரசாதம் கம்பிளிசாமிக்குக் கிட்டிற்று. காலமான தமது நண்பர் காலியாக வைத்துப் போன ராஜாங்க சபை ஸ்தானத்தில் கம்பிளிசாமி எதிர்ப்பில்லாமல் போய் அமர்ந்தார். எதிர்ப்பு எப்படி இருக்க முடியும்? எதிர்க்கக் கூடியவர்கள் எல்லாம்,

அரசாங்க விருந்தாளிகளாக இருந்தனர். கம்பிளி சாமிக்கு இலவச வெற்றி கிடைத்தது. வெறும் கம்பிளிசாமி கனம் கம்பிளிசாமியானார்.

* * *

வெறும் அதிர்ஷ்டம் மட்டும் இருந்தால் மனிதன் முன்னுக்கு வந்துவிடுவான் என்று சொல்வதற்கில்லை. சாமர்த்தியமும் வேண்டும். வந்த அதிர்ஷ்டத்தை விடாமல் காப்பாற்றி, விருத்தி செய்து கொள்பவன் தான் அந்த அதிர்ஷ்டத்துக்கு லாயக்காவான். கனம் கம்பிளிசாமி இதைப் பூராவும் உணர்ந்தே இங்கிலீஷில் கையெழுத்துப்போடக் கற்றுக்கொண்டதோடு நில்லாமல், இங்கிலாந்திலிருந்து அப்போதுதான் கப்பலில் வந்து இறங்கிய ஐரோப்பிய கன்னிகையைத் தம் அந்தரங்கக் காரியதரிசினியாக அமர்த்திக்கொண்டார். அவளே அவருக்கு ஆங்கில ஆசிரியையாகவும் விளங்கினாள். சில மாதங்களுக்குள் மிஸ் ஜாலியின் சிக்ஷையினால், கனம் கம்பிளிசாமி, 'தாங்க்யூ' 'டோன்ட் மென்ஷன்' முதலிய ஆங்கில லௌகிகங்களைக் கற்றுக் கொண்டது மட்டுமில்லை. 'ஓ மை டியர்' 'ஓ, மை டார்லிங்' முதலிய தெய்வீக வாக்கியங்களையும் நடைமுறையில் பிரயோகித்து வெற்றி பெற்றார். இதே சமயத்தில் ஐரோப்பிய யுத்தம் குமுறி எழுந்திடவே, மிஸ் ஜாலி சீமைக்குத் திரும்பிப் போகமுடியாமல் தவித்தாள். இப்படி கேட்டையும் மோட்டையும் ஒன்றுகூடியதின்

பலஞக, மிஸ் ஜாலி லேடி ஜாலி கம்பிளிசாமியாக மாறும் பிரமேயம் ஏற்படவே, அவ்வம்மையாரும் கனம் பொருந்திய நமது கதாநாயகருக்கு, வாழ்க்கை நாயகியாக வாய்த்தாள்; ஆங்கில ஆசிரியை, அவருக்கு வாழ்க்கையில் நிரந்தர சிக்ஷை அளிக்கச் சம்மதித்தாள்.

* * *

அதிர்ஷ்டம் என்ருல் மரணத்திலும் வரக்கூடும். மணத்திலும் வரக்கூடும். முன் இருமுறை மற்ருெரு வர் மரணத்தால் கம்பிளிசாமிக்கு அதிர்ஷ்டம் அடித் தது. இப்பொழுது தமது விவாகத்தால் அந்த அதிர்ஷ்டம் பொங்கி எழுந்தது. தம் துணைவியின் மகிமையால் படே படே ஆசாமிகள் எல்லாம் கனம் கம்பிளிசாமிக்கு பரிச்சயமானுர்கள். பலர் அவருக்கும் அவரது மனைவியாருக்கும் அடிமையானுர்கள். கம்பிளி சாமி வியாபாரம் வலுத்தது. லேடி கம்பிளிசாமியின் முகச்சாயம் வெளுக்க வெளுக்க, கனம் கம்பிளி சாமி யின் வியாபாரம் வலுத்தது. ஜாலீசுவரன் எளிதில் கோடீசுவரனுனுர்.

* * *

கூடின மூலையிலேயே குப்பை சேருவதுபோல், செல்வம் கனம் கம்பிளிசாமியின் பாங்கிக் கணக்கி லேயே போய் குவிந்துகொண்டிருந்தது. யுத்தம் வலுக்கவே, யுத்தசாதன உற்பத்திகளும் வலுத்தன. உற்பத்திகளை வாங்கி விற்பவர்களும் வலுத்தனர். கனம் கம்பிளிசாமியும் வலுத்தார்; ஆணி முதல் கோணி வரையில் ராணுவத்திற்கு ஸப்ளை செய்யும் கைங்கரியம் அவருக்குக் கிட்டிற்று; ஹிட்லரை மண்

ஞேடு மண்ணுக்க உதவிய மகான்களில் கனம் கம்பிளி சாமி தலைசிறந்து விளங்கினர். இந்த முயற்சியில் அவர் பொன்னேடு பொன்னைப் பெருக்கவும் அரிய பெரிய சந்தர்ப்பம் ஏற்பட்டது.

ஸப்ளை கண்டிராக்டுகள் வந்து அவரது காலடியில் குவிந்தன. ரஷ்யப் போர்முனைக்கு கம்பிளி சப்ளை செய்தவர்களுள் கனம் கம்பிளிசாமி ஏகாதிபத்தியம் பெற்றார். இரண்டாம் போர்முனைக்கு இந்திய சிப்பாய்கள் அணிந்த பூட்ஸுகளில் தைக்கப்பட்ட ஆணிகளில் முக்கால்வாசி கனம் கம்பிளிசாமி உபயம்தான். டேரா அடிப்பதற்கு மூங்கில் கம்புகள் வேண்டுமா? கனம் கம்பிளிசாமி அப்படியே மூங்கில் காட்டையே விலைக்கு வாங்கி யுத்த முயற்சி செய்தார். அமெரிக்க ஸோல்ஜர்கள் படுக்கும் கட்டில்கால்கள் வேண்டுமா? கனம் கம்பிளிசாமியைக் கேளுங்கள். பர்மா போர்முனைக்கு ஆடுகள் வேண்டுமா? கனம் கம்பிளிசாமி இருக்கிறார். பஸிபிக் போர்முனைக்கு மாடுகள் வேண்டுமா? எத்தனை லக்ஷம்?—கனம் கம்பிளிசாமியிடம் ஆர்டர்



கொடுங்கள். அதிகம் விஸ்தரிப்பானேன்! ஊசி முதல் உலக்கை வரையில் கனம் கம்பிளிசாமி கார்ப்பரேஷன் சப்ளை செய்யவல்லதாயிற்று. ஏன்! ஒரு சமயம் பெண்டாட்டி பிள்ளைகளை விட்டுவந்து ஏங்கிக் கிடக்கும் ஸோல்ஜர்களுக்குத் தேவையான ஆத்ம சாதனங்கள் கூட கனம் கம்பிளிசாமி கண்டிராக்டில்தான் வந்தன. விரைவில், யுத்தத்

தில் முளைத்த புதுப் பணக்காரக் கூட்டத்தின் முன்னணியில் கம்பிளிசாமி விளங்கினார்.

*　　　*　　　*

இத்தகைய அபாரத் தொழில்விருத்தியில் கனம் கம்பிளிசாமிக்கு பக்கபலமாக இருந்து லேடி ஜாலி துணை புரிந்திராவிட்டால், இவ்வளவு முன்னேற்றமடைந்திருக்க முடியாது. இதை கனம் கம்பிளிசாமி மட்டும் உணர்ந்ததோடு இல்லை; லேடி கம்பிளிசாமியும் பூராவாக உணர்ந்திருந்தார்; உணர்ந்ததுமட்டுமில்லை, பயன்படுத்தியும் கொண்டார்.

என்னதான் ஒரு மனிதன் பெரிய பதவி பெற்றுவிட்டாலும், பெண் மனதில் பதவிபெறுவது எளிதல்ல. கனம் கம்பிளிசாமி என்னவோ தம் மனைவியை வாழ்க்கையிலும் வியாபாரத்திலும் துணைவியாகத்தான் மதித்து நடத்தி வந்தார். என்ன இருந்தாலும் நிறம் மாறுமா? மணத்திலும் நிறம் குறுக்கிடத்தான் செய்கிறது. கருங்காலிக் கட்டையையும் மாப்பொம்மையையும் இணைத்து வைத்தால் நிற்குமா? கனம் கம்பிளிசாமி இல்லற வாழ்க்கையில் இந்த நிறபேத தத்துவம் புகுந்தது.

கனம் கம்பிளிசாமி 'டாம்டூம் கிளப்'பில் மெம்பரானார். டாம்டூம் கிளப்பில் ஐரோப்பியர்களைத் தவிர இந்தியர்களைச் சாதாரணமாக விடுவதில்லை. காரணம்,

இந்தியர்கள் அந்த இடத்திற்கே தகுந்த நடத்தை நாஸூக்குப் போதாதென்றுதான். புட்டியை உடைத்துக் கிண்ணியில் சிந்தாமல் ஊற்றக்கூடத் தெரியுமா இந்தக் கறுப்பு மனிதர்களுக்கு? முழு புட்டியை உள்ளே விடத்தான் தெரியுமா? இந்த நாகரீக வித்தையில் நிபுணர் என்பதுமட்டுமல்ல, கனம் கம்பிளி சாமியை 'டாம்டூம் கிளப்'பில் சேர்த்தது; அவர் மணந்த ஐரோப்பிய மலரின் மணம் அவருக்கும் சேர்ந்தது.

'டாம்டூம் கிளப்' காரியதரிசி மிஸ்டர் புல் ஒரு பெரிய ஆங்கில கம்பெனியின் மானேஜர். அவர் கனம் கம்பிளிசாமிக்கு நெருங்கிய நண்பர் ஆனார். அவர்கள் டாம்டூம் கிளப்பில் இன்றிரவு சென்று நாளை காலை உடலோடு உடலாக இணைபிரியாமல் புரளும் காட்சி ஒன்றே அவர்கள் நட்புக்குச் சான்று. மிஸ்டர் புல்லின் நெருங்கிய நட்பு கனம் கம்பிளிசாமியின் குடும்பத்திலேயே ஊடுருவி நின்றது. மிஸ்டர் புல் நல்ல இளங்காளைபோலிருப்பார். கனம் கம்பிளிசாமிக்கு வயது ஐம்பதுக்கு மேலில்லாவிட்டாலும் வாழ்க்கையில் அவருக்குக் கிடைத்த பற்பல அனுபவங்கள் அவர் யௌவனத்தைப் பழுதாக்கி இருந்தன.

தாய் நாட்டைவிட்டு வெகு தூரத்தில் தன்னந் தனியே இருந்த ஓர் அன்னியருக்குத் தங்கள் குலத்தார், நிறத்தாரை எங்காவது கண்டால் ஒரு தனி ஆனந்தமுண்டாகுமல்லவா? இனம் இனத்தோடு சேரும்.

லேடி ஜாலி நல்ல யுவதி. மிஸ்டர் புல்லிடம் அவ்வம்மைக்கு ஒரு தனி விசுவாசம் ஏற்பட்டது. விசு-

வாசம் நட்பாக மாறி காதலாகிக் கசிவது இயல்பு தானே!

ஒருநாள் கனம் கம்பிளிசாமி மிலிட்டரிக்கு ஆடுகள் சப்ளை கண்டிராக்டு விஷயமாக வடக்கே போயிருக்கையில், திடீரென மிஸ்டர் புல்லும் லேடி ஜாலியும் மேற்கே மறைந்துவிட்டனர்.

* * *

திரும்பி வந்ததும் கண்மணியைக் காணாத கனம் கம்பிளிசாமிக்கு ஓர் அதிர்ச்சி ஏற்பட்டு, அதிர்ச்சியால் சற்று சித்தஸ்வாதீனம் கலங்கிற்று. ஏனெனில் அவருடைய பாங்கி கணக்கு பாதிக்குமேல், வருமான வரிக்கு பயந்து, அவருடைய தர்மபத்தினியின் பேரில் தான் இருந்தது. தர்மபத்தினி அந்தர்யாமியானதும், பாங்கி கணக்கும் அவளுடன் மறைந்தது.

* * *

இதற்கிடையில் கம்பிளி சாமி கார்ப்பரேஷனிலிருந்து நீக்கப்பட்ட ஒரு போக்கிரி, அந்த ஸ்தாபனத்தின் தொழில் ரகசியங்களை பெரிய இடங்களில் பரப்பி விட்டான். அதன் காரணமாக எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பயனாக, கனம் கம்பிளிசாமி, லேடி கம்பிளிசாமியின் தூண்டுதலாலும் மிஸ்டர் புல்லின்

உதவியாலும் செய்யக்கூடாத பல முறைகளைக் கையாண்டு நம்பிக்கைத் துரோகம், ஏமாற்றல், லாபக் கொள்ளை முதலிய குற்றங்களில் ஈடுபட்டதாக வெளி வந்தது. கனம் கம்பிளிசாமி கைதியானார்.

*　　*　　*

விசாரணை ஆறு மாதம் நீடித்தது. மற்ற இரண்டு குற்றவாளிகளும் அகப்படாததால் கனம் கம்பிளிசாமி மீது மட்டும் குற்றம் சாட்டப்பட்டது. தீர்ப்புக் கூறும் தினம் வந்தது. கைதியைக் கொண்டு வாருங்கள் என்று நீதிபதி உத்தரவிட்டார். கைதி தானே தண்டனை விதித்துக்கொண்டு விட்டார்; தன் கம்பிளியி லேயே தொங்கிக் கொண்டிருந்தார். அவருக்கு இனி இம்மண்ணுலகில் பதவியில்லாததால், மேல் பதவியை நாடிப் போய்விட்டார்.

பிரம்மச்சாரி வேதாந்தம்

நான் ஏன் இன்னும் பிரம்மசாரியாக இருக்கிறேன்? இக் கடும் பிரச்னை சிறிதுகாலம் வரையில் எனது சொந்த குடும்ப விவகாரமாக இருந்தது. பிறகு எனது நண்பர்கள் பலருக்கு இது கவலை கொடுத்தது. சமீபத்தில் இது ஒரு பொதுப் பிரச்னையாக ஆகிப் 'பெரிய' இடங்களில் போய் அடிபட்டது. இன்னும் சில நாட்கள் போனால் இந்தப் பிரச்னை இமயமலை எல்லையையும் தாண்டி ஜினிவா சர்வதேச சங்கம் வரையில் பிரயாணம் செய்து, ஓர் உலகப் பிரச்னையாகவே மாறி விடலாமென்று பயப்படுகிறேன். அப்படி எதுவும் ஏற்படுவதற்குமுன் நானே அதைத் தீர்த்துவிடத் தீர்மானித்து விட்டேன்,

ஆம். நான் இன்னும் பிரம்மசாரிதான்; எனக்கு வயது நாற்பதுதான் ஆகிறது. இதை நான் மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் சொல்லிக் கொள்கிறேன். இதுவரையில் எனக்குக் கலியாண மாகவில்லை; இனி ஆகப் போகிறதென்றும் நான் எதிர்பார்க்கவில்லை; ஆகவேண்டும் என்ற கவலையும் எனக்கு இல்லை.

ஆனால் இக் கவலை ஆதி நாள் முதற்கொண்டு என்னைத் தவிர பாக்கி எல்லோருக்கும் இருந்தே வருகிறது. எனது குடும்பத்தார் நான் சிறு பைய

னுக இருந்த காலத்திலிருந்து செய்யாத முயற்சி பாக்கி யில்லை. அது ஒன்றும் பலிக்காமற் போனதற்கு முழுப் பொறுப்பும் என்னுடையதுதான்.

எனது இருபதாம் ஆண்டிலிருந்து எனது அத்தி யந்த நண்பர்களே என் விஷயத்தில் ஓரளவு சிரத்தை காண்பிக்கத் தொடங்கினர்.

'ஏண்டா, எப்போ கலியாணச் சாப்பாடு போடப் போறே?' என்று அரைப் பரிகாசமாகவும், விருந்தில் முழு விசுவாசத்துடனும் கேட்கலானார்கள்.

இவர்கள் வாயில் மண்ணை வெட்டி அடித்து— இவர்கள் எதிர்பார்த்த விருந்தைப் போடாமலே முப் பது வயது வரையில் தபாய்த்து விட்டேன்.

வயது முப்பதுக்கு மேல் எனது ஆப்த நண்பர்கள் விருந்தை மறந்துவிட்டார்கள். ஆனால் என்னுடைய வாழ்க்கை இரகசியங்களை அறிய வெகு ஆவல்கொண்டு அதே விசாரமாக என்னைச் சூழ்ந்து அலைந்தனர். நான் 'ஒரு கால்கட்டுக் கட்டிக்கொண்டு' அவர்களைப்போல் சுகமாக (?) வாழவேண்டும் என்பது அவர்களது உன் னத நோக்கம் என்பதைப் பலமுறை காது புளிக்க என்னிடம் வற்புறுத்தி வந்தனர்.

'இதோ பார். வயசோ உனக்கு ரொம்ப ஆச்சு. இனிமே இப்படி இருப்பது நன்னா இல்லை......நான் அனாவசியமாக உன் சொந்த விஷயத்தில் தலையிடுவதாக 'மிஸ்டேக்' பண்ணிக்காதே. என்னமோ தெரிஞ்ச தோஷம் சொல்லவேண்டியது என் 'டூட்டி' என் பார்கள்.

"கிழவனாய்ப் போயிட்டா நாளைக்கு உனக்கு எவன் பெண் கொடுப்பான்?' என்று என்னுடைய

நெருங்கும் விருத்தாப்பியத்தைச் சுட்டிக்காட்டி, தங்களது 'டூட்டி'யைச் சரிவர 'டிஸ்சார்ஜ்' பண்ணிப் போனார்கள் பல நண்பர்கள். கிழவனாகப் போனால் கலியாணத்திற்கு 'சான்ஸ்' அதிகம் என்பதை அன்றன்று வரும் பத்திரிகை விவரங்களிலிருந்து ஆதாரம் எடுத்துக் காண்பித்தேன்.

என்னுடைய மனதிற்குள் நுழைந்து ஆராய்ச்சி செய்ய வெகுவாக சிரமப்பட்ட நண்பர்கள் அதிகம். இவர்கள் வருவார்கள், ஒவ்வொருவராக. தங்களுக்கு இது விஷயத்தில் யாதொரு 'இண்டெரெஸ்டு'ம் இல்லை என்று முன்னெச்சரிக்கை செய்து விடுவார்கள். பிறகு எனது ஹிருதய கமலத்தை அவர்கள் நேத்ராரவிந்தத்தின் முன் வேறு யாருக்கும் தெரியாமல் பரம இரகசியமாக விகசிக்கச் செய்யுமாறு வேண்டுவார்கள்.

'இதோ பார். உன்னைப்பற்றி எனக்குத் தெரியும். நீ மற்றவர்களைப்போல் இல்லை. உன்னுடைய குணம், சரிதை, எல்லாம் மிக ஒழுங்கானதுதான். உனக்கு உன்னத இலட்சியங்கள் இருக்கலாம்...ஆனால் உன் மனதை உடைத்து என்னிடம் சொல்லேன். அல்லது உன் மனதில் வேறு எதையாவது, யாரையாவது நினைத்துக்கொண்டு உருகுகிறாயா? யார்மீதாவது காதல்கொண்டு அது நிறைவேற இடையூறு இருக்கிறதா? அப்படி ஏதாவதிருந்தால் நிஜத்தைச் சொல்; என்னாலான ஒத்தாசை நான் உனக்காகச் செய்கிறேன் அப்பா! ஆனால் உன்னை இப்படிப் பார்ப்பது ரொம்பப் பரிதாபமாக இருக்கிறது. என்னதான் வைத்திருக்கிறாய், உள்ளே? சொல்லேன்' — இந்த நண்பர்கள்

என் மனதைக் கோடாலி கொண்டுவந்து பிளந்து பார்க்காமல் விட்டதும் நான் செய்த புண்ணியமே.

இத்தகைய நண்பர்கள் என்னிடம் எதிர்பார்த்ததெல்லாம் கேவலம் ஒரு ரஸமான காதல் கதை. நான் ஒரு கன்னிகைமீது மையல்கொண்டு மயங்கித் தயங்கி உருகுவதாகவும், அந்நங்கை எனக்கு எட்டாத தூரத்தில் உப்பரிகையில் உலாவிக்கொண்டிருப்பதாகவும், அவளைக் கண்ட எனது நேத்திரங்கள் மற்றெந்தப் பெண் ஜடத்தையும் பார்த்துச் சகிக்காதென்பதாகவும், என் ஹிருதயமே அப் பெண்மணியின் பாதாரவிந்தத்தில் அடைக்கலம் புகுந்துவிட்டதால் என் சரீரத்தில் அந்த ஹிருதயமிருந்த ஸ்தானம் சூன்யமாக இருப்பதாகவும்—இப்படி யெல்லாம் சொல்லி எனக்காக விசனப்பட்டுமிருப்பார்கள். அம்மாதிரி சந்தர்ப்பம் அவர்களுக்கு அளிக்காதது என் குற்றமல்ல. அத்தகைய மோஹினி யாரும் எனக்கு அவ்வாறு சொல்லியழ அவகாசம் கொடுக்காமல் ஏமாற்றி விட்டாளே, அந்தப் பாவி தலையில் அந்தப் பாவம்.

இப்படியாக இன்னும் பத்து வருஷமும் தப்பித்து எனது நாற்பதாவது ஆண்டில் இப்போது வந்து சேர்ந்திருக்கிறேன். இன்னும் கொஞ்சநாள் போனால் நாற்பத்தொன்றுக்குப் போய்விடுவேன். இப்போது எனது சிநேகித கணங்களும், உலகத்தாரும் என்னை ஒருவிதமாகக் கண்ணைச் சாய்த்துக்கொண்டு பார்க்கிறார்கள். நான் அவர்களைக் கடைக்கண்ணால்கூடப் பார்ப்பதில்லை.

'என்னமோ போகிறான்; அவன் தலைவிதி... அவன் சங்கதி என்னமோ ஸார் பெரிய மர்மமாகத்தா

னிருக்கு...அவனைப் பற்றி என்னமோகூடப் பேச்சு இருக்கு...அவனுடைய டாக்டர் ரகசியமாகச் சொன்னு ராம், கலியாணம் பண்ணிண்டாப் பூடுவேன்னு...' இப் படியாக என்னைக் கதாநாயகனுகக் கொண்ட பல மர் மக் கதைகள் தோன்றியிருக்கின்றன. இப்போது என் னுடைய நண்பர்கள் என்னை நேரில் கேட்டு விஷயங்கள் தெரிந்துகொள்ளும் வழக்கத்தை விட்டுவிட்டார்கள். அவர்களுடைய கற்பனு சக்தியும், சூட்சும திருஷ்டி யுமே அவர்களுக்குப் பேருதவி செய்கின்றன.

இன்னும் சில நண்பர்கள் எனது நன்னடத்தை யிலும், ஆத்மீக சக்தியிலும் பெரும் நம்பிக்கை வைத்த வர்களாக இருந்தார்கள்.

'நீ என்ன, நித்ய பிரம்மச்சாரியாக இருப்பதாக விரதம் பூண்டுவிட்டாயா? அப்படியாகிலும் ஒரு வழியாகச் சொல்லிவிடு' என்று கண்டிப்பாய்க் கேட் டார்கள். சன்னியாசம் வாங்கிக்கொள்ளப் போவதாக நான் பிரமாணப்பத்திரம் எழுதிக் கொடுத்தாலொழிய சிலர் தூங்கமாட்டார்கள் போலிருந்தது. இம்மாதிரி மனேவேதனையிலிருந்து அவர்களை விடுவிப்பதற்காக, ஒரு சமயம், சில நண்பர்கள் இப்படிக் கேட்கும்போது 'ஆமாம்; கண்டிப்பாகத்தான் சொல்லிவிடுகிறேன், நான் பிரம்மசாரியாகவேதான் இருந்து சாகப்போகி றேன்' என்று உறுதி கூறினேன். மறுநாள் எனக்கு ஒரு பெரிய பார்ஸல் வந்தது. அதில் இரண்டு காஷாய வஸ்திரங்களும் ஒரு திருதண்டமும், ஒரு கமண்டல மும், கீழ்க்கண்ட சீட்டும் இருந்தன:

'உன்மேல் அதிக வாஞ்ஜையுள்ள உனது நண்பர் களிடமிருந்து—துச்சமான இவ் வில்லற வாழ்க்கையி

னின்று தப்பி, தூய துறவறம் பூண இருக்கும் உனக்கு எங்கள் மனமார்ந்த ஆசிகள்—எங்கள் ஆசிக் கறிகுறியாக இத்துடன் வரும் சாமான்கள் உனக்கு உதவும் என்று நம்புகிறேம்.'

ஆனல் ஒன்றுமட்டும் நிச்சயமாகத் தெரிகிறது. உலகம் என்மேல் பிரமாதமாக அக்கரை எடுத்துக் கொண்டிருக்கிறது. சதா சர்வசதா என்னையே பற்றி நினைந்து வருந்துகிறது. என் பேச்சேதான் அதற்கு உணவும் உயிரும் என்றுகூட நான் சொல்லத் தயார். மொத்தத்தில் என்னுடைய பிரம்மசாரித்துவம், கலியாணம் இவ்விரண்டு சொந்த விஷயங்களும், சமதர்மக் கொள்கைப்படி பொது உடைமையாகப் போய் விட்டன.

நான் ஏன் பிரம்மச்சாரி?

நான் ஏன் இன்னும் பிரம்மசாரி ?

சரியான கேள்விதான். 'நான் ஏன் பிரம்மசாரி?' ஐயா. மிஸ்டர் உலகம்! நான் இந்த வயதுவரையில் பிரம்மசாரியாக இல்லாமல், மற்றவர்களைப்போல் இளம் வயதில் சமர்த்தாகக் கலியாணம் கட்டிக் கொண்டு பிள்ளைகுட்டி பெற்றுக்கொண்டு (பேரன் பேத்தி எடுக்கிற நாளாயிற்று என்று ஒரு நண்பர் என்னை நினைவூட்டுகிறார்!)—'சுகமாக' இருந்துவிட்டிருந்தேனானல், மிஸ்டர் உலகம் ஸார், நீர் என்னைப் பற்றி ஓர் இம்மி நினைத்திருப்பீரா. சொல்லும் ஐயா நிஜத்தை ?

நான் ஒருவன் இருக்கிறேன் என்ற ஞாபகம் உமக்காகட்டும் எனது ஆப்த நண்பருக்காகட்டும் எனது ஒன்றுவிட்ட மாமாவுக்கு அத்தங்கார் அகத்துக் காரருக்காகட்டும் இருந்திருக்குமா ?

பெரிய பெரிய தலைவர்கள் எல்லாம்கூட ஜெயிலுக்குப் போய், பல்லை உடைத்துக் கொண்டு, தடியடி பட்டு, பட்டினி கிடந்து, பத்து வருஷம், இருபது வருஷம்

என்று உழைத்து உழைத்து, ஹார்ட் பெய்லியூர் வந்து பிராணனை விட்டு, ஊர்ஊராய்ச் சுற்றித் திரிந்து மேடைகள் மேலேறி தொண்டைத்தண்ணீர் வற்றக் கத்திக் கதறி, பத்திரிகாசிரியர்கள் தயவை எதிர்பார்த்து—பிறகுதான் பிராபல்யம் பெறவேண்டியிருக்கிறது. என்னைப் பாருங்கள். சௌக்கியமாக வீட்டில் உட்கார்ந்தவண்ணம் என் பெயர் தெரிந்த, தெரியாத இடங்களில் எல்லாம் அடிபடுகிறதா இல்லையா ? இவ்வளவு எளிதில் கீர்த்தி சம்பாதிக்க, நான் கலியாணம் என்ற படுகுழியில் இறங்கியிருந்தால் முடியுமா ? உங்களைத்தான் மிஸ்டர் உலகம். ஒரு வார்த்தை கேட்கிறேன். பேச்சு மூச்சுக் காணோம் ?

இதெல்லாம் போகட்டும். நீங்கள் சொல்கிற படியே, அந்த சம்சார சாகரத்தில் விழுந்துவிட்டேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். இப்போது எனக்கிருக்கும் கவலையற்ற நிச்சிந்தை வாழ்க்கை இருக்குமா?

இதோ நான்பாட்டுக்கு நான் ஒரு சின்னவீட்டில் குடியிருக்கிறேன். அதிலுள்ள இரண்டு அறைகளும், ஒரு பாத்ரூமும், ஒரு சின்ன சமயலறையும், ஒரு வராந்தாவும் எனக்குப் போதும். 'அவள்' வந்தால் இந்த வீடு சரிப்படுமா ? நாற்காலி, மேஜை போட ஹால் வேண்டும் ; பாத்திரம் சாமான் வைக்க அரங்குள், ஒன்று வேண்டும். பெட்டி பேழை, நகை நட்டு, இவைகளைப் பத்திரமாக வைக்க காமிரா உள்ளு ஒன்று வேண்டும், தனிமையாக சிங்காரித்துக்கொள்ள (நாளைக்கு மூன்று தரமாவது) ஒரு கண்ணாடி அறை (Dressing Room) வேண்டும். தொட்டில் மாட்டக் கூடம் வேண்டும். கால் நீட்டிக்கொண்டு, காற்றாட

நாற்காலியில் சாய்ந்து நாவல் வாசிக்கத் தாழ்வாரம் வேண்டும். இப்போது நான் கொடுக்கும் பதினைந்து ரூபாய் வீட்டு வாடகை ஐம்பது அறுபது என்று பிரமோஷன் ஆகிவிட்டால், நான் எங்கே போவது?

இப்போது நான் வீட்டில் இரண்டு வேலைக்காரர் கள் வைத்துக் கொண்டிருக்கிறேன். அவர்கள் சம்ப ளம் இரண்டும் சேர்ந்து பதினைந்து ரூபாய்தான். வீட்டோடு கிடக்கிறார்கள். எனக்கு வேண்டிய, சமை யல் முதல் வீட்டை சுத்தமாக வைத்துக்கொள்வது வரையில், சகல பணிவிடைகளும் செய்கிறார்கள். நான் திருப்தியடைந்து வாழ்கிறேன். அவர்களும் சந்தோஷ மாகத்தானிருக்கிறார்கள். இரண்டுபேரும் வயதுப் பையன்கள்.

'அம்மா வந்தால் இந்த சமாதானமான கிருக தர்மம் நிலைத்தோங்குமா? முதலில் சமையற்காரன், தோட்டக்காரனைத் தவிர ஆண்கள் வீட்டில் வேலை செய்ய முடியுமா? பெண் வேலைக்காரிகள் (பெண் வேறு, வேலைக்காரி வேறாக—பெண்பால் இரட்டிப்பதைப் பற்றி அஞ்சாதீர்கள்—உங்களுக்கென்ன அச்சம்? எனக் கல்லவா அச்சம்?) வீட்டில் புகுத்தப்படுவார்கள். இவர் கள் கட்டாயம் கிழவிகளாகத்தானிருக்க வேண்டும். 'அம்மா'வுக்கு இல்லாவிட்டால் பிடிக்காது. அப்ப டித்தான் வருகிறார்களே, 'அம்மா இஷ்டப்படி வேலைக் காரர்கள் நடந்து கொள்வார்களா? மாட்டவே மாட் டார்கள். மாதம் ஒரு சமையற்காரன், இரண்டு மாதத் திற்கு வீடு பெருக்கும் கிழவியொருத்தி, மூன்று மாதத் திற்கு ஒரு தோட்டக்காரன், நாளைக்கு ஒரு பால்காரன், வேளைக்கு ஒரு டிரைவர் (கார் மாமனார் வீட்டிலிருந்து

பரிசளிக்கப்பட்டால்)—இப்படியாக மாற்றங்கள் ஏற்பட வேண்டியிருக்கும். இதற்கென்றே ஒரு 'ஹோம் கெஜட்' தினம் பிரசுரித்து மாற்றல்களைக் குறிப்பு வைத்துக் கொள்ளவேண்டும். போதாதற்கு அவர்களை 'டிஸ்மிஸ்' செய்யும் உரிம 'அம்மா'ளுடையது. நானோ மாதச் சம்பளக்காரன். பாங்கியில் எப்போதும் பணம் போட்டு வைப்பவனல்ல. பாங்கி அக்கௌண்டு என்று இப்போது பேருக்காவது வைத்திருக்கிறேன். கிருகஸ்தாசிரமத்தில் அந்த ஜம்பம் எல்லாம் முடியாது. ஊரான்கிட்டே பணத்தைக் கொடுத்துவிட்டு விழிப்பதற்கு விடுவாளா கிருகலக்ஷ்மி? 'ஹோம் ஸேவிங்க்ஸ் பாங்கி அகௌண்டு' வைத்துக்கொண்டே தரவேண்டும். இந்தச் சங்கடத்தில் மாதம் நடுவில் டிஸ்மிஸ் செய்யப்பட்ட வேலைக்காரர்கள் சம்பள பட்டுவாடா எப்படிச் செய்வது?

வீட்டு விசாரம் நமக்கென்ன, 'ஹோம் டிபார்ட்மெண்ட்' இருக்கிறது பார்த்துக்கொள்கிறது என்று சுயேச்சையாக வெளியில் இப்போது சுற்றுவதுபோல் சுற்ற முடியுமா? இப்போது நான் பாட்டுக்குக் காலையில் எட்டு மணிக்கு எழுந்திருக்கிறேன். காப்பி சாப்பிட்டதும் கொட்டாவி விட்டுக்கொண்டு, சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டு பேப்பரைப் புரட்டுகிறேன். நாயர் வெந்நீர் எடுத்து வைத்ததும், முக க்ஷவரம்

செய்துகொண்டு ஸ்நானம் செய்கிறேன். சாவகாசமாகச் சாப்பிடுகிறேன். பிறகு அரை மணி ஓய்வு எடுத்துக்கொள்கிறேன்; நாவல் இருந்தால் படிக்கிறேன். பிறகு டிரஸ் மாட்டிக்கொண்டு என்னுடைய ஆபீஸுக்குப் பத்து மணிக்குப் போகிறேன். மத்தியானம் டிபன் அங்கேயே ஹோட்டலில் சாப்பிடுகிறேன். ஐந்து மணி அடித்ததும் 'பிம்மசாரி கிளப்' ஒன்று இருக்கிறது. அங்கு போகிறேன். சீட்டோ, டென்னிஸோ, பில்லியர்ட்ஸோ இரவு ஒன்பது மணி வரையில் ஆடுகிறேன். பிறகு சிநேகிதர்கள் கூப்பிட்டால் பீச்சு கீச்சுக்குப் போகிறேன். பிறகு வீட்டிற்கு வருகிறேன். பசித்தால் சாப்பிடுகிறேன். இல்லையானல் தூங்கப்போகிறேன். வாரம் இரண்டு முறை தவருமல் ஸினிமாவுக்குப் போகிறேன்; இரவு ஒரு மணிக்கு வீட்டிற்கு வருகிறேன். ஹாய்யாகப் படுத்துத் தூங்குகிறேன். ஞாயிற்றுக்கிழமையானல் யாராவது சிநேகிதர் வீட்டுக்கு சாப்பிடப் போய்விடுவேன். நாள் முழுவதும் வெளியில் கழிக்கிறேன். சாயங்காலம் பாட்டுக்கச்சேரிக்கு விஜயம் செய்கிறேன். நான் மெம்பர் இல்லாத சங்கீத சபா கிடையாது.

இதே கிருகஸ்தனுக நான் இருந்தால் இவ்வளவு சுதந்திரத்துடன் ஒருவன் வாழ்க்கை நடத்த முடியுமா? கேட்கிறேன். எந்த கிருகஸ்தனுவது என்னைப்போல் இவ்வளவு குஷாலாக வாழ்க்கை நடத்துகிருர் என்று தைரியமாக தலை தூக்கிச் சொல்லட்டும்.

கிருகதர்மிணியுடன் வாழ்க்கை நடத்துகிறேன் என்று வைத்துக்கொள்வோம் முதலில் காலை எட்டு மணி வரையில் தூங்கமுடியாது. 'என்ன தூக்கம் வேண்டியிருக்கு நாசமாப்போன தூக்கம்...அதான் தூங்கி வழியறதே வீடு...' என்ற உதய ராகம் காதில் கேட்பதற்கு முந்தியே எழுந்திருக்க வேண்டும்; வரப் போகும் கிருகலக்ஷ்மி அவள் 'அக்கா'ளிடம் ஏதாவது குணங்களை கடன் வாங்கி வந்திருப்பாளானால் காலங் கார்த்தாலே, விடியுமுன், அலாரம் வைத்து எழுந்து, வெந்நீர் அடுப்பு மூட்டி, காப்பி போட்டுவிட்டு, நானே திருப்பாவைச் சாற்றி அம்மனைத் திருப்பள்ளியெழுச்சி செய்து, உதய ஆராதனை நடத்தவேண்டி வரும். இவ்வளவு செய்தும் 'காப்பியில் சர்க்கரை ஜாஸ்தி' சிக்கு நாற்றம், பால் தண்ணி, இப்படிப்பட்ட புகார் களைக் கேட்டுக்கொண்டு சும்மா இருக்க வேண்டும். இந்தச் சங்கடம் நமக்கு எதற்கடா அப்பா! இந்த சம் சாரமும், கிரகசாரமும்!

ஆபீஸுக்கு ஆற அமற சாப்பிட்டுவிட்டுப் போனோம் என்றிருக்குமா? பத்து மணிக்கு சாப்பிட உட்கார்ந்தாலும், 'என்ன பறப்பு? கவுணர் உத்தி யோகம் பாழைபோறதாக்கும்? அஞ்சு நிமிஷம் மின் னேப் பின்னே ஆனால்தான் என்ன? பிறத்தியாரும்—(இது சுயசரிதம்)—மனுஷாள்தானே? இறக்கை கட் டிண்டு பறப்பாளா?' என்ற சொல்விருந்தில் திருப்தி யடைய வேண்டும்.

சோறு வேண்டாம் என்று தொலைந்தாலும் ஆபத் தாக முடியும். அன்று முழுவதும் அதன் பின்னர்

நாளும், உண்ணுவிரதம், சத்தியாக்கிரகம் முதலிய தீவிர இயக்கங்கள் வீட்டில் தோன்றும்.

சாயங்காலம் கிளப்பு கிளப்பு என்கிற பேச்சை மூட்டை கட்டி வைத்துவிட வேண்டியதுதான். என்னை நேரில் வைதாலும் நான் பொறுக்கத் தயார்; ஆனால் என்னுடைய கிளப்பு, அதன் காரிய தரிசி, அங்கத்தினர்கள் எல்லோரையும் என் குடும்ப வாழ்க்கையில் கொண்டுவந்து நிறுத்தி வசைபுராணம் பொழிவதென்றால் என்னால் சகிக்க முடியாது.

அல்லது 'மிஸஸ்'ஸும் ஒரு கிளப்பைப் பார்க்கப் போய்விடலாம். சம உரிமை கொடுப்பதில் எனக்கு ஆட்சேபமில்லை. ஆனால் வீட்டுக்கு நான் காவலாகக் கண்டிப்பாக இருக்க முடியாது; தொட்டிலாட்டும் பழக்கம் சுட்டுப் போட்டாலும் எனக்கு வராது.

ராத்திரி வேளையில் என்னிஷ்டம்போல் வீட்டுக்கு வர முடியுமா? கதவடைப்பு முணுமுணுப்பு முதலிய நிர்ப்பந்த முறைகளுக்கு உள்ளாக வேண்டும். இரவில் எனக்குப் பத்துப் பதினோரு மணிக்கு முன் தூக்கம் வருவதில்லை. தூங்காமல் வெளியில் காலம் கழிக்கலாம்; ஆனால் வீட்டிற்கும் வந்து, தூக்கமும் வரவொட்டாமல் அடித்தால் எனக்கும் கோபந்தான் வரும். மனிதனுக்கு வாழ்க்கையில் நித்திரை ஒன்றுதான் கடவுள் கொடுத்திருக்கும் மதிப்புயர்ந்த வரன். அதைப் பறிகொடுப்பதில் எனக்கு இஷ்டமில்லை.

நான் பிரம்மசாரியாயிருப்பதால் இப்போது எனக்கு உள்ள தொழிலிலும், வருமானத்திலும் திருப்தியடைந்து ஜீவனம் நடத்துகிறேன். என்றும் சுகஜீவனம் நிலைத்திருந்தால் போதும்.

குடும்பத் தொல்லை வந்தால் அவ்வாறு திருப்தியுடன் இருக்க முடியுமா? குடும்பம் விருத்தியாக ஆக அதற்குத் தகுந்தாப்போல் சம்பளமும் விருத்தியடைய வேண்டும், வருஷத்திற்கு ஒரு முறையாவது சம்பளம் உயராமல் இருந்தால் மன வருத்தம். தவிர, வருஷத்திற்கு நாலு புதுப்புடவை, மூன்று ஜோடி புது வளையல்களாவது மாற்றுமல் எந்த ஸ்திரீதான் திருப்தியடைய முடியும்?

இப்போது நான் உற்றார் உறவினர் தொல்லையில்லாமல் நிம்மதியாகக் காலட்சேபம் நடத்துகிறேன். என் வீட்டில் பெண்ணு, பிள்ளையா, குட்டியா? தடிப்பிரம்மசாரி வீட்டிற்கு யார் வருகிறுர்கள்? இது எனக்கு க்ஷேமமாக இருக்கிறது. 'குடும்பம்' என்று ஒன்று வாய்த்துவிட்டால் அவ்வாறு இருக்க முடியுமா? 'அவள்' ஊர் கோடி வீட்டுப் பாட்டியின் பரலோகப் பிராப்தி முதல், மைத்துனனுக்கு மச்சினி தங்கையின் குழந்தைக்கு ஆண்டு நிறைவு வரையில் நம் கையைத்தான் கடிக்கும்.



'ஒரு நல்லது பொல்லாத்துக்கு வேண்டியவாள் இன்னு கொண்டாடாமே இருக்க முடியுமோ... நாளைக்கு நம்ம வீட்டில் கலியாணம் கார்த்தி...யார்

சீந்துவாள்?'... இப்படிப்பட்ட கவலை நிறைந்த வார்த்தைகள் நம் காதில் விழும்... அது கிருக தர்மம்.

'அவள் உபத்திரவுத்துக்காகக் கலியாணம், கார்த்தி, கல்லெடுப்பு எல்லாவற்றிற்கும்தான் ஒழிகிறோமே. சாதாரண நாளில் ஏகாந்தமாக நாம் ஒரு நாள் ஸினிமாவுக்குப் போகணும் என்றால் சாத்தியமா?'

'என்ன நித்தியம் சினிமா சினிமான்னு அந்த எழவெடுத்த சினிமாவிலே என்ன வெச்சுருக்கு? வீட்டிலே குழந்தைக்கி ஜொரம்...நேக்கு ஜொரம். இதோ வந்தேன் வந்தேன் என்றிருக்கு'...... இப்படி ஒருவகைப் பாடம். அல்லது அன்று என்னுடைய நண்பர் ஒருவருக்கு நேர்ந்த கதி எனக்கும் நேரிடலாம். அன்றிரவு பத்து மணிக்கு அவர் வீட்டு வழியாகப் போய்க்கொண்டிருந்தேன். கடும் கிருகஸ்தர் அவர்; கிருகஸ்தாசிரமத்திற்குப் பூராவும் கௌரவமளித்தவர். வருஷத்திற்கு ஒரு பிரஜையை இந்த துர்ப்பல நாட்டிற்கு ஈன்று உதவி புரிகிறவர். அவர் திண்ணையில் பெரிய ஜமக்காளத்தை விரித்து கிரகஸ்தாஸ்ரமத்தில் பெரிதும் ஈடுபட்டிருந்தார். தம்முடைய அரை டஜன் வம்ச விருத்திகளை ஒன்று மாற்றி ஒன்றாகத் தட்டித் தூங்கப் பண்ணிக் கொண்டிருந்தார். சில சமயம் இரண்டு கை, ஒரு குரல் இவற்றைச் சேர்ந்தாப்போல் உபயோகிக்க நேர்ந்தது. இந்த வேடிக்கையை நான் கண்டு, 'ஏன், பஞ்சு ஐயர்வாள். ஆத்தில் உடம்பு சரியாயில்லையோ?' என்று விசாரித்தேன்.

உடனே அவர் வாய்விட்டலறிய வார்த்தைகள் எனக்கு இன்னும் காதில் ஒலிக்கின்றன. பொதுவாக காலத்தின் கோலத்தையும், கலியின் கொடுமையையும்

எடுத்துரைத்து, டாக்கி சொந்தக்காரர்களை வாயில் வந்தபடி—(அவர் சொன்னதை இங்கே சொன்னால் டாக்கிக் கம்பெனிகள் படம் தயாரிப்பதை நிறுத்தி தஸ்தாவேஜிகளைத் தூக்கிக்கொண்டு 'டாமேஜு ஸூட்'டுக்குக் கிளம்பவேண்டி வரும்)—இழிவாகப் பேசினார். "அநியாயம் சார்......சுத்த மோசமாகப் போச்சு...சம்சாரிகளைக் கெடுக்கறத்துக்கூன்னே இந்த டாக்கி கண்டுபிடிச்சிருக்கான், ஸார்" என்று வயிற்றெறிச்சல் பூராவும் அவிழ்த்துவிட்டார். அவருடைய சம்சாரம் 'பக்த குசேலர்' டாக்கி பார்க்கப் போயிருப்பதாகக் கண்டுபிடித்தேன். இவர், வீட்டில் குசேலோபாக்கியானம் செய்துகொண்டிருந்தார் பாவம்.

இந்த கிருகஸ்தருடைய கதியும் எனக்கு வேண்டாம்...ஸ்வாமி.

என் கிருகலக்ஷ்மி

நான் பிரம்மசாரி தர்மத்தை அனுஷ்டிப்பதைக் கண்டு சகியாத கிருகஸ்த உலகம் சொல்லுகிறது!

'உனக்கு என்னடா பயலே தெரியும், சம்சார சுகம் என்பது? அனுபவித்தால் அல்லவா தெரியும்?'

அண்ணு! கிரகஸ்தண்ணு! ரொம்ப வந்தனம். அப்படி எனக்குத் தெரியாத சுகம் ஒன்றும் வேண்டவே வேண்டாம், ஸ்வாமி. தெரிந்த இந்த சுகத்தையே அனுபவிக்கிறேன் போதும்.

நான் பிரம்மசாரியாக இருப்பதால் உலகம் வீழ்ந்து விடவில்லையே? கூவம் நதியில் சென்னைமா நகரத்தின் குடி முழுகிப் போய்விடவில்லையே?

இப்படி நான் சொல்வதற்குள் மகா-ா-ா-ஸ்ரீ அனுபவமும் குறுக்கிடுகிறார்.

உலகத்தில் பிறந்தவர்களுக்கு விவாகம் என்பதோ, அதற்கு ஈடான ஓர் அனுபவமோ இல்லாமல் இருக்க முடியாதென்பது அவருடைய கட்சி. இதற்கு தேக சாஸ்திரம், மனோ தத்துவம் எல்லாவற்றையும் ஆதார மாகக் கொண்டு வந்து நிறுத்துகிறார்.

பாவம்! பதினைந்து வயதிலிருந்தே கிரகஸ்த தர் மத்தைப் பரிபூரணமாக ஏற்றுக்கொண்ட அனுபவஸ் தர், பிரம்மசரியத்தில் நம்பிக்கை வைப்பது கஷ்டம் தான். என்னைப்போல் நாற்பது வயது வரையில் பிரம்மசாரியாக இருந்து, அந்த அநுபவத்தை, அவர் என்ன கண்டார்?

'ஸ்திரீ சகவாசமே இல்லாத மனித வாழ்க்கை பாலைவனத்துப் பனைமரம் போல்தான்' என்று ஸ்ரீயுத மனோ தத்துவம் சொல்கிறார். என்னைப் பொறுத்த வரையில் அப்படி ஒன்றும் என் வாழ்க்கை சூன்யமாகி விட்டதாகத் தெரியவில்லை. எனது பாதி ஆயுள் வரையில் என்னைப் பராமரித்து வந்த எனது தாயாரைவிட வேறு பாக்கியம் நான் தேடவில்லை. போதாததற்கு எனக்கு ஒரு தமக்கை, மூன்று தங்கைகள், ஆறு ஒன்று விட்ட தங்கைகள் இவ்வளவு பேர்கள் உள்ளூரிலேயே இருக்கிறார்கள். பொழுது போகாவிட்டால் இவர்கள் வீட்டுக்குப் போனால் எனக்கு ராஜ மரியாதைதான்.

ஆகவே என்னுடைய வாழ்க்கையில் ஸ்திரீ வாசனை இல்லாததால் நான் ஒன்றும் உடல் மெலிந்து பைத்தியம் பிடித்துப் பாயைப் பிறாண்டவில்லை. ஒரு ஸ்திரீ பக்கத்தில் இல்லாததால் அவ்வாறு சஞ்சலப்படுகிறவர்கள் கட்டாயம் ஒரு கலியாணம் இல்லை, ஆறு கலியாணம் வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும்; அப்படிப்பட்டவர்கள் விஷயத்தில் அது அவசியம் தான். எனக்கு ஏன் அந்தத் தண்டா?

'இருந்தாலும் ஒரு கிருகலக்ஷ்மி வேணுமடா அப்பா' என்று என்னுடைய ஒன்றுவிட்ட அத்தை கவலைப்படுகிறாள். நான் அந்த அத்தைப் பாட்டிக்குச் சொல்வது என்னவென்றால், என் கிருகத்தில் லக்ஷ்மிக்குக் குறைவே கிடையாது. என் 'ரூமில்' வந்து பாருங்கள். லக்ஷ்மி அங்கேயே குடிகொண்டிருக்கிறாள். எங்கள் தாத்தா காலத்திலிருந்து பரம்பரையாக வந்திருக்கும் அந்த ரவிவர்மா லக்ஷ்மி எங்கே போனாள்?

அதோ சுவரில் ஏறிக் குந்திக்கொண்டுதான் இருக்கிருள்.

நான் போகுமிடமெல்லாம் வருவாள்; நான் சொன்னதைக் கேட்பாள் - மற்ருெரு லக்ஷ்மி - என்னுடைய அருமை 'ஏர்டேல்' நாய் - அவள்தான் எங்கே போனுள்?

* * *

ஸ்திரீகளை ஒருபக்கம் தள்ளிவிட்டு - (பாவம்! அவர்கள் கதியும் அப்படி!) - சிசு தர்மத்தை எனக்கு எடுத்து ஊட்டுகிருர்கள் சிலர். 'வாழ்க்கையில் உள்ள சகல துக்கங்களும் ஒரு குழந்தையின் சிரிப்பில் அமுங்கிப் போய்விடும்' என்கிருர்கள் கிருகஸ்த வேதாந்திகள். இவர்கள் சொல்லுவதில் எவ்வளவு உண்மையிருக்கிறதென்பது எனக்குத் தெரியாது. ஆனல் வாதத்திற்காக இதை ஒப்புக்கொண்டாலும், இதனல் ஏற்படும் நிபந்தனைகளைக் கவனியுங்கள்:

(1) நமக்கு வாழ்க்கையில் துக்கங்கள் வரவேண்டுமாம்.

(2) அந்தத் துக்கங்களை நாம் வேறு எவ்விதத்திலும் போக்கிக்கொள்ள முடியாமலிருக்க வேண்டுமாம்.

(3) இதற்காக ஒரு குழந்தையைப் பெறவேண்டுமாம்.

(4) அந்தக் குழந்தை அழக்கூடாதாம்.

எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டாலும் கடைசி நிபந்தனை எவ்வளவு அர்த்தமில்லாதது பாருங்கள், அழாத குழந்தைக்கு யார் ஸ்வாமி ஜாமீன் கொடுப்பது?

இந்த அபூர்வக் குழந்தை விஷயமாக இன்னென்று சொல்லப்படுகிறது.

'யாழினும் குழலினும் மழலை யினிது' என்னும் ஒரு முதுமொழி 'மழ பிழ'வென்று வீசி எறியப்படுகிறது. இதை எந்த மகானுபாவன் எழுதி வைத்தாரோ தெரியாது. அவர் பெரிய வேதாந்தியாகத்தானிருக்க வேண்டும். 'அம்மா அச்சா,' 'கிச்சா ராமா ஓயிந்தா,' 'மம்மு சாப்பத மாத்தேன்,' 'அச்சு,' 'கச்சு'—இந்த மாதிரி அகராதியை ஒரு சங்கீதக் கச்சேரியாகக் கொண்டாடினாரே, அவர் வேதாந்தியல்லாது வேறென்ன? நான் அப்பேர்ப்பட்ட உயரிய வேதாந்தத்தை இன்னும் எட்டவில்லை.

முடிவாக நான் கேட்கிறேன்: பிரம்மசாரியாக இருப்பதால் நான் என்ன குறைந்து போய்விட்டேன்? ராஜாமாதிரி இருக்கிறேன். ராஜாவும் என் மாதிரிதான் இருக்கிறார். சகல சாம்ராஜ்யாதிபதியாக விளங்கும் எட்டாவது எட்வர்ட் மன்னருக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்? நான் நானாக இருக்கிறேன். அவர் சக்கரவர்த்தியாக இருக்கிறார். இவ்வளவு தானே? மற்றப்படி நாங்கள் இருவரும் நாற்பது வயது பிரம்மசாரிகள் தானே?

'அப்பேர்ப்பட்ட அந்த ராஜாவுக்கே கலியாணம் ஆகிவிடும் போலிருக்கிறதாமே. நீ மட்டும்...?'

அதென்னமோ...யார் கண்டார்கள்?

'ஓகோகோ. வந்தயா வழிக்கு? அப்படியானால்... உன் மனதிலும்...'

உஷ்...இரையாதேயும் ஸ்வாமி....ஆமாம்....என் மனதிலும்...

'ஓர் ஆசாமி...?'

ஆமாம். விடாதேயும். பிடித்துக் கொள்ளும்...

'யார் அவள்?...'

ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லக் கூடாதல்லவா? இருந்தாலும் அந்தப் பெண் தெய்வத்தைப் பற்றிச் சற்று வர்ணனை செய்கிறேன்.

நான் என்ன சொல்லப் போகிறேன். போங்கள்! ரூபத்திலும் லாவண்யத்திலுமோ கேட்க வேண்டியதில்லை. ரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமை, மோஹினி இவர்கள் எல்லோரும் சேர்ந்து வெட்கித் தலைகுனிந்து தற்கொலை புரிந்துகொண்டு விடுவார்கள், அவளைப் பார்த்தால் – அப்பேர்ப்பட்ட ரூபவதி.

குணத்திலோ...அடாடா, கேட்க வேண்டியதில்லை. தங்கம் என்றால் பத்தரை மாத்துத் தங்கம் தான். சீலத்திலோ, சுசீலை என்றால் அவளுக்கே அந்தப் பெயரை ரிஜிஸ்டர் செய்து வைத்துவிட வேண்டும்.

இப்பேர்ப்பட்ட மாதரசி மனையாளாக வாய்த்து விட்டாளென்றால், அதனால் இறுமாப்புடன் என்னை 'அது' 'இது' என்று அவமரியாதையாகக் கூப்பிடுவாளா? மாட்டவே மாட்டாள்.

'உங்களைத்தானே. உங்களைத்தானே' என்று தூணையும் சுவரையும் பார்த்துத்தான் என்னை அழைப்பாளா? அதுவும் மாட்டாள். அவ்வளவு நவீன நங்கையாயிற்றே? 'டியர்' 'டார்லிங்' என்று 'நைஸ்' ரகத்திலும் என்னைச் சேர்க்க மாட்டாள். 'பிராண நாதா' 'ஆருயிர்க் காதலரே' என்றுதான் நாடகம் நடிப்பாளா? ஊம்...ஹூம். என்னையும் ஒரு சாதாரண மனிதனைப் பாவிப்பாளே யொழிய அப்படியெல்லாம்,

இல்லாததையும் பொல்லாததையும் வைத்துக் கூப்பிட மாட்டாள்.

என் பிராண நாயகி (...பரவாயில்லை, எனக்கு இந்த இடத்தில் கொஞ்சம் 'லைஸென்ஸ்' உண்டு...) நன்ருகப் படித்த நாகரிக நாரீமணியாக இருக்கலாம்; அதற்காக 'டஸ் புஸ்ஸெ'ன்னு என் கிட்டே அனுவசியமாக வார்த்தைகளை உடைக்கமாட்டாள்; என்னைக் கொல்லைப்புறத்திலும் தள்ளிவிட மாட்டாள்.

அல்லது அப் பெண் பசு ஒரு பட்டிக்காட்டுப் பசுவாக இருக்கலாம். வீட்டிற்கு 'மாட்டுப் பெண்' என்பதற்காக மாட்டுக் கொட்டிலிலும் போய் நிற்க மாட்டாள்.

நான் சாப்பாட்டு ராமன் இல்லை. வாஸ்தவம். ஆனுல் வேளா வேளைக்கு ஒரு கவளம் வயிற்றில் விழுந்தாகவேண்டும். எனக்கு நாக்கு அதிக நீளமில்லை; இருந்தாலும், அந்தப் பருத்திக் கொட்டை தின்ற அப்பாவியைப்போல் 'அவள்' எதைப் போட்டாலும் தேவாமிர்தமாக உட்கொள்ளும் பிச்சுவல்ல. ரஸத்தில்

உப்புப் போடாமல் இருந்தால் எனக்குக் கோபந்தான்வரும். இரண்டு வேளை காப்பி கம கமவென்று இல்லாவிட்டால், அன்று என் வண்டி ஓடாது. இதை யெல்லாம் அறிந்து நடந்துகொள்ளுபவள் அந்தக் கிருக தேவி. இதற்காக அவள் அடுப்பங்கரைக் காளியாக இருப்பாளா? வீட்டிற்கு வரும்போதெல்லாம் மூக்கில் கரியும், புடவையில் எண்ணெயும்,

கையில் குழவியுமாக தேவியார் சேவை சாதித்தால் எனக்குக் கட்டோடு பொறுக்காது.

பார்வைக்கு சுசி ருசியாக இருந்தால்தானே பிடிக்கும்? அதற்காக சதாசர்வதா கண்ணுடியும், சீப்பும், குங்குமச் சிமிழுமாக அலங்கார லோலேயாக இருந்தாலும் சகிக்காது. தலே மயிர் நரைக்காமலிருக்கவும், விழுந்து விடாமலிருக்கவும் கூந்தல் தைலங்கள் எவ்வளவு வேண்டுமானலும் வாங்கிக் கொடுக்க நான் தயார். ஆனல் 'வானிஷிங்' கிரீம், முகப் பௌடர் முதலியவைகளுக்கு நான் செல்லாக் காசு கூடக் கொடுக்கமாட்டேன். விலேக்கு வாங்கின அழகு வேண்டாம் என்பதே என்து கொள்கை என்பதை யறிந்தவள் அவள்.

ஆடை ஆபரணங்களில் என் தேவதை என்ன வேண்டுமானலும், எப்படி வேண்டுமானலும் மனதைச் செலுத்தலாம். ஆனல் நான் அவளோடு புடவைக் கடைக்குப் போவேன் என்பதை ஸ்வப்பனத்திலும் நினைக்கமாட்டாள். புடவைக் கடைக்காரர்கள் கணக்குகளைத் தீர்த்து வைப்பதிலாவது அவர்கள் வியாபார விருத்தியிலாவது எனக்குத் துளிக் கூட சிரத்தை கிடையாது என்பது அவளுக்குத் தெரியும்.

என் கிருக லக்ஷிமி அணியும் ஆடைகளுக்கு என்னுடைய அபிப்பிராயம் தேவையில்லை. 'கராச்சி பேட்டு' 'கொடி மல்லிகைக் கரை' 'மேக வர்ணம்' 'கனகாம்பரம்' 'மோகனும்பரம்' 'மல்லி மொக்கு; 'தாழம்பூ' இதெல்லாம் போதாதற்கு, 'ஜில் ஜில் சதாரம்,' 'புல் புல் தாரா' போன்ற ஸினிமாப் பெயர்களையும், நக்ஷத்திரப் பெயர்களையும் நம் காதில் விழா திருந்தால் அதுவே அவள் நம்மிடம் வைத்திருக்கும் மரியாதைக்கு ஒரு பெரிய அறிகுறி.

பொம்மனுட்டி 'பாஷன்க'ளைப் பொறுத்தவரையில், எனக்கு ஒன்றும் தெரியாது. 'ஜார்ஜட்' 'ஸடீன்' 'வாயில்' எந்த இழவாயிருந்தால் எனக்கென்ன? பில் மட்டும் என் கண்ணில் படக்கூடாதென்பதுதான் என் கொள்கை. அடுத்த வீட்டு அம்மாமி, லேடீஸ் கிளப் மிஸ் கோரம், மிஸஸ் (பாரிஸ்டர் மனைவி) டமாரம் இவர்கள் என்ன 'ஜாக்கெட்' போட்டிருந்தால் எனக்கென்ன? அல்லது 'ஜம்பர்' போட்டிருந்தால்தான் என் தலையில் என்ன எழுதியிருக்கிறது? ஆகவே என் கிருக தேவதை அவர்களைத் தனது இலட்சியங்களாகக் கொண்டு பின்பற்றவே மாட்டாள்.

நகை விஷயத்தில், 'பாஷன்' ஆக தேவி இருப்பதில் எனக்கும் இஷ்டம்தான். பொன், தங்க வளையல்களில் காசைக் கொட்டிப் பாழ் பண்ணமாட்டாள். தற்கால நாகரிகத்தையொட்டி, 'பேக் லேட்', 'கண்ணுடி' 'சங்கு', 'எனமல்', 'கில்ட்' வளையல்களைத்தான் அணிவாள். இதனுல் எனக்கு அதிக நஷ்டமில்லை. மாதத்திற்கு ஒரு தரம் பழைய வளைகளை அழித்து, 'மிளகு

வளை', 'போட் வளை', 'சுண்டைக்காய் வளை', 'மின்னல் வளை', 'ஸ்வஸ்திக் வளை', 'ஜெய் ஹிந்த் வளை' என்று பண்ணிக்கொண்டு நஷ்டம் வைக்கமாட்டாள்.

*   *   *

தினசரி நடத்தையில், பெண் தெய்வமாகத்தான் நடந்து கொள்வாள். 'எங்கே போறகள்?' என்று வீட்டை விட்டுப் போகும்போது கேட்பாளா? மாட்டவே மாட்டாள். வீட்டிற்கு வந்ததும்தான், 'எங்கே போயிருந்தகள் இத்தனை நாழி?' என்று கேட்பாளா? புருஷர்கள் நடவடிக்கையில் ஸ்திரீகளுக்கு என்ன அவ்வளவு அபார அக்கரை வந்தது?

இந்தப் பெண் தெய்வத்திற்கு அடிக்கடி பிறந்த வீட்டு ஞாபகம் வரக்கூடும். அதனால் பரவாயில்லை. ஆனால் அதற்காக ரயில்வே கம்பெனிக்குக் கடன்பட்டவன் நானல்ல என்பது அவளுக்குத் தெரியும். பிறந்தகம் போன பெண்மணி நாலு மாதம் இல்லை, ஆறு மாதம் வேண்டுமானாலும் இருக்கட்டும். ஆனால் அங்கே போயும் என்னைப்பற்றி விசாரப்படமாட்டாள்.

'ஏன் கடுதாசே வரலை? விசாரமாயிருக்கு. நான் வந்துடட்டுமா?' என்று பயமுறுத்துகிறவள் அவள் அல்ல.

போன இடத்தில், 'டெம்பரேச்சர் வரது', 'மயக்கம் வந்துண்டுதானிருக்கு' என்று வியாதி சொல்லிக் கொள்ளும் தன்மையும் அவளிடம் இராது.

'அப்பா அப்படீன்னு சொல்று...அம்மா இப்படீன்னு சொல்று...' இந்தக் கதையெல்லாம் என்னிடம்

செல்லாதென்பது தெரியும். அப்பாதான் சொல்லட்டும், அம்மாதான் சொல்லட்டும், பரலோகத்திலிருக்கும் பாட்டியே சொல்லட்டும், எனக்கு என்ன வந்தது? இது தெரிந்து அவள் சும்மா இருந்துவிடுவாள்.

கடைசியாக ஒரு விஷயம்...வம்ச விருத்தியில் எனக்குக் கண்டிப்பாகக் கவலை கிடையாது. குழந்தைகள் என்றால் எனக்குக் கட்டோடு பிடிக்கிறதில்லை—அதுவும் அழுகிற குழந்தைகள் எனக்கு ஜன்ம வைரிகள். இதைத் தெரிந்தே, என்னுடன் இல்லற வாழ்க்கை நடத்த ஒப்புக் கொள்பவள், குழந்தைகளை அனுவசியமாகக் குடும்பத்தில் வரவழைத்துக் கொள்ள மாட்டாள்...

'நைஷ்டிகா. நிறுத்து போதும். ...இப்படி எல்லாம் நீ வருணித்த உன்னுடைய அந்த கிருக தேவதை ஒருத்தி இருக்கிறாளா? சொல் சீக்கிரம். இதோ பிடித்து ஓரே கட்டாக கட்டிவைத்து விடுகிறேன்' என்று மார் தட்டுகிறார் மிஸ்டர் உலகம்.

'இருக்கிறாள். இருக்கிறாள். ...'

'எங்கே?...சொல்...'

'என் மனோராஜ்யத்தில்தான்... அடாடா சொல்வதற்குள் எங்கே இப்படிக் கைவிட்டு நழுவுகிறீர்? ஸார், ஸார், மிஸ்டர் உலகம்...'

'இதோ வந்துவிட்டேன்...அந்தப் பாழாகப் போன பிரம்மாவிடம் 'டெபுடேஷன்' போய் உன் கிருக தேவதையை சிருஷ்டிக்கச் சொல்லப் போகிறேன்...'

'அட, அப்பாவி உலகமே! சிருஷ்டிக்க முடிந்திருந்தால் பிரம்மா அப் பெண் தெய்வத்தை அப்பொழுதே சிருஷ்டித்திருக்க மாட்டாரா?'



Printed by KABEER PRINTING WORKS, Triplicane, MS. 524
and Published by Tamil Pannai, Thyagarayanagar
P. I. C. No. MS. 384—1000—11—2—'47